இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் துன்பங்களும், வேதனைகளும் இருக்கத்தான் செய்கிறது. எனக்கும் அப்படிதான், என் தனிப்பட்ட வாழ்க்கையில், குடும்பத்தில் ஏகப்பட்ட துன்பங்களும் வேதனைகளும் இருக்கத்தான் செய்கிறது. அதை, நான் சமாளித்துக் கொள்வேன். அதைப்பற்றிய கவலை எனக்கில்லை. ஆனால், இந்த ஜனநாயக நாட்டில் நீங்களும் நானும், மகிழ்வுடன் வாழவும், நமக்கு ஏதேனும் அநியாயத்தை யாரேனும் இழைத்தால் நமக்கு நீதி வழங்கி காத்திடவும் இந்த ஜனநாயக நாட்டின் சக்கரவர்த்திகளான நம்மால் உருவாக்கப்பட்ட நீதித்துறையும், காவல்துறையும் தான் இன்று நமது உரிமைகளை பறித்து அநீதிகளையும், அநியாயங்களையும் இந்த மண்ணில் தூவிக்கொண்டிருக்கிறது என்பதை எனது அனுபவ ரீதியாக உணர்ந்து விட்டேன்.

இந்த மண்ணில் நடக்கும் அநியாயங்கள், அதர்மங்கள், அநீதிகள் எல்லாவற்றிக்கும் நீதித்துறையும், காவல்துறையுமே காரணம் என்பதை தகுந்த ஆதாரங்களுடன் நான் அனுபவித்த இன்னல்களை தான் இந்த புத்தகத்தின் மூலமாக தங்களிடம் முறையிடுகின்றேன். இதில், காவல்துறை என்பது கூட மிக சொற்பமான பங்குதான் வகிக்கிறது. நீதித்துறையே அத்தனை அதர்மங்களுக்கும் காரணம்! நீதித்துறை உன்னதமாக செயல்பட ஆரம்பித்தால், காவல்துறை என்ன? அரசியல்வாதிகள் என்ன? அரசாங்கம் என்ன? அனைத்தும் தர்மத்தின் பாதையில் பயணித்தே ஆக வேண்டும் என்ற நிலை தானே உருவாகிவிடும். இந்த நாட்டில் உச்சக்கட்ட பதவியில் இருக்கக்கூடிய குடியரசு தலைவர் கூட நீதித்துறைக்கு கட்டுப்பட்டவர்தான். எனவே, நீங்களும் நானும் இந்த மண்ணில் பிறந்து அனுபவிக்கும் வேதனைகளுக்கும், இன்னல்களுக்கும் நீதித்துறையே முழுப்பொறுப்பு என்பதே எனது குற்றச்சாட்டு. இந்த ஜனநாயக நாட்டின் உண்மையான சக்கரவர்த்திகள் இதை படித்துக்கொண்டிருக்கும் நீங்கள் தானே? இதோ உங்கள் இனத்தை சேர்ந்த ஒரு இதயம் உங்களிடம் நீதிக்கேட்டு துடிக்கிறது. தீர்ப்பெழுதுங்கள்.

இது புத்தகமல்ல, இந்த ஜனநாயக நாட்டின் சக்கரவர்த்திகளான உங்களிடம் நான் செய்யும் மேல்முறையீடு. நான் இங்கு குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமானது, ஆதாரப்பூர்வமானது. யாரையும் அவமானம் படுத்த வேண்டும் என்ற எண்ணமோ, அவர்களின் நன்மதிப்பை கெடுக்க வேண்டும் என்ற எண்ணமோ எனக்கு இல்லை. அதனால்தான், யாருடைய பெயர்களையும் இந்த புத்தகத்தில் நான் குறிப்பிடவில்லை. உள்ளதை உள்ளபடி தகுந்த ஆதாரங்களுடன் இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 499-ன் நான்காவது விதிவிலக்கின்கீழ் வெளியிடுகின்றேன்.

ஒரு நாட்டில் எது எப்படியிருந்தாலும் நீதி பரிபாலணம் சரியாக இருந்தால் போதும், அந்த நாட்டு மக்கள் நிம்மதியாக இருப்பார்கள். ஆனால், நம் நாட்டில் என்னையும், உங்களையும் போன்ற சாதாரண குடிமக்கள் அநியாயமாக பாதிக்கப்பட்டால் யாரிடம் சென்று முறையிடுவது? எங்கு சென்றால் நீதி கிடைக்கும்? என்பது பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது! எது நீதி? எது அநீதி? எது தர்மம்? எது அதர்மம்? எனக்கு புரியவில்லை! ஒரு நீதி மற்றொரு கோணத்திலிருந்து பார்த்தால் அநீதியாக தெரிகிறது! அதே போன்று ! ஒரு அநீதி மற்றொரு கோணத்திலிருந்து பார்த்தால் நீதியாக தெரிகிறது! திட்டவட்டமான ஒரு வரையறையை இங்கு காணமுடியவில்லை! சட்டமும் அப்படிதான் இருக்கிறது. ஒரு இடத்தில் குற்றம் என்று காட்டப்படும் செயலானது மற்றொரு இடத்தில் குற்றமில்லை என்று காட்டப்படுகிறது. இதனால்தான் ஒரே விதமான வழக்கிற்கு ஒவ்வொரு நீதிமன்றமும் வேறுப்பட்ட, விதவிதமான தீர்ப்புகளை கூறி வருகிறது. இந்தியாவில் நடப்பது சட்டத்தின் ஆட்சி என்று சொல்லப்படுகிறது. சட்டமே திட்டவட்டமாக இல்லாத நிலையில் சட்டத்தின் ஆட்சி என்பது கேலிக்கூத்தாகதானே இருக்க முடியும்?

எனது அன்பிற்குரிய உறவுகளே, நல்ல நூல்களை படிப்பதற்கு நேரம் ஒதுக்க நமக்கு நேரமில்லை. இருப்பினும் தயவுச்செய்து சற்று நேரத்தை ஒதுக்கி எனது வரிகளை முழுமையாகவும் பொறுமையாகவும் படித்து, ஒரு கனம் சற்று சிந்தித்து பாருங்கள், நாம் எவ்வளவு ஆபத்தான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதும், நமது இந்த மிக குறுகிய வாழ்க்கையை மகிழ்வோடு அனுபவிக்க வாய்ப்பேயில்லை என்பதும், நாம் ஏதேனும் மாபெரும் கொடுமையால் பாதிக்கப்பட்டால் கூட சென்று முறையிட்டு உடனடி நீதிபெற வழியேயில்லை என்பதும் புரியும். இப்படி வாழ்வது ஒரு வாழ்க்கையா? இன்னும் எவ்வளவு காலத்திற்கு நாம் இப்படியே இருப்பது?

ஒரு மிக பெரிய மாற்றம் உருவாக வேண்டும், நமது நாட்டு நீதி பரிபாலனம் உலகிற்கே முன்னுதாரணமாக திகழ வேண்டும்! ஒரு நிரபராதி அநியாயமாக ஒரு வினாடிக்கூட தண்டிக்கப்பட கூடாது! பொய் சாட்சிகள் உருவாக்க வாய்ப்பில்லா நிலை உருவாக வேண்டும்! உண்மையான சுதந்திரமும், மகிழ்ச்சியும் நம்மை ஆட்கொள்ள வேண்டும்! இந்த ஜனநாயக நாட்டில் மக்கள்தான் உச்சக்கட்ட அதிகாரிகள் என்பது நிலைநிறுத்தப்பட வேண்டும்! அதற்கு மக்கள் தகுதிப்பெற வேண்டும்! என்ற இலக்கை நோக்கி நாம் அனைவரும் ஒருமித்த கருத்துடன் பயணிக்க வேண்டும் என்பதற்காகதான் இந்த புத்தகத்தை வெளியிடுகின்றேன். நாம் முயன்றால் முடியாதது என்ன இருக்கிறது?

இதனால்தான், இதுபோன்ற அனுபவமும், நல்ல உள்ளமும், துணிவும் கொண்ட சமூக சிந்தனையாளர்களை ஒன்று திரட்ட வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. அது போன்றவர்களால்தான் நம் வாழ்க்கையை மகிழ்வான மற்றும் நிறைவானதாய் மாற்ற முடியும் என்பது எனது கருத்து. ஆனால், அதுபோன்றவர்களை நாம் அடையாளம் காண்பதுதான் கடினம். இருப்பினும், அது முடியாத காரியம் அல்ல. எனது கனவு நிஜமாகுமா? அல்லது காணல் நீராகி நான் கண்கள் மூடி விடுவேனா என்று நானறியேன். ஆனால், என் மரண படுக்கையில் என் மனசாட்சி என்னை இனி கேள்வி கேட்காது. காரணம், என் நெஞ்சறிந்த உண்மைகளை இந்த புத்தகத்தின் மூலமாக உங்களிடம் சொல்லி விட்டேன். நம் இனம் அந்த உன்னதமான விடியலை நோக்கி பயணிக்க விதைகளை தூவிவிட்டேன். நிச்சயம் அவை துளிர்த்து இந்த இனத்தை காக்கும். இந்த புத்தகத்தை நான் எழுதி முடிக்கும் போது என் இதயம் இலேசாகி அமைதி கொள்ளும் என்பது நிஜம். இனி நாம் வாழும் இந்த நாட்டில் நீதி பரிபாலனம் எப்படி இருக்க வேண்டும்? சட்டம் எப்படி இருக்க வேண்டும்? நாம் எப்படி

இருக்க வேண்டும்? அரசாங்கம் எப்படி இருக்க வேண்டும்? போன்ற எல்லாவற்றையும் நீங்கள் தான் முடிவுச் செய்ய வேண்டும்.

நமது நாட்டிலுள்ள ஏறக்குறைய எல்லா அதிகாரிகளிடமும், நீதிமன்றங்களிலும், முறையிட்டு சலித்து விட்டேன். அதனால் நான் தெரிந்துக் கொண்டது என்ன தெரியுமா? இந்த ஜனநாயக நாட்டின் சக்கரவர்த்திகளான நீங்கள் நியமித்த அரசோ, அரசு அதிகாரிகளோ, துறைகளோ செயல்படவில்லை! அவர்களால் செயல்படவும் முடியவில்லை என்பது தான். அதனால்தான், இந்த ஜனநாயக நாட்டின் உண்மையான, இறுதியான, நிகரற்ற பலம் கொண்ட உங்களிடம் கடைசியாக முறையிடுகின்றேன். இதற்கு மேல் நான் முறையிட வேறு இடம் இல்லை. தயவுச்செய்து எதிர்கால சமுதாயத்தை காப்பாற்றுங்கள்! அவர்கள் நமது இரத்தம், நமது குழந்தைகள்! அல்லவா? நம் முன்னோர்கள் செய்த தவறும், அலட்சியமும் நாமும் செய்ய வேண்டாம். என்ன செய்யலாம் என்று யோசியுங்கள்! நான் உயிருடன் இருக்கும் வரை என் கரமும் உங்களோடு இணைந்தேயிருக்கும்! காலம் வேகமாக கரைந்தோடிக் கொண்டிருக்கிறது! இணைவோம்! இணையற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்!

அன்புடன் GMR

பொருளடக்கம்

1. ரணம்-1 **விசாரணை கைதிகள் என்ற போர்வையில் அதர்மம்!**

தமிழ்நாடு காவல் துறையில் சேர்ந்து நான் பணியாற்றிய 11 ஆண்டுகள் தான் என் வாழ்க்கையையும் என் தலை எழுத்தையும் மாற்றி எழுதியது என்று சொன்னால் அது மிகையல்ல. காவல்துறை அதிகாரியாக நான் வரவேண்டும் என்ற என் தந்தையின் விருப்பமும், காவல்துறையில் பணியாற்ற நான் கொண்டிருந்த மிதமிஞ்சிய ஆர்வமும் என்னை கல்லூரி படிப்பு முடிக்கும் வரை காத்திருக்க விடவில்லை. கல்லூரியில் படித்து கொண்டிருந்த போதே தமிழ்நாடு காவலர் ஆட்தேர்விற்காக வெளியான விம்பரத்தை பார்த்து என் பெற்றோருக்கு கூட தெரியாமல் விண்ணப்பித்து விட்டேன். சுமார் மூன்று வருடங்களாக ஒவ்வொரு கட்டமாக தேர்வு நடந்தது. நான் கல்லூரி படிப்பை முடிப்பதற்கும் காவலர் தேர்வில் வெற்றிப்பெற்று பயிற்சிக்கு செலவதற்கும் காலம் மிக சரியாக அமைந்திருந்தது. அப்போது தான் என் பெற்றோருக்கே இந்த விபரம் தெரிய வந்தது. நான் எப்படியும் ஒரு பெரிய காவல் துறை அதிகாரியாக வர வேண்டும் என்று கனவு கண்டுக்கொண்டிருந்த என் தந்தை ‘‘பரவாயில்லை, எனக்கு சந்தோசம்தான்’’ என்று என்னை ஆசீர்வதித்து அனுப்பினார். நான் காவல்துறையில் சேர மேற்கொண்ட முயற்சிகளை ஒரு தனி புத்தகமாகவே எழுதலாம்.

நான் சென்னை எழும்பூரிலுள்ள இராஜரத்தினம் மைதானத்தில் காவலருக்கான பயிற்சிப்பெற்றேன். பயிற்சி அதிகாரி தொட்டதிற்கெல்லாம் என்னைதான் முன்னுதாரணமாக காட்டுவார். பயிற்சி முடிவில் துப்பாக்கி சுடுதல், சட்டம், கவாத்து, எல்லாவற்றிலும் எனக்கு தங்க பதக்கங்கள் காத்திருந்தன. அதில், சட்டத்தில் மட்டும் தங்கப்பதக்கத்தை M.Phil படித்து விட்டு இங்கு காவலராக பயிற்சி பெற்ற---என்பவருக்கு கொடுத்து விடலாம் என்ற பயிற்சி அதிகாரியின் வேண்டுதலால் சட்டத்தில் எனக்கு கிடைக்க வேண்டிய தங்கப்பதக்கத்தை தாரை வார்த்தேன். பயிற்சி முடிவில் நான் தான் கம்பேனி காமாண்டர். தங்க பதக்கங்களுடனும் பாராட்டுகளுடன் பயிற்சியை முடித்தேன்.

ஆனால், நான் எதிர்பார்த்தப்படி காவல்துறை பயிற்சி இல்லை. வெறும் கவாத்திற்கு(Parade)முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்த சமுதாயத்தில் பல்வேறு பிரச்சனைகளை சந்திக்கவுள்ள காவல்துறையில் அதை எப்படி எதிர்கொள்வது என்பதற்கான எந்த பயிற்சியும் இருப்பதாக தெரியவில்லை. காவலர் முதல் உயர்நிலை காவல்துறை அதிகாரிகள் வரை முதலில் கற்று கொள்ள வேண்டியது மனித நேயம், நேர்மை, சட்டம், பிரச்சனைகளை அணுக வேண்டிய முறை, கடமையை செய்யும் போது ஏற்படுத்தப்படும் இடையூறுகளை சமாளிக்க வேண்டிய முறை, இந்த மக்களாட்சியில் காவல் துறையின் முக்கியத்துவம், முறையான உடற்பயிற்சி போன்ற எந்த பயிற்சியும் இல்லை.

இந்த பயிற்சிக்குப்பின் நான் சிறப்பு காவல்படை நான்காம் அணியில் ($4^{th}$ battalion) காவலராக நியமிக்கப்பட்டேன். இதில் A கம்பேனியின் எழுத்தராக நியமிக்கப்பட்டேன். இந்த சிறப்பு காவல்படையை பொறுத்தவரை பெரிய பணிகளும் இல்லை, மக்களுடன் தொடர்புமில்லை. கலவரங்கள் போன்ற அவசர தருணங்களில் மட்டும் பயன்படுத்தப்படும் படையாகவே இருக்கும். அதன்பின் நீலகிரி மாவட்ட ஆயுப்படைக்கு மாற்றப்பட்டேன். அதுதான் என் வாழ்க்கையை மாற்றி அமைக்கும் முக்கிய அத்தியாயம் என்று எனக்கு அப்போது புரிந்திருக்கவில்லை.

ஆயுப்படையில் முக்கிய பணியாக கைதிகளை சிறைசாலைகளுக்கு அழைத்துச் செல்வதும், நீதிமன்றங்களுக்கு அழைத்து வருவதும்தான். இதை தவிர முக்கிய பாதுகாப்பு பணிகளும் இருக்கும். அப்போதுதான் காவல் துறை என்றால் என்ன? நீதிமன்றம் என்றால் என்ன? அங்கு என்ன நடக்கிறது? என்பது லேசாக புரிய ஆரம்பித்தது. கைதிகளை சிறைசாலைகளிலிருந்து கைவிலங்கிட்டு பொது பேருந்தில் அழைத்து வருவோம். அப்போது நான் அவர்களிடம் என்ன நடந்தது என்று விசாரிப்பேன். எனக்கு வேதனையாக இருக்கும். காரணம், 99.9% வழக்குகள் காவல்துறையால் மிகைப்படுத்தப்பட்ட பொய் வழக்குகளாகதான் தெரியும். இது ஒருபுறம் என்றால் மிகவும் பரிதாபமான அப்பாவிகளும், வறுமையின் பிடியில் சிக்கி தவிக்கும் விசாரணை கைதிகளின் நிலை மிகவும் பரிதாபமானது. அவர்களது தாய் அல்லது மனைவி போன்ற உறவுகள் அவர்களை பார்க்க பட்டினியாய் வந்து நீதிமன்றத்தில் காத்து கிடப்பதும், விசாரணை கைதியாக உள்ள தனது உறவிற்கு உண்ண ஏதேனும் வாங்கி தர ஏங்குவதும், நாங்கள் அதை கொடுக்க விடாமல் தடுப்பதும் கொடுமையிலும் கொடுமையானது. இதைவிட ஒரு கொடுமை உள்ளது! அந்த விசாரணை கைதிகளின் உறவுகள் எவ்வளவோ துன்பங்களுக்கிடையில் ஒரு வழக்கறிஞரை நீதிமன்றத்தில் ஜாமீன் பெற நியமித்திருப்பர். தன் தாலியை அடகு வைத்து வழக்கறிஞருக்கு பணம் கொடுத்த அப்பாவிகளையும் நான் பார்த்திருக்கின்றேன். விசாரணை கைதியும் எப்படியும் இன்று ஜாமீன் கிடைத்துவிடும், தன் மனைவி குழந்தைகளுடன் செல்லலாம் என்று மிகுந்த நம்பிக்கையோடு நீதிமன்றம் வருவார்கள். ஆனால், அவர்கள் நியமித்த வழக்கறிஞர் வர மாட்டார் அல்லது நீதிமன்றம் ஜாமீன் மனுவை வேறு நாளுக்கு ஒத்தி வைக்கும். மீண்டும் அவர் விசாரணை கைதியாக சிறைக்கு செல்வார்.

நினைத்து பார்த்தால் என் கண்கள் தானே கலங்கும். அந்த சிறைச் சாலைக்கு மீண்டும் கைதி அழைத்துச் செல்லப்பட்டவுடன், அந்த கைதிகள் ஜட்டியை தவிர தங்கள் ஆடைகளை முழுவதும் கழற்றிவிட்டு வரிசையில் அமர வேண்டும். சிறைக் காவலர்கள் வரிசையாக அவர்களின் பெயர்களையும், தந்தை பெயரையும் கூறி அழைத்து அவர்களை முழுவதுமாக சோதனை செய்து உள்ளே அனுப்புவர். சில சிறை காவலர்கள் சோதனை செய்தவுடன் அவர்களைப் பிடித்து தள்ளி விடுவர். விசாரணை கைதிகளில் சிலர் கீழே விழுந்து பயத்தில் தாங்களே எழுந்து ஓடுவார்கள். இவை எல்லாம் நான் நேரில் கண்டு அனுபவித்தவை. இதில், விசாரணைக் கைதிகளை பார்க்கவரும் அவர்களது உறவுகள், அவர்கள் வாங்கி தரும் உணவை விசாரணை கைதிகள் உண்ண அனுமதிக்கவும், கை விலங்கிடாமல் விசாரணைக் கைதிகளை அழைத்துச் செல்லவும் காவலர்களுக்கு இலஞ்சமும், செலவும் செய்ய வேண்டும்.

நீங்கள் என்னை நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி... இப்படிப்பட்ட பணியை பார்த்த அன்றைய தினம் நான் உறங்கியதில்லை. எனக்குள் ஒரு தர்ம யுத்தம் நடந்துக் கொண்டிருக்கும். இந்த விசாரணை கைதிகள் குற்றவாளிகள் அல்ல. யாரோ கொடுத்த புகாரின் பேரில், யாரையோ திருப்திப்படுத்த காவல்துறையால் மிகைப்படுத்தி போட்ட வழக்கு அவ்வளவுதான். ஒரு சிறு விசாரணைக் கூட நீதிமன்றம் மேற்கொள்ளவில்லை. காவல்துறை FIR போட்டு குற்றச்சாட்டிற்கு

உள்ளானவரை நீதிமன்றத்தில் முன்னிருந்த, நீதிமன்றம் உடனே அவரை 15 நாட்கள் சிறையில் வைக்க உத்தரவிடுகிறது. இது என்ன நீதி என்று என் மனம் என்னை தூங்க விடாது.

FIR என்றால் என்ன? குற்றப்பத்திரிக்கை என்றால் என்ன? விசாரிக்காத நிலையில் ஏன் இந்த சிறைவாசம்? என்று முழு விபரமும் தெரிந்துக்கொள்ள முடிவுச்செய்து நிறைய சட்டப்புத்தகங்களை வாங்கி படிக்க ஆரம்பித்தேன். இது தவறான, அநீதியான, அதர்மம் என்று மெல்ல மெல்ல தெளிவடைந்தேன். மேலும், சட்டம் படிக்கும் ஆர்வம் அதிகரித்தது. கிடைத்த நேரத்தை வீணடிக்காமல் சட்டப்புத்தகங்கள் படிப்பது எனது பொழுதுப்போக்காக மாறிப்போனது. படித்து நான் என்ன செய்ய முடியும்? ஒரு சாதாரண காவலன் நான். இந்த அளவு சிந்திந்ததே காவல்துறையை பொறுத்தவரை தவறு. அங்கு சிந்திப்பதற்கெல்லாம் இடமில்லை. அதிகாரி என்ன சொல்கிறாரோ அதை ஆராயாமல் அப்படியே செய்ய வேண்டும், அவ்வளவுதான் வேலை. பயிற்சி காலத்தில் முதல் போதனை என்ன தெரியுமா? ‘‘வெள்ளை காகம், பறக்கிறது என்று அதிகாரி சொன்னால், இல்லை அது கருப்பு நிற காகம் என்று சொல்லகூடாது. ஆமாம், வெள்ளை காகம், பறக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்’’ என்று சொல்லி கொடுத்தார்கள். ஒரு வேளை கடை மட்ட காவலர்கள் என்பதால், அவர்களின் தகுதி அவ்வளவுதான் என்று தீர்மாணித்துவிட்டார்கள் போலும். முக்கியமான கலவரங்கள் போன்ற நேரத்தில் அதிகாரியின் உத்தரவை ஆராயக்கூடாது, சொன்னதை செய்ய வேண்டும் என்பதால் இப்படி ஒரு கட்டுபாடா என்று எனக்கு தெரியவில்லை. ஆனால், எதற்கும் விதிவிலக்கு உண்டு அல்லவா? இன்றைய சுழலில் மெத்த படித்த பல பட்டதாரிகள் காவலராக பணிப்புரிகின்றனர். அவர்கள் பல பிரச்சனைகளை தனியே எதிர்கொள்கிறார்கள் என்ற நிலையில் இந்த நடைமுறை பொருத்தமானதாக எனக்கு தெரியவில்லை.

2. <u>ரணம்-2 –காவல்துறையிலிருந்து அநியாய பணி நீக்கம், தூங்கி போன நீதித்துறை!</u>

இப்படி தொடர்ந்த எனது காவல்துறை பணியில் எங்களுக்கு பணி நியமிக்கும் அதிகாரிகள் எங்களுக்கு பணி வழங்குவதில் காட்டும் பாராபட்சம், பெறும் லஞ்சம், செய்யும் அநியாயங்கள், காவல் நிலையங்களில் பணி நியமிக்கப்படும் போது அங்கு நடக்கும் அவலங்கள் போன்ற எது என் கண்ணில் பட்டாலும், ஒரு கனம் கூட சிந்திக்க மாட்டேன் உடனே உயர் அதிகாரிகளுக்கு புகார் எழுதிவிடுவன். இதனால், அதிகாரிகளுக்கு என்னை பிடிக்காமலே போய்விட்டது. நான் யாருக்கு புகார் எழுதுவேனோ, அந்த அதிகாரி என்னையே அழைத்து எச்சரிப்பார். அதிகாரிகள் மீது புகார் எழுதுவது உன் வேலை இல்லை. உனக்கு என்ன வேலையோ அதை மட்டும் பார். இல்லை என்றால் சஸ்பென்ட் செய்து விடுவேன் என்று மிரட்டப்பட்ட நாட்கள் எத்தனையோ. அவர்கள் எச்சரிக்கை கூட ஒருவகையில் சரியாக இருக்கலாம். ஆனால், இந்த சமுதாயத்தில் வாழ தகுதியற்றவன் நான்!

காவல்துறையில் விரும்பி சேர்ந்தேன், ஆனால், அங்கு நடக்கும் அநியாயங்கள் என்னை அத்துறையுடன் ஒட்ட விடவில்லை. அப்படி என்றால் நான் வேலையை ராஜிநாமா செய்து விட்டு வந்துவிட்டிருக்க வேண்டும். என் குடும்ப சூழல் என்னை அவ்வாறு செய்யவும் விடவில்லை. ஆனால், காவல்துறையின் மீது நான் கொண்டிருந்த ஈடுபாடு துளியும் குறையவில்லை. காவல்துறை செயல்பாடுகள் செம்மையாக வேண்டும் அதற்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்று என் மனம் என்னை உந்தியது. என் தகுதிற்கு மீறிய ஆசை என்று அப்போது எனக்கு புரியவில்லை. இமயமலையை சாய்க்க புறப்பட்ட எறும்பாகதான் நான் இருந்தேன்.

அந்த சமயத்தில்தான் காவலர்களுக்கான சங்கம் அமைக்க பல காவலர்கள் பெரும் முயற்சியில் இருந்தனர். உச்ச நீதிமன்றம் வரை வழக்கு நடந்துக்கொண்டிருந்தது. அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறமையான காவலர்களை தொடர்புக்கொண்டு ஆதரவு திரட்டி வந்தனர். எனது மாவட்டமான நீலகிரி மாவட்டத்தின் சார்பில் செயல்பட கோரி என்னை நேரில் வந்து சந்தித்தனர். இந்த சமயத்தில்தான் தமிழக முதலமைச்சரும் மற்றும் தமிழக காவல்துறை இயக்குநரும் காவலர் குறைத்தீர்க்கும் நாள் என்று ஒரு நாளை அறிவித்தனர். அந்த நாளில் காவலர்கள் தங்களின் எந்த குறைகளை வேண்டுமானாலும் நேரில் வந்து தெரியப்படுத்தலாம் என்று அறிவித்தனர். தமிழகம் முழுவதுமுள்ள ஏகப்பட்ட காவலர்கள் குறைகளுடன் சென்னையில் அணிவகுத்தனர். நானும் பெரிய மனுவுடன் சென்றிருந்தேன். வந்த காவலர்கள் எல்லோரும் அவரவர் தனிப்பட்ட குறைகளுக்காக வந்திருந்தனர். உதாரணமாக, பணியிட மாற்றம், ஊதிய உயர்வு, பதவி உயர்வு, குடியிருப்பு, உள்ளிட்ட ஏகப்பட்ட சொந்த பிரச்சனைகளுடன் வந்திருந்தனர். ஆனால், நான் மட்டும் தான் பொது பிரச்சனையை பட்டியலிட்டு மனு தயார் செய்து சென்றிருந்தேன். குறிப்பாக காவலர்களுக்கு ஒரு பணி முடித்தப்பின்பு ஒய்வு, இலஞ்ச ஒழிப்பு பிரிவு, CB CID, SBCID, Q Branch போன்ற சிறப்பு பிரிவுகளில் பணியாற்ற அனைத்து காவல்களுக்கும் வாய்ப்பு, சுழற்சி முறை பணி, அனைத்து காவலர்களுக்கும் ஓட்டுநர் பயிற்சி போன்ற பொதுவான கோரிக்கைகளோடு சென்றிருந்தேன். என் மனுவை வாங்கி படித்த அன்றிருந்த காவல் துறை இயக்குநர் ‘‘நீ என்ன யூனியன் லீடரா? என்று என் மீது கடுஞ்சினம் கொண்டார். உடனே, எனது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலத்தை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு நான் காவலர் சங்கத்தில் தொடர்புடையவனா என்று கண்காணிக்குமாறு உத்தரவிட்டார். ஆனால், நான் கொடுத்த மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க கடிதமும் அனுப்பினார்.

எனது மாவட்டத்திற்கு நான் திரும்பியதும் எனக்கு எமகண்டம் ஆரம்பித்தது. இந்த குறைகளை மாவட்ட அளவிலுள்ள அதிகாரிகளிடம் கூறாமல் நேரடியாக தமிழக காவல் துறை இயக்குநரிடம் சென்று முறையிட்டது எனது மேல் அதிகாரிகளுக்கு பிடிக்கவில்லை. அதோடு, நிர்வாக சீர்கேட்டை சரிச்செய்ய நான் வைத்த முறையீடுகள் அவர்கள் திறம்பட செயல்படவில்லை என்று நான்கூறிய புகாராகவே கருதினர். உடனடியாக, என்னை மசினக்குடி என்ற இடத்தில் நடுக்காட்டிலுள்ள வெடிமருந்து கிடங்கு பாதுகாப்பு பணிக்கு அனுப்பி விட்டனர். மணிக்கொரு அதிகாரி நான் பணியில் இருப்பதை சோதனைச் செய்து உறுதிச்செய்தனர். மூன்று மாதங்கள் என் மனைவி குழந்தையை காண முடியாமல், உணவிற்கு கூட போதிய வசதியின்றி கிடந்தேன். ஆனால், எனக்கு துணையாக சட்டப்புத்தகங்கள் இருந்தன. நல்ல சூழல், தனிமை, நடுக்காடு, சட்ட புத்தகம் படிக்க பொருத்தமாக இருந்தது, பயன்படுத்திக்கொண்டேன். பொதுவாக 7 நாட்களுக்கு ஒரு முறை மாற்றப்படும் அந்த பணி எனக்கு மட்டும் மூன்று மாதங்களுக்குப்பின் மாற்றப்பட்டது. பின் மிசோராம்

கவர்னருக்கு பாதுகாப்பு பணியில் அமர்த்தப்பட்டேன். என்னை பணியிலே தவறு கண்டுப்பிடித்து பணி நீக்கம் செய்ய ஆசைப்பட்ட அதிகாரிகளின் முயற்சி வீணானது. குடிப்பழக்கம், சீட்டாடுதல் போன்ற தீயப்பழக்க வழக்கங்களை காரணங்காட்டி என்னைப் பணி நீக்கம் செய்ய முடியுமா என்றும் முயற்சி செய்தனர். அவர்களால், என்னிடம் எந்த தீயப் பழக்க வழக்கங்களையும் காண முடியவில்லை. காவலர் சங்கத்தை மட்டும் காரணங்காட்டி என்னை பணி நீக்கம் செய்ய முடியாது என்பதால் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தனர். ஆனால், ஆண்டவனுக்கும் நான் காவல்துறையில் பணிப்புரிவதில் விருப்பம் இல்லை போலும்.

அப்போது என்னை மாவட்ட ஆட்சியரின் இல்லப் பாதுகாப்பு பணிக்கு நியமித்தனர். போதுவாக அப்பணி ஏழு நாட்களுக்கு ஒரு முறை மாற்றப்படும். ஆனால், என்னை அப்பணிக்கு நியமித்த மறுநாளே திடீரென்று வேறொரு காவலர் நியமிக்கப்பட்டு என்னை அலுவலகத்திற்கு வருமாறு உத்தரவிட்டிருந்தனர். எனக்கு கோபம், அலுவலகம் சென்றவுடன், அங்கிருந்த உதவி ஆய்வாளரிடம் என்னை ஏன் இப்படி கஸ்டப்படுத்துகிறீர்கள் என்று ஒரே சண்டை பிடித்தேன். ஆனால், அவர்கள் அனைவரும் இயல்புக்கு மீறிய அமைதியுடன் என்னை பரிதாபமாக பார்த்தனர். எனக்கு அவர்களிடம் பார்வையின் அர்த்தம் புரியவில்லை. பொதுவாக, என்னை ஓர வஞ்சனையுடன் பர்த்தாலோ, அநியாயம் செய்தாலோ மறு நிமிடம் சிந்திக்காமல் சண்டை பிடிக்க ஆரம்பிப்பேன், மீறினால் உயர் அதிகாரிகளுக்கு புகார் எழுதுவேன் ஆனால், நான் பணியில் நிகரற்ற உண்மையுடன் இருப்பேன் என்பதும், நான் எந்தவிதமான தவறான பழக்க வழக்கமும் இல்லாதவன் என்பதும் அவர்களுக்கு மிகவும் நன்றாக தெரியும். அவர்களது மனதில் என் மீது நல்ல அபிப்ராயமும், அன்பும் இருந்ததை அன்று நான் உணர்ந்தேன். ஒரு இறப்பு செய்தியை பொதுவாக இறந்தவர் மீது அளவிற்கு மீறிய அன்புக் கொண்டவர்களிடம் ‘பட்’ என்று சொல்லி விட மாட்டார்கள். அப்படிதான் அன்றும், போலீஸ்காரன் மனோகர்ராஜ் கொல்லப்பட்டான் என்ற செய்தியை என்னிடம் கூற அவர்கள் மிகவும் தயங்கினர். நான் சண்டை போட்டு முடிக்கும் வரை காத்திருந்தனர். பின்பு என்னுடைய தற்கால பணிநீக்க உத்தரவை என்னிடம் நீட்டினர்.

அந்த தற்காலிக பணி நீக்க உத்தரவு எனக்கு வழங்கப்பட்ட அந்த நிமிடம் நான் இறந்து போனேன். நான் என் உயினும் மேலாக நினைத்த காவல்துறை பணி என்னிடமிருந்து பறிக்கப்பட்டது. எனது குடும்பத்தில் ஏதோ இறப்பு சம்பவம் ஏற்பட்டதை போன்ற ஒரு துக்கம் எனது குடும்பத்தை அனைத்துக்கொண்டது. யாரும் உண்ணவில்லை. வாழ்க்கையே முடிந்து விட்டதை போன்ற ஒரு உணர்வு, அதிலிருந்து மீள என்னால் முடியவில்லை.

நான் ஏன் பணி நீக்கம் செய்யப்பட்டேன் என்று கூட அந்த தற்கால பணிநீக்க உத்தரவில் குறிப்பிடவில்லை. ஆனால், மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் நான் விசாரித்த போது, நான் காவலர் சங்கம் அமைக்க முயன்றதால் என்னை தற்கால பணிநீக்கம் செய்துள்ளதாக கூறினர். ஆனால், காவலர் சங்கம் அமைக்க முயன்றேன் என்ற குற்றச்சாட்டு மட்டும் போதாது, என்னை பணி நீக்கம் செய்ய காரணங்களை பலப்படுத்த வேண்டும் என்பதால் மனசாட்சியே இல்லாமல், அதர்ம வழி நின்று எனது உயர் அதிகாரிகள் எனக்கெதிராக குற்றச்சாட்டுகளை ஜோடிக்க ஆரம்பித்தனர்.

ஏன் தண்டிக்கப்பட்டுள்ளேன் என்றுக் கூட தெரியாமல் ஒரு தண்டனையா? பலரிடம் என்னச் செய்வதென்று விசாரித்தேன். கடைசியில் ஒருவர் என்னை சென்னையில் ஒரு வழக்கறிஞர் மூலமாக காரணம் கூறாத தற்கால பணிநீக்க உத்தரவிற்கு தடை உத்தரவிட வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்தேன். நீதிமன்றம், 30 நாட்களுக்குள் தற்கால பணிநீக்க உத்தரவிற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. என் உயர் அதிகாரிகளுக்கு அந்த உத்தரவு வசதியாய் போனது, ஆர அமர எனக்கெதிராக எவ்வளவு கீழே இறங்கி பொய்சாட்சிகளையும், குற்றச்சாட்டுகளையும் உருவாக்க முடியுமோ அந்தளவிற்கு தயார் செய்தனர். என் மனைவியின் தெய்வ பக்தியும், அவர் அளித்த ஆறுதலும் எனக்கு துணை நின்றது. தற்காலிக பணி நீக்கம் தானே? நான் தவறேதும் செய்ய வில்லை, மீண்டும் பணிக்கு செல்வேன் என்று என்னை தேற்றிக்கொண்டு விசாரணைக்கு தயார் ஆனேன். கூறப்பட்டக் குற்றச்சாட்டுக்கள் முழுக்க முழுக்க பொய் என்று ஆதாரப்பூர்வமாக நிருபித்தேன். விசாரணையை நடத்தியது ஆயுதப்படையை சேர்ந்த ஒரு துணை காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள். விசாரணை முடிந்தவுடன் என்னை அழைத்த அவர் ‘‘நீ தவறு செய்ய வில்லை, நீ விரைவில் மீண்டும் பணிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவாய். ஆனால், இனி நீ உன் வேலை உண்டு நீ உண்டு என்று இருக்க வேண்டும், நீ நல்ல புத்திசாலி, ஆனால் அது காவல்துறைக்கு அவசியமில்லை, பெட்டிசன் எழுவது, வேண்டாத வேலைகளை செய்வது எல்லாவற்றையும் விட்டுவிடு’’ என்றார். நானும் சரி என்று அரை மனதுடன் சொல்லிவிட்டு வந்தேன். சில நாட்களுக்குப்பின் மீண்டும் அவர் என்னை அழைத்தார். ‘‘ நீ தவறு செய்யவில்லை என்று எனக்கு தெரியும், உன்னை மீண்டும் பணியில் சேர்க்க வேண்டும் என்று தான் எனக்கு ஆசை. ஆனால், மேலிடம் உன்னை நிரந்தர பணி நீக்கம் செய்ய ஏதுவாக கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மை என்று அறிக்கை சமர்பிக்க கூறுகிறார்கள். என்னால் உன்னை காப்பாற்ற முடியாது. நீ உயர் நீதிமன்றத்திற்கு சென்று வழக்கு தாக்கல் செய். இந்த விசாரணை முழுவதும் உனக்கு சாதகமாகவே உள்ளது. நிச்சயம் நீ மீண்டும் பணிக்கு வருவாய், “All the best, Sorry ” என்று சொன்னார். அவர் ஒரு முஸ்லீம் இனத்தை சேர்ந்தவர். குரான் படித்ததால் என்னவோ, குறைந்தப்பட்சம் மனச்சாட்சியோடு பேசவாவது செய்தார். அவர் கூறியப்படி உயர்நீதிமன்றத்திற்கு நீதியை தேடி ஒரு வழக்கறிஞர் மூலம் சென்றேன். வழக்கை தாக்கல் செய்து இந்த 2016 ஆம் வருடம் வரை 12 வருடங்கள் நிறைவடைந்து விட்டது. என் குறையை கேட்பாரில்லை. வழக்கு கிடப்பில் கிடக்கிறது. என்னிடம் பெரும் பணத்தை வாங்கிய நான் நியமித்த வழக்கறிஞரோ ‘‘ நல்ல நீதிபதிக்காக காத்திருப்பதாக கூறுகின்றார்’’. அப்படி என்றால்? இந்த ஜனநாயக நாட்டின் சக்கரவர்த்திகளே! நீங்கள் தீர்ப்பெழுதுங்கள்!

நான் நிரபராதி என்றோ, எனக்கு மீண்டும் பணி அளிக்கப்பட வேண்டும் என்ற தீர்ப்பையோ நான் உங்களிடம் எதிர்பார்க்கவில்லை. இனி இந்த மண்ணில் நம் குழந்தைகள் நீதிக்கேட்டு 12 வருடங்கள் அல்ல, 24 மணி நேரம் கூட நீதிக்காக காத்திருக்க கூடாது. உடனடி நீதி கிடைக்க வேண்டும். அநாவசியமான நடைமுறைகள் தகர்த்தெறியப்பட வேண்டும் என்று தீர்ப்பெழுதுங்கள். இது நடக்குமா என்ற சிந்தனை வேண்டாம். விவேகத்துடன் துணிந்து விட்டால் வழிப்பிறக்கும்! உடனடி நீதி சாத்தியமாகும். தொழில்நுட்பமும், விஞ்ஞானமும் அதை சாத்தியமாக்கும்!.

இதன் தொடர்ச்சியாக நான் அனுபவித்த வேதனைகளும், அநியாயங்களும் தான் என்னை ஒரு வழக்கறிஞராகவும், பத்திரிக்கையாளனாகவும், ஒரு அமைப்பின் தலைவனாகவும் உங்கள் முன் நிறுத்தி இந்த புத்தகத்தை நான் எழுதவும், உங்களிடம் நீதி கேட்கவும் வைத்துள்ளது.

3. <u>ரணம்-3 –ஆக்கிரமிப்பு என்ற பெயரில் இடிக்கப்பட்ட என் வீடும், 15 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள வழக்கும்</u>

என் பணி நீக்கத்திற்குப்பின் என் குடும்பம் உணவிற்கே சிரமப்படும் நிலைக்கு தள்ளப்பட்டது. எனது தந்தை எனக்கு திருமணமான ஒரு மாதத்தில் இறந்து போனார். அவர் உயிருடன் இருக்கும் வரை எங்கள் பரம்பரை சொத்துக்களை அவரே கவனித்து வந்தார். அவர் இறப்பிற்குப்பின் நான் கவனித்து வந்தேன். அதில் ஒரு பழைய வீடு ஒன்று. எனது குடும்பத்திற்கு வருமானமேயில்லாததால், அந்த வீட்டை சிறிது சீர் செய்து வாடகைக்கு கொடுத்தால் ஏதாவது வருமானம் கிடைக்குமே என்று நினைத்து எங்களிடம் இருந்த சிறு சிறு நகைகள் அனைத்தையும் விற்று பணமாக்கினோம். மீதம் இருந்தது எனது மனைவியின் கழுத்தில் இருந்த தாலி மட்டும்தான். பணத்தை தயார் செய்துக் கொண்டு அனுமதிக்காக கண்டோன்மெண்ட் நிர்வாகத்திடம் மனு கொடுத்தேன். அந்த மனு கண்டோன்மெண்ட் நிர்வாகத்தின் பொறியாளருக்கு அனுப்பப்பட்டது. அவரை சந்திந்தேன். “ ரூ 2000/- செலுத்தி விட்டு தாராளமாக செய்துக் கொள்ளுங்கள் என்றார். அவர் சொன்ன தோரணையை கொண்டு ஒருவேளை அது கட்டணமோ என்று எண்ணி கொடுத்துவிட்டேன். இரசீது பெற வேண்டும் என்ற எண்ணம் கூட எனக்கு வரவில்லை. நான் எதையாவது கேட்டு அவர் அனுமதிக்காமல் போய்விடுவாரோ என்ற பயம் மட்டும்தான் இருந்தது. ஏற்கனவே, ஆடிப்போன என் வாழ்க்கை! என் நா வார்த்தைகளை உதிர்க்கவே அஞ்சியது என்று சொன்னால் கூட அது மிகையல்ல.

எனது குடும்பத்தின் கடைசி 1 ரூபாய் வரை பயன்படுத்தி கட்டுமான பொருட்களை வாங்கி வந்து வேலையை ஆரம்பித்தோம். வேலை முடியும் நிலையில் இருந்தது. என் தந்தையுடன் பிறந்தது மூன்று தம்பிகள், என் தந்தை மூத்தவர். அவர்களுக்குள் இருந்த ஒற்றுமையும், என் தந்தை மீது அவர்கள் கொண்டிருந்த மரியாதையும் நிகரற்றது. ஆனால், என் தந்தை இறந்த சில தினங்களில் எங்கள் ஊரிலுள்ள ஒரு நபர் திடீரென்று எங்களிடம் வந்து எனது சித்தப்பா என்றும் வீட்டை காலி செய்ய வேண்டும், நான் வீட்டை பழுதுப்பார்க்க போகிறேன் என்றார். நான் அவரை பற்றி என் சித்தப்பாமார்களிடம் விசாரித்த போது அவருக்கும் நமக்கும் எந்த சம்பந்தமுமில்லை. சொத்திற்காக உன்னை ஏமாற்ற பார்க்கிறார், உசாராக இரு என்று எனக்கு அறிவுரை வழங்கினர். மேலும், நான் அவரைப் பற்றி விசாரித்த போது அவருடைய குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் சம்பந்தமேயில்லை என்று தெளிவடைந்து விட்டேன். ஆனால், அவர் என் தந்தை இறந்தது முதல் என்னையும் என் குடும்பத்தையும் அந்த சொத்துகளிலிருந்து விரட்ட அவரால் முடிந்ததை எல்லாம் செய்து கொண்டிருப்பார். நான் அதை ஒரு பொருட்டாகவே கருத மாட்டேன். அவரிடம் சண்டையும் நான் போட்டதில்லை.

இப்படிபட்ட ஒரு சுழலில் அந்த நபர் மேற்சொன்ன கண்டோன்மெண்ட் நிர்வாகத்தின் பொறியாளரை சந்தித்து மேற்படி வீட்டை புதுபிப்பதை நிறுத்த சொல்லி மனு கொடுத்து அவருக்கு கணிசமான இலஞ்சமும் கொடுத்து அழைத்து வந்தார். அந்த கண்டோன்மெண்ட் நிர்வாகத்தின் பொறியாளர் என்னிடம் வீட்டை புதுப்பிக்க எதிர்ப்பு தெரிவித்து மனு வந்திருப்பதால் வேலையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார். நான் எவ்வளவு எடுத்து கூறியும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. பின்னர்தான் அவர் பெரிய இலஞ்ச பேர்வழி என்பதும், என்னிடம் வாங்கிய ரூ 2000/-ம் இலஞ்சமேயன்றி கட்டணமில்லை என்பதும் தெரிந்தது. சில தினங்களில் வீட்டை முன்னனுமதி இல்லாமல் கட்டிடம் கட்டும் பணி செய்வதாகவும், உடனே கட்டியதை இடிக்குமாறும், இல்லை என்றால் நிர்வாகத்தால் இடிக்கப்படும் என்றும் நிர்வாக அலுவலர் மூலமாக அறிவிப்பு அனுப்பினார். அதை எடுத்துக்கொண்டு போய் ஒரு வழக்கறிஞரை சந்தித்தேன். கையிலிருந்த மீதி பணத்தை அவருக்கு கட்டணமாக கொடுத்தேன். அவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். நீதிமன்றம் தற்காலிகத் தடையுத்தரவு வழங்கியது.

அந்த உத்தரவை கண்டோன்மெண்ட் நிர்வாகத்தின் பொறியாளரிடம் சார்வுச் செய்ய நானே எனது இருசக்கர வாகனத்தில் நீதிமன்ற ஊழியரை அழைத்துச் சென்றேன். என்னை அந்த அலுவலக வளாகத்திற்கு வெளியிலேயே நிற்க வைத்து விட்டு அந்த நீதிமன்ற ஊழியர் மட்டும் அந்த பொறியாளர் அறைக்கு சென்றார். சென்றவர் வெகு நேரமாகியும் திரும்பி வரவில்லை. அதற்குள் எனது மனைவி என் கைப்பேசிக்கு தொடர்புக் கொண்டு அவசரமாக வருமாறு கூறினார். அங்கிருந்து எனது வீடு பக்கம்தான் என்பதால் எனது இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு விரைந்தேன். அங்கு நடந்த கொடுமை என் இதயத்தை உலுக்கி எடுத்துவிட்டது. எனது வீட்டின் முன்பகுதியை அந்த அலுவலகத்தின் ஊழியர்கள் இடித்து கொண்டிருந்தனர். நான் நிலைகுலைந்து நின்று விட்டேன். அவர்கள் கடப்பாறையை கொண்டு அந்த சுவற்றை குத்தியது என்னை குத்திய வலியை எனக்குள் ஏற்படுத்தியது. மீண்டும் அங்கிருந்து அந்த அலுவலகத்திற்கு ஓடினேன். அந்த நீதிமன்ற அலுவலர் மட்டும்தான் அங்கு அமர்ந்திருந்தார். ‘‘என்னவாயிற்று ஏன் இன்னும் நீதிமன்ற உத்தரவை கொடுக்கவில்லையா’’ என்று நான் கேட்டேன். அதற்கு அந்த நீதிமன்ற ஊழியர் ‘‘பொறியாளர் காத்திருக்க சொல்லிவிட்டு எங்கோ சென்றுவிட்டார். அதனால் தான் காத்திருக்கின்றேன்’’ என்றார். சில நிமிடங்களில் வந்த பொறியாளர் அதன்பின் அந்த நீதிமன்ற உத்தரவை வாங்கினார். வாங்கி விட்டு ‘‘கொஞ்சம் முன்னாடி வந்திருந்தால் நல்லா இருந்திருக்கும், இடித்து விட்டோமே? என்ன செய்வது’’ என்று கூறிவிட்டு தாமதமாகதான் உத்தரவு கிடைத்ததாக கையொப்பமிட்டு தேதி மற்றும் நேரத்தை குறிப்பிட்டார்.

இடித்த வீட்டின் கதவு, சன்னல் உள்ளிட்ட ஏகப்பட்ட பொருட்களை வண்டியில் போட்டு எடுத்து சென்றுவிட்டனர். அந்த பொருட்களின் நிலை என்ன? என்ன கணக்கு? எதுவும் இன்றைய தேதி வரை எனக்கு தெரியாது. மிச்சம் மீதி இருந்த பணத்தை இழந்து வீட்டை இழந்து என் குடும்பம் பட்ட வேதனைகள் சொற்களால் விவரிக்க முடியாது. இது தொடர்பான அசல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்தது. சில வருடங்களுக்குப்பின் மேற்படி சொத்துக்களை பெயர் மாற்றம் செய்ய கண்டோன்மெண்ட் நிர்வாகத்திற்கு விண்ணப்பித்தேன். நீதிமன்றத்திலுள்ள வழக்கை திரும்ப

பெற்றுக்கொண்டால்தான் சொத்து பெயர் மாற்றம் செய்ய முடியும் என்றார்கள். எல்லாம் முடிந்து போயிற்று இனி என்ன இருக்கிறது என்று அந்த வழக்கை திரும்பப்பெற்றுக்கொண்டேன். சொத்தை பெயர் மாற்றம் செய்ய கண்டோன்மென்ட் நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. விசயம் தெரிந்துக்கொண்ட மேற்சொன்ன எனது சித்தப்பா என்று கூறிய நபர் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார். பின் அந்த வழக்கை காரணம் காட்டி சொத்தின் பெயர் மாற்றம் செய்வதை கண்டோன்மென்ட் நிர்வாகம் நிறுத்தி வைத்தது. அந்த வழக்கில் எனது சித்தப்பா என்று கூறிய நபர் சில போலி ஆவனங்களை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். நான், இதை தெரிந்துக்கொண்டு, குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 340-ன் கீழ் நீதிமன்றத்தில் ஒரு மனு சமர்பித்தேன். அது போன்ற ஒரு மனுவை அந்த நீதிமன்றம் அப்போதுதான் முதல் முறையாக பார்த்தது. அந்த மனுவை ஏற்றுக்கொண்டு விசாரிக்கலாமா வேண்டாமா? என்று முடிவு செய்யவே அந்த நீதிமன்றம் திணறி போனது. இந்த 2016-ஆம் ஆண்டு வரை சுமார் 15 ஆண்டுகளாக அந்த வழக்கு நிலுவையில்தான் உள்ளது. சொத்தின் பெயரும் இதுவரை மாற்றப்பட வில்லை. இந்த 15 ஆண்டுகளில் ஒவ்வொரு வாய்தாவிலும் இந்த நீதிமன்றத்தின் என்ன செய்தது என்ற நீதிமன்ற குறிப்புகள் www.neethithurai.com என்ற இணையத்தளத்தில் "தீர்ப்புச் சொல்லுங்கள்" என்ற பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

4. <u>ரணம்-4–வீட்டு கடனால் அடைந்த அவமானத்துடனான வேதனையும்! நுகர்வோர் நீதிமன்றமும்!</u>

இந்தச் சூழ்நிலையில் என் மனதை ரணமாக்கிய மற்றொரு சம்பவம். நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் போது எனக்கு மூன்று நெருங்கிய நண்பர்கள் இருந்தனர். அதில், நான் காவல்துறையில் சேர்ந்துவிட்டேன், இரண்டு நண்பர்கள் மத்திய அரசு பணி கிடைத்து நன்றாக இருந்தனர். ஆனால், ஒருவர் மட்டும் சரியான வேலை கிடைக்காமல் கிடைத்த வேலைக்கு சென்று வந்து சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு ஏதேனும் செய்து அவரது வாழ்க்கை தரத்தை உயர்த்த எண்ணி அவரோடு பேசியபோது மலர் சாகுப்படி செய்ய ஆசைப்படுவதாகவும், அதில் நல்ல லாபம் இருக்கிறது. சம்பந்தப்பட்ட நிறுவனமே, விதைகளை கொடுத்து அறுவடையும் செய்து விலைக்கு எடுத்துக்கொள்வார்கள். ஆனால், அதற்கு சொந்த நிலமோ அல்லது குத்தகை நிலமோ வேண்டும் என்றும் தெரிவித்தார். அப்போது நான் காவல் துறையில் பணியிலிருந்தேன். சரி என்று, ஒரு நிலத்தை குத்தகைக்கு பார்த்தோம். அந்த நிலத்தை ஒட்டி 3 சென்ட்டில் ஒரு நிலம் மிக குறைந்த விலையில் விற்பனைக்கு உள்ளதாகவும் வாங்கினால் அதில் ஒரு வீட்டைக்கட்டி மலர் சாகுப்படியும் அருகிலிருந்து பார்த்துக்கொள்ளலாம் என்று என் நண்பர் கூறினார். எப்படியும் அவருக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த நிலத்தை வாங்க முடிவுச்செய்தோம். என் கையிலிருந்த பணம் அந்த இடத்தை வாங்க மட்டும் தான் போதுமானதாக இருந்தது. நிலத்தை வாங்கி ஏதேனும் ஒரு வங்கியில் வைத்து வீட்டு கடன் வாங்கி வீடும் கட்டலாம், மலர் சாகுப்படிக்கு தேவையான குடில்களையும் அமைக்கலாம் என்று எண்ணி அந்த நிலத்தை என் பெயரில் வாங்கினேன். பின் GPF போன்ற கடன்களை முடிந்தளவு பெற்று வீட்டின் அஸ்திவாரம் அமைத்தோம். பின் LIC HFL நிறுனத்திடம் வீடுக்கட்ட கடன் கேட்டு மனு செய்தோம். நான் அரசு பணியில் இருந்ததால் எனக்கு ரூ 2,75,000/- கடன் விரைவாக கிடைத்து விட்டது. வீடும் வெற்றிகரமாக கட்டி முடித்து விட்டோம். பெற்ற கடனை மாதா மாதம் தவனை தொகை ரூ 3424/- ஐ தவறாமல் செலுத்தி வந்தேன். ஆனால், நான் பணி நீக்கம் செய்யப்பட்டப்பின் என்னால் மாத தவனை செலுத்த முடியாமல் போனது. LIC HFL நிறுவனம் என்னை கேட்பதற்குள் நானே அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி நான் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள விபரத்தையும், அதனால், என்னால் மாத தவனையை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும், எனவே, மேற்படி வீட்டை விற்று கடனை மொத்தமாக திருப்பி செலுத்த அனுமதி வேண்டியும், அதில், விருப்பம் இல்லை என்றால் தாங்களே விற்பனை செய்து கடன் தொகையை எடுத்துக் கொண்டு அந்த கடனிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும் என்று பதிவு அஞ்சலில் அக்கடிதத்தை அனுப்பி வைத்தேன். ஆனால், அவர்கள் எனது கடிதத்தை ஒரு பொருட்டாகவே கருதவில்லை, ஐந்தாறு நபர்கள் என் வீட்டிற்கு வந்து எனக்கு கெடு கொடுத்து எச்சரித்து சென்றனர். பின் கடனை கேட்டு மிரட்ட ஆரம்பித்தனர். இறுதியாக சுமார் எட்டு நபர்கள் வீட்டிற்கு வந்து கலாட்டா செய்தனர், அடிக்கவும் வந்தனர். அக்கம் பக்கம் உள்ளோர் வந்து தடுத்தனர். நான் காவல் துறைக்கு செல்போன் மூலமாக புகார் கொடுத்தேன். அந்த LIC HFL நிறுவனத்தை சேர்ந்தோர் என் செல்போனை என்னிடமிருந்து பிடுங்க செய்த முயற்சியில் என் செல்போன் எங்கு போனது என்றே தெரியவில்லை. காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். அன்று தான் காவல்துறையின் மற்றொரு முகத்தையும் பார்த்தேன். வந்த ஆய்வாளர் "அவர் கடனை தரவில்லை என்றால் நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு எதற்காக போய் கலாட்டா செய்தீர்கள் உங்கள் மீது நான் வழக்கு பதிவுச்செய்கிறேன்" என்று அவர்களை மிரட்டினார். எனது செல்போன் காணவில்லை என்று நான் சொன்னதால் அதைப்பற்றி விசாரித்தார். அதற்குள் எனது வீட்டிற்கு பக்கத்திலிருந்த ஒரு முன்னாள் இராணுவவீரர் ஒருவர் அவரது செல்போனிலிருந்து எனது செல்போனுக்கு அழைத்தார். எனது செல்போன் வீட்டின் முன்னிருந்த புதருக்குள் மணியடித்தது. அவர் அதை எடுத்து வந்தார். அதை அந்த ஆய்வாளரும் பார்த்தார். பின் அந்த HFL நிறுவனத்தை சேர்ந்தோர் மீது வழக்கப்பதிவுச் செய்ய சாட்சிக்காக வர வேண்டும் என்று கூறி அக்கம் பக்கம் உள்ள சிலரையும் காவல் நிலையம் அழைத்து சென்றார்.

நான் அவர்கள் மீது வழக்கு பதிவுச் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தினேன். ஆய்வாளரும் தயாராகதான் இருந்தார். என்னை எழுத்துப்பூர்வ புகார் எழுதிதர சொன்னார். நான் அருகிலிருந்த அறையில் அமர்ந்து எழுதிக்கொண்டிருந்தேன். இந்த நேரத்தில் என்ன நடந்தது என்று இன்னும் எனக்கு தெரியவில்லை. நான் புகார் எழுதி வந்ததும் அந்த ஆய்வாளர் எனக்கு எதிராக பேச ஆரம்பித்தார். "சரி நீ கொடுத்த புகாரின் பேரில் FIR போடுகிறேன். ஆனால், அவர்களோடு சேர்த்து உனது செல்போனை புதரிலிருந்து கண்டுபிடித்து எடுத்ததாக கூறிய அந்த முன்னாள் இராணுவ வீரரையும் கைது செய்ய வேண்டி வரும், ஏனென்றால் காணாமல் போனதாக நீ கூறிய செல்போன் அவரது கையிலிருந்து தான் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது, அது வேண்டாம் என்றால் புகாரை நீயே வாபஸ் வாங்கி கொண்டு எழுதி கொடுத்து விட்டு செல்" என்றார். நான் அதிர்ந்து போனேன். என் புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்காமல்

இருக்கவும், அந்த LIC HFL நிறுவனத்தை சேர்ந்தோரை காப்பாற்றவும் ஆய்வாளர் அந்த அப்பாவி முன்னாள் இராணுவ வீரரை கைது செய்வேன் என்று மிரட்டுவதை நான் தெளிவாக உணர்ந்துக் கொண்டேன். பின் என்ன செய்ய அந்த அப்பாவி முன்னாள் இராணுவ வீரரை காப்பாற்ற என் புகாரை வாபஸ் வாங்கி கொண்டு அவர்கள் கூறியதை போல எழுதிக்கொடுத்து வந்துவிட்டேன். பின்புதான் அவர்கள் LIC HFL நிறுவனத்தால் கடனை வசூலிப்பதற்காகவே நியமிக்கப்பட்டுள்ள குண்டர் படை என்று தெரிந்தது. அவர்களுக்கு வசூலிக்கும் தொகையில் ஒரு கமிசன் கிடைக்கும். அதற்குதான் அத்தனை ஆர்ப்பாட்டம். யாரிடம் போய் சொல்ல? இவர்களால் பாதிக்கப்பட்டோர் ஏராளம் என்று பின்பு தெரிந்துக் கொண்டேன்.

வீட்டை ஏலத்தில் விடவும், விற்கவும் நானே எழுத்துப்பூர்வ ஒப்புதல் தெரிவித்த பின்பும் எவ்வளவு தூரம் ஒரு குடும்பத்தை அவமானம் படுத்த முடியுமோ அவ்வளவையும் அந்த நிறுவனம் செய்தது. செய்திதாளில் கடன் செலுத்தாதோர் என்று புகைப்படத்துடன் அறிவிப்பு, தண்டோரா உள்ளிட்ட எல்லா வேலைகளையும் செய்து முடித்தனர். கடைசியில் நான் முதன்முதலில் எழுதிய கடிதத்தின்படி வீட்டை அவர்களே எடுத்துக் கொண்டனர். எத்தனை தாக்குதல்களைதான் என் இதயம் தாங்கும்? குடும்பத்தோடு தற்கொலை செய்துக்கொள்ள சிந்திந்த தருணங்கள் எத்தனையோ?

நான் யாரிடம் சென்று உதவி கேட்பேன். பணமும் இல்லை, மனதில் வலுவுமில்லை! அப்போதுதான் சிலர் ஒரு நபரின் பெயரை கூறி அவரை சென்று பார்க்குமாறு கூறினர். அவர் “நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு ” என்ற அமைப்பு மூலம் நுகர்வோர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பாதிக்கப்பட்டோருக்காக நுகர்வோர் குறைத்தீர் மன்றத்தில் வழக்குகள் ஆகியவற்றை நடத்தி வந்தார். அவரிடம் சென்று LIC HFL நிறுவனம் செய்த அநியாயங்களை கூறி உதவி கேட்டேன். அவர் எனக்காக LIC HFL நிறுவனத்திற்கு அறிவிப்பு அனுப்பினார். பின் நுகர்வோர் குறைத்தீர் மன்றத்தில் வழக்கும் தொடர்ந்தார். ஆனால், என்னிடம் ஒரு ரூபாய் கூட அவர் வாங்கவில்லை. அவரிடம் நான் நிறைய விசயங்களை தெரிந்துக்கொண்டேன். சட்டப்புத்தகங்களை மட்டுமே படித்து கொண்டு ஜடமாக இருந்த என்னுள் ஒரு தீ சுடரை உருவாக்கியவர் அவரே என்று சொல்லலாம். அவருடன் நுகர்வோர் குறைத்தீர் மன்றத்திற்கு செல்வேன். அங்கு வழக்குகள் நடத்தும் முறைகளை கவனித்து கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். அவரும் எனக்கு நிறைய சொல்லி தருவார். அவரது துணிச்சல் பல சமயங்களில் என்னை மெய் சிலிர்க்க வைக்கும்.

ஆனால், பாவம் அவர், தன் பணத்தை செலவுச்செய்து அவரால் நீண்ட காலம் சமூக சேவை செய்ய முடியவில்லை. அவருக்கு ஏகப்பட்ட கடனானது. அவர் பணத்திற்காக வேலை தேடியாக வேண்டும் என்ற நிர்பந்தம் ஏற்பட்டது. காரைகாலில் ஒரு கல்லூாயில் நல்ல வேலையிருப்பதாக கூறி அவர் நடத்தி வந்த என் வழக்கு உட்பட எல்லா வழக்குகளையும் என்னிடமே ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார். அங்கு அவருக்கு நல்ல கவுரமான நிர்வாக பணி கொடுத்திருந்தார்கள். அந்த கல்லூரிக்கு செக்யூரிட்டிகள் நியமிக்கும் பொறுப்பையும் அவரிடம் ஒப்படைக்கப்ட்டிருந்தது. அவர் நான் படும் கஸ்டத்தை நன்கு அறிந்தவர். அவர் என்னை ஒரு ஒரு செக்யூரிட்டி சர்வீஸ் ஏஜென்சியை உடனே துவங்கி கல்லூரிக்கு செக்யூரிட்டி போடுமாறு என்னை அறிவுறுத்தினார். நானும் இருந்த பண கஸ்டத்திற்காக “மலையரசி செக்யூரிட்டி மற்றும் மேன் பவர் சர்வீஸ் என்று ஒன்றை ஆரம்பித்து அக்கல்லூரிக்கு செக்யூரிட்டிகளை நியமித்தேன். இரண்டு மூன்று மாதங்கள் அதை நடத்தினேன். ஆனால், எனது மனம் ஏனோ அந்த பணியை ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம், ஒவ்வொரு செக்யூரிட்டிக்கும் அக்கல்லூரி நிர்வவாகம் ஊதியத்தை நிர்ணயிக்கும். அதில் ஒரு பதியை நான் எடுத்துக்கொண்டு மீதியை பணிப்புரியும் செக்யூரிட்டிகளுக்கு கொடுக்க வேண்டும். இது நியாயமாக எனக்கு படவில்லை. அவர்கள் உழைப்பிற்கு வழங்கப்படும் ஊதியத்தை நான் பறிப்பதாக உணர்ந்தேன். அந்த கல்லூரி நிர்வாகத்திற்கு நான் நியமித்திருந்த செக்யூரிட்டிகளின் பணி மிகவும் பிடித்திருந்தது. அதனால், இனி ஊதியத்தை நேரடியாக அந்த செக்யூரிட்டிகளிடமே கொடுத்து விடுங்கள் என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டேன்.

மீண்டும் எனது மாவட்டத்திற்கு வந்து அந்த சமூக சேவகர் சார்பில் நுகர்வோர் குறைத்தீர் மன்றத்தில் ஆஜராகி வழக்குகளை நடத்தினேன். LIC HFL நிறுவனத்தின் மீது எனக்காக போடப்பட்ட வழக்கையும் நானே நடத்தினேன். இந்த வழக்கை விசாரித்த நுகர்வோர் குறைத்தீர் மன்றம் மூன்று வருடங்களுக்குப்பின் இந்த போன்ற புகாரை விசாரிக்க அந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றும், தகுதிவாய்ந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் அறிவுறுத்தி புகாரை தள்ளுப்படிச் செய்தது.

சிந்திக்க வேண்டும். அந்த வழக்கை நடத்த போடப்பட்ட வாய்தாக்கள் எத்தனை? ஒவ்வொரு வாய்தாவிற்கும் தவறாமல் நான் செல்ல நான் மேற்கொண்ட சிரமங்கள் எவ்வளவு? அதற்காக நான் செய்த செலவுகள்தான் எவ்வளவு? வார்த்தைகளால் வரையறுக்க முடியாது. நான் அந்த புகாரை தாக்கல் செய்யும் போதே அதை எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று முறைப்படி தெரிவித்திருக்கலாமே? அப்படி என்றால், அந்த நீதிமன்றம் தனக்கு அந்த வழக்கை விசாரிக்க அதிகாரம் இருப்பதாக நம்பிதானே வழக்கை விசாரிக்க ஆரம்பித்தது. சரி, அந்த தீர்ப்பிலாவது தகுதிவாய்ந்த நீதிமன்றம் எது என்று தெளிவாக குறிப்பிட்டதா என்றால், அதுவும் இல்லை! அப்படி என்றால் அந்த விபரம் அந்த நீதிமன்றத்திற்கே தெரியவில்லை என்று தானே பொருள்? ஒரு நீதிமன்றத்திற்கே தெரியாத ஒரு நடைமுறை சாதாரண பாமரன் எனக்கு எப்படி தெரியும்? நான் எனது பிரச்சனையை எங்கு போய் முறையிடுவது? நீங்கள் தான் சொல்ல வேண்டும்! அந்த உத்தரவின் நகல் www.neethithurai.com என்ற இணையத்தளத்தில் “தீர்ப்புச் சொல்லுங்கள்” என்ற பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

சரி இத்தனை ஆண்டுகள் போராடி விட்டோமே என்று எண்ணி சென்னையிலுள்ள மாநில நுகர்வோர் குறைத்தீர் ஆணையத்தில் மேல் முறையீடு செய்தேன். வழக்கறிஞர் வைத்து வாதாட வசதியில்லை. அங்கும் நானேதான்!. மேல்முறையீடு தாக்கல் செய்து சுமார் மூன்று வருடங்களாக நானும் மாதத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு முறையாவது சென்னைக்கு சென்று வழக்கின் நிலையை அறிந்து வருவேன். எனது வழக்கு இன்னும் விசாரணைக்கு

எடுத்தக்கொள்ளப்படவில்லை என்ற தகவல் மட்டும்தான் கிடைக்கும் வந்து விடுவேன். ஒரு முறை நீலகிரி மாவட்டத்திலிருந்து, சென்னை சென்று வர என்ன செலவாகும்? எவ்வளவு சிரமம் இருக்கும்? நீங்களே கணித்துக்கொள்ளுங்கள்! இடையில் என்னால் ஒரு மாதம் சென்னைக்கு செல்ல முடியாமல் போய்விட்டது. அதன்பின் நான் சென்னைக்கு சென்று எனது வழக்கைப்பற்றி விசாரிக்கும் போது எனது வழக்கு திறந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்ததாகவும் நான் முன்னிலையாகதால் வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டதாகவும் தகவல் கிடைத்தது. அந்த உத்தரவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் சமர்பித்த மனுவும், அதற்கு சட்டத்தில் இடமில்லை என்று கூறி நிராகரிக்கப்பட்டது. அதற்கும் மேல் நான் முறையீடுச் செய்ய வேண்டும் என்றால் டில்லியிலுள்ள தேசிய நுகர்வோர் குறைத்தீர் ஆணையத்தில்தான் மேல் முறையீடுச் செய்ய முடியும்! சென்னையில் கூட வழக்கறிஞரை நியமித்து வழக்கு நடத்த துப்பில்லாத என்னால் டில்லிக்கு சென்று எப்படி வழக்கு நடத்த முடியும்?

நன்றாக சிந்தியுங்கள்! மாநிலத்தின் ஏதோ ஒரு மாவட்டத்தில் வசிக்கும் ஒரு பாமரன் அல்லது வசதியில்லாதவன் தனது வழக்கை தானே நடத்தும் போது குறிப்பாக இது போன்ற மேல்முறையீடுகளை செய்யும் போது சென்னை மாநகரத்திற்கே குடிபெயர்ந்து தினசரி நீதிமன்றத்திற்கு சென்று வழக்கின் நிலையை விசாரித்தால்தான் அவரது வழக்கு விசாரணைக்கு வரும் போது தவறாமல் முன்னிலையாக முடியும். மற்றொரு வழி இது போன்றவர்கள் கண்டிப்பாக வழக்கறிஞரை நியமிக்க வேண்டும். அதற்கான செலவை செய்தே ஆக வேண்டும் நிலை!

எப்படியோ மாவட்ட நுகர்வோர் குறைத்தீர் மன்றத்தில் மூன்று வருடம், மாநில நுகர்வோர் குறைத்தீர் ஆணையத்தில் மூன்று வருடம் போராடி காலமும், உழைப்பும், கஸ்டப்பட்டு சேர்த்த பணமும்தான் வீணானது. இதுதான் இந்த மண்ணின் நீதிபரிபாலனமா?

நுகர்வோர் குறைத்தீர் மன்றத்தில் செய்யப்படும் புகாரை மூன்று மாதத்தில் அதிகப்பட்சமாக ஐந்து மாதங்களுக்குள் தீர்மாணிக்க வேண்டும் என்று நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு-13(3A)-கூறுகிறது. நீதிமன்றத்தாலே கடைப்பிடிக்க முடியாத சட்டமும் சட்டப்பிரிவும்தான் எதற்கு?

5. <u>ரணம்-5–நுகர்வோர் குறைத்தீர்மன்றமும், என் வழக்குகளும்!</u>

எனது மாவட்டத்திலுள்ள நுகர்வோர் குறைத்தீர் மன்றத்தில் ஆஜராகி வழக்குகளை நடத்திக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு நாள் வழக்குகளை அப்போதிருந்த ஒரு அக்குறைத்தீர் மன்றத்தின் தலைவர் நடத்திக்கொண்டிருந்தார். அதுக்குறைத்தீர்மன்றம் என்றாலும் ஒரு சிவில் நீதிமன்றத்தின் அதிகாரத்தை கொண்டதாக சட்டம் கூறுகிறது. எனவே, நீதிமன்றம் என்ற வார்த்தையையும், தலைவரை நீதிபதி என்றும் அனைவரும் புரிந்துக்கொள்வதற்காக பயன்படுத்துகிறேன். தயவுச் செய்து குறைக்கண்டுபிடிக்க வேண்டாம்.

அந்த நீதிபதிக்கு என்னை மிகவும் பிடிக்கும்! திறந்த நீதிமன்றத்தில் என்னை புத்திசாலி என்று அடிக்கடி பாராட்டுவார். நீதிமன்ற ஊழியர்கள் "அவர் யாரையும் பாராட்ட மாட்டார், உங்களை மட்டும் எப்படி அடிக்கடி பாராட்டுகிறார்" என்று ஆச்சரியப்படுவார்கள்.

இந்த நிலையில், ஒருநாள் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்த தினதன்று அந்நீதிமன்றத்தில் பொதுமக்கள்தான் அதிகமாக கூடிநின்றிருந்தனர். திறந்த நீதிமன்றத்தில், அந்த நீதிபதி வழக்குகளை விசாரித்துக்கொண்டிருந்த சமயம் பக்கத்திலிருந்த அவரது அறையில் அவரது செல்போன் மணி அடித்தது. ஒரு நீதிமன்ற ஊழியரை அழைத்து மணி அடித்து கொண்டிருந்த செல்போனை எடுத்து வர சொன்னார். அவர்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதில் அவரது உறவினர் யாரோ ஒருவரிடம் பல நிமிடங்கள் திறந்த நீதிமன்றத்தில் வழக்குகளை விசாரிப்பதை நிறுத்திவிட்டு பேசிக்கொண்டிருந்தார். அந்நீதிமன்ற சுவர்களில் ஆங்காங்கே, நீதிமன்ற அறையினுள் செல்போன் பயன்படுத்த கூடாது என்ற அறிவிப்பு தொங்கவிடப்பட்டிருந்தது. அனைவருக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டிய நீதிபதியின் இச்செயல் அங்கிருந்த பொதுமக்கள் முகம் சுளிக்க செய்தது. இது என்னால் பொறுத்து கொள்ள முடியவில்லை. வீட்டிற்கு வந்ததும் ஒரு வெள்ளை தாளை எடுத்து அந்த நீதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் "அனைவருக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டிய தாங்கள், திறந்த நீதிமன்றத்தில் செல்போனில் பேசியது அனைவரையும் முகம் சுளிக்க வைத்து விட்டது. நீதிமன்ற அறையினுள் செல்போன் பயன்படுத்த கூடாது என்ற அறிவிப்பு தொங்கவிடப்பட்டிருந்த நீதிமன்ற அறையில், அதுவும் வழக்கு விசாரணையின் போது செல்போன் பேசியது நீதிமன்றத்தின் மீது மக்களுக்கு இருக்கும் நன்மதிப்பை கெடுத்துவிடும் எனவே, இனி எதிர்காலத்தில் இப்படி நடக்காமல் பாாத்துக் கொள்ளுமாறு கெஞ்சி கேட்டுக்கொள்வதாக ஒரு கடிதம் எழுதி அஞ்சலில் அனுப்பி விட்டேன். எனக்கு ஆரம்பித்தது கெட்ட நேரம்.

எனது வழக்குகள் ஒவ்வொன்றாக தள்ளுபடி செய்ய ஆரம்பித்தார். அதை விட பெரிய கொடுமையான விசயம் என்னவென்றால், எனது அறக்கட்டளையின் சார்பில் வாதாட எனக்கே தடைவிதித்ததுதான்! அதற்கு அவர் கண்டுப்பிடித்த காரணம் என்ன தெரியுமா?

எனது முழு பெயர் G.மனோகர்ராஜ் ஆகும். இந்தப் பெயர் எனக்கு என் பள்ளி காலம் தொட்டே பிரச்சனைதான். என் பெயரை குறிப்பிடுவோர் G.மனோகர்ராஜ் என்பதற்கு பதிலாக G.மோகன்ராஜ் என்று தவறாக குறிப்பிடுவார்கள். இப்படிதான், அந்த நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த ஒரு வழக்கில் எதிர்தரப்பு என் பெயரை G.மனோகர்ராஜ் என்பதற்கு பதிலாக G.மோகன்ராஜ் என்று தவறாக குறிப்பிட்டிருந்தார்கள். மேலும், பெரும்பாலும் என்னை மனோகர் என்றே எல்லோரும் அழைப்பர். இந்தப் பெயரும் ஒரு வழக்கில் அந்த நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நீதிபதி அவற்றை காரணம் காட்டி, " இவர் G.மனோகர்ராஜ், G.மனோகர் மற்றும் G.மோகன்ராஜ் என்ற மூன்று பெயர்களில் அகில இந்திய மனித உரிமைகள் மற்றும் நலிவடைந்தோர் பாதுகாப்பு அறக்கட்டளை சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து ஆள் மாறாட்டம் செய்துள்ளார். எனவே, இவர் அந்த அறக்கட்டளையின் சார்பில் இந்த நீதிமன்றத்தில் ஆஜராக தடைவிதிப்பதாக உத்தவிட்டார்.

அதன்பின்பு அந்த நுகர்வோர் நீதிமன்றத்திற்கு நான் வேண்டாதவனாகி விட்டேன் நான் தாக்கல் செய்த ஒவ்வொரு வழக்கையும் தள்ளுப்படி செய்துவிட்டனர்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி ஒரு பொருளையோ அல்லது ஒரு சேவையையோ விலை கொடுத்து பெற்று பயன்படுத்துவோர்தான் நுகர்வோர் என்பவராவர்.

இதனடிப்பில் ஒரு சமையல் காஸ ஏஜென்சியின் மீது தொடரப்பட்ட ஒரு வழக்கு.

வழக்கு மிகவும் எளிமையாக புரிந்துக்கொள்ளக் கூடியது. அதாவது, அந்த சமையல் கேஸ் ஏஜென்சி, முன்பதிவுச்செய்த 24 மணி நேரத்தில் சிலிண்டர் விநியோகிக்கப்படும் என்று விளம்பரம் செய்துவிட்டு முன்பதிவுச்செய்து ஒரு மாதத்திற்கும் மேலாகியும் சிலிண்டர் வழங்கவில்லை. கேட்டதற்கு, அவமரியாதையாக ஊழியர்கள் பேசினார்கள் என்பதுதான் புகார். இந்தப் புகாரை என் மனைவி தாக்கல் செய்கிறார். இந்த வழக்கு சுமார் ஒன்னறை வருடங்கள் பக்கம் நடந்தது. வழக்கின் முடிவு என்ன தெரியுமா? சமர்பித்த ஆவணங்கள் சரியானது! அந்த சமையல் கேஸ் ஏஜென்சி முன்பதிவுச்செய்த 24 மணி நேரத்தில் சிலிண்டர் விநியோகிக்கப்படும் என்று விளம்பரம் செய்துவிட்டு முன்பதிவுச்செய்து ஒரு மாதத்திற்கும் மேலாகியும் சிலிண்டர் வழங்கவில்லை என்பதும் சரிதான்.

ஆனால், எதிர்தரப்பு 24 மணி நேரத்தில் சிலிண்டர் விநியோகிக்கப்படும் என்பது தட்டுப்பாடு இல்லாத காலங்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்று வாதிட்டது. ''அப்படி என்றால் ஏன் இப்படி ஒரு பொய்யான, உங்களால் முடியாத உறுதிமொழியை அளித்தீர்கள்'' என்று குறைந்தப்பட்சம் எச்சரிக்கையாவது அந்த நீதிமன்றம் செய்திருக்கலாம். அதைக்கூட செய்யாமல் ''கேஸ் இணைப்பு வழக்கு தொடுத்தவரின் கணவர் பெயரில் உள்ளது எனவே,அவரது மனைவி இந்த வழக்கு தொடர்ந்தது ஏற்றுக்கொள்ள முடியாது என்று வழக்கை தள்ளுப்படிச் செய்தது.

என்னுடைய கேள்வி அந்த வழக்கை தாக்கல் செய்யும் போதே ''சமையல் கேஸ் இணைப்பு உங்கள் கணவர் பேரில் இருப்பதால் உங்கள் கணவர் பெயரில் இருப்பதால் அவர்தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும்'' என்று கூறினால் அந்த நீதிமன்றத்தின் மகுடம் ஏதேனும் கீழே இறங்கி விடுமா என்று எனக்கு தெரியவில்லை.

இந்த வழக்கில் சிலிண்டர் முன்பதிவு செய்தது முதல், அந்த ஏஜென்சியின் ஊழியர்களால் அவமானம் பட்டது வரை எல்லாம் என் மனைவிதான். ஒருவேளை நான் அந்த வழக்கை தாக்கல் செய்திருந்தால் ''நீங்கள் இந்த வழக்கில் நேரடியாக பாதிக்கப்படாததால், நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்யவும் முடியாது, பரிகாரம் கேட்கவும் முடியாது'' என்று தீர்ப்பளித்திருப்பார்கள்!

இதற்கு பரிகாரம் ஒன்று பட்ட கஸ்டத்தை மறந்து விட்டு அனுசரித்து தலைக்குனிந்து செல்வது அது முடியாது என்றால் இந்த வழக்கில் சிலிண்டர் முன்பதிவு செய்தது முதல், அந்த ஏஜென்சியின் ஊழியர்களால் அவமானம் பட்டது வரை எல்லாம் நான்தான் என்று பொய்யான வழக்கும், பொய் சாட்சிகளையும் உருவாக்க வேண்டும்! இதுவா நீதி? இதுவா தர்மம்? இதுவா சட்டத்தின ஆட்சி?

இதே போன்று இன்னொரு வழக்கு ஒரு செல்போன் சர்வீஸ் சென்டரில் எனது பழுதான செல்போனை பழுது நிவர்த்தி செய்து தர கோரி கொடுத்தேன். எனக்கு இரசீது கொடுத்தார்கள். அந்த இரசீதில் சில நிபந்தனைகளும் விதிகளும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி பொருளை அவர்களிடம் கொடுக்கும் போது தோராயமாக செலுத்த வேண்டிய தொகையை கூறுவார்கள். பின் பொருளை( செல்போனை) பரிசோதித்து விட்டு சரியான தொகை எவ்வளவு என்று கூறுவர். சரியான தொகை கூறப்பட்ட ஏழு நாட்களுக்குள் பொருளின் உரிமையாளர் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றால் பொருளை பழுது நீக்கம் செய்யாமல் திருப்பி கொடுக்கப்படும் என்றும், என்று பொருள் திருப்பி கொடுக்க எதிர்பார்க்கப்படும் நாள் என்ற ஒரு குறிப்பும் அதில் இருந்தது. நான் இந்த நிபந்தனைகள், விதிகள் எதையும் படிக்கவில்லை. அவர்களும் அவசரஅவசரமாக கையொப்பம் கேட்டனர். நானும் போட்டுக் கொடுத்துவிட்டு இரசீது வாங்கி கொண்டு எப்போது தருவீர்கள் என்றேன் மூன்று நாட்களில் தருவதாக கூறினார்கள். நானும் வந்து விட்டேன். மூன்று நாட்கள் கழித்து சென்று கேட்டேன் இன்னும் தயாராக வில்லை, ஒரு வாரம் கழித்து வாருங்கள் என்றனர். இப்படியே சுமார் இரண்டு மாதங்களுக்கு மேல் என்னை இழுத்தடித்தார்கள். கடைசியில் போன் செய்து தயாராக இருக்கிறதா என்று உறுதி செய்துவிட்டு வாருங்கள் என்று கூறினர். அதன்பின் அவர்களுடன் செல்போனில் எப்போது கேட்டாலும் தயாராகவில்லை என்றே பதில் கூறினர். அந்த உரையாடல் எனது செல்போனில் அப்படியே பதிவுச்செய்தேன்.

ஒரு நிலையில் நான் ''நீங்கள் எனது செல்போனை சரி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, திருப்பி கொடுங்கள், நான் வேறு எங்காவது கொடுத்து சரி செய்துக் கொள்கிறேன் என்றேன். உடனே அந்த கடைகாரர் படுக்கோபம் கொண்டு ''அப்படி எல்லாம் கேட்வுடன் கொடுத்துவிட முடியாது, கொடுத்துள் இரசீதை படித்து பார்! 7 நாட்களுக்குள் செல்போனை திருப்பி வாங்கி இருக்க வேண்டும், இப்போ, செல்போனை பழுது நீக்கம் செய்யாவிட்டாலும் பணம் செலுத்தினால்தான் திருப்பி கொடுக்க முடியும். அதுவும் இப்போதில்லை, சம்பந்தப்பட்ட பிரிவின் ஊழியர் வந்தப்பின்புதான் கொடுக்க முடியும்'' என்று சற்று அதட்டலாக கூறியதும், நான் ஆடிப்போனேன். அப்போதுதான் அவர்களது இரசீதில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை படித்தேன். அவர்களின் விதிமுறையை அவர்களே பின்பற்றவில்லை என்று தெரிந்துக் கொண்டேன். அவர்களுடன் செல்போனில் பேசிய போது உரையாடல்களை அவர்கள் மீது நுகர்வோர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தேன். செல்போனில் பதிவுச்செய்யப்பட்ட உரையாடலை சி.டியிக்கு மாற்றம் செய்து நீதிமன்றத்தில் சமர்பித்தேன்.

எதிர்தரப்பு, நாங்கள் செல்போனை சரிசெய்து வைத்து விட்டோம். அவர்தான் வந்து பெற்றுக்கொள்ளவில்லை என்று வாதிட்டனர். அந்த வாதத்தின்படி பார்த்தாலும் அவர்களின் விதிகளின்படி நிவர்த்தி செய்ய ஆகும் செலவை நான் அங்கீகரித்த பின்புதானே அவர்கள் பழுதை சரி செய்ய வேண்டும் என்று வாதிட்டேன். அவர்கள் இரண்டு மாதங்களுக்கு மேல் என்னை அலைகழித்துள்ளார்கள் என்பதற்கு சான்றாக பதிவுச் செய்யப்பட்ட செல்போன்

உரையாடலை திறந்த நீதிமன்றத்தில் லேப்டாப் கம்யூட்டரில் ஒலி பெருக்கி உதவியோடு போட்டு காட்டினேன். கடைசியில் தீர்ப்பு என்ன தெரியுமா? பதிவுச் செய்யப்பட்ட செல்போன் உரையாடலை சி.டிக்கு மாற்றம் செய்த நிபுனர் சாட்சியாக விசாரிக்கப்படவுல்லை, மேலும், அந்த உரையாடலை எதிர்தரப்பு முன்பு போட்டு காட்டவில்லை எனவே அந்த ஆவணம் ஏற்றுக்கொள்ள முடியாது. அடுத்தது, நான் இரண்டு மாதங்களாக அந்த செல்போன் சர்வீஸ் சென்டரை அனுகிய தேதிகள் மற்றும் நேரங்களை குறிப்பிட வில்லை. எதிர்தரப்பும் அந்த செல்போனை பழுதுநீக்கம் செய்ய எவ்வளவு கட்டணம் என்று குறிப்பிடவில்லை. அதனால், இந்த நீதிமன்றம் கட்டணமாக ரூ100/- ஐ நிர்ணயிக்கிறது. அப்பணத்தை 10 தினங்களுக்குள் அந்த சர்வீஸ் சென்டரில் கொடுத்து விட்டு செல்போனை பெற்று செல்ல வேண்டும் என்று தீர்ப்பளித்தது. அந்த சர்வீஸ் சென்டர் அவர்களின் நிபந்தனைகளை முறையாக கடைப்பித்தார்களா? என்று பரிசீலிக்கவேயில்லை. ஏனென்றால் இந்த தீர்ப்பை வழங்கியது திறந்த நீதிமன்றத்தில் செல்போன் பேசிய என்னை எதிரியாய் பார்த்த அந்த நீதிபதிதான்.

சென்னையிலுள்ள மாநில நுகர்வோர் உரிமை ஆணைத்தில் செய்த மேல் முறையீட்டில் செலுத்த சொன்ன ரூ100/- மட்டும் தள்ளுபட்டது. வேறு பரிகாரங்கள் வழங்கப்படவில்லை. இந்த வழக்கிற்காக நான் அலைந்தது சுமார் ஒரு வருடத்திற்கு மேலாகும். இனி இரசீதில் கூறியுள்ள நிபந்தனைகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்ற குறைந்தப்பட்ச அறிவுரையைக் கூட நீதிமன்றத்தின் மூலம் அந்த செல்போன் சர்வீஸ் சென்டரின் உரியையாளருக்கு வழங்க முடியவில்லை. பின் எதற்காக இவ்வளவு சிரமப்பட வேண்டும்.

இன்னும் ஒரு வழக்கு

நான் ஒரு முறை ஏர்செல் நிறுவனத்தின் ஒரு புதிய எண் கொண்ட சிம் கார்டு ஒரு கடையில் வாங்கினேன். அடையாள சான்று கேட்டார்கள். எனது வாக்காளர் அடையாள அட்டையின் நகல் கொடுத்தேன். அந்த சிம்கார்டு அடுத்த சில நிமிடங்களில் செயலாக்கம் செய்யப்பட்டது. அதன் பிறகு சுமார் ஒருமாதத்திற்குப்பின் ஏர்செல் நிறுவனத்திடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. அதில் “நான் இன்னும் எனது அடையாள சான்று கொடுக்க வில்லை என்றும், உடனடியாக சமர்பிக்கவில்லை என்றால் இணைப்பு துண்டிக்கப்படும்” என்று கூறினார்கள். நான் எனது அடையாள சான்று கொடுத்துதான் சிம்கார்டு வாங்கியுள்ளேன், நான் கொடுக்கவில்லை என்றால் நீங்கள் எப்படி அந்த சிம்கார்டை செயலாக்கம் செய்வீர்கள் என்று கேட்டேன். அதன்பிறகு திடீரென்று இணைப்பு துண்டிக்கப்பட்டது. நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். அந்த வழக்கு இரண்டு வருடங்கள் நடந்தது. கடைசியில் இது போன்ற தொலைத் தொடர்பு சேவைகள் தொடர்பான புகார்களை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை. மத்திய அரசால் இதற்கென நியமிக்கப்ட்டுள்ள நடுவரிடம் நிவாரணம் பெறலாம் என்று தீர்ப்பளித்தனர்.

அப்படிப்பட்ட நடுவர் யார்? அவரின்அலுவலகம் அல்லது நீதிமன்றத்தின் விலாசம் என்ன? என்ற விபரம் இந்த நீதிமன்றத்திற்கே தெரியவில்லை. இரண்டு வருடம் நான் அலைந்ததுதான் மிட்சம்!

ஒரு தனியார் பள்ளி கூடத்தில் அவர்கள் கேரும் கட்டணம் செலுத்தி அவர்களின் கல்வி சேவையை பெறும் பெற்றோரும், குழந்தைகளும் நுகர்வோர்கள் தானே!

<u>இந்த அடிப்படையில் ஒரு வழக்கை தனியார் பள்ளி கூடம் ஒன்றிக்கு எதிராக நுகர்வோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன். </u>எனது வழக்கு மிகவும் எளிமையாக புரிந்துக்கொள்ளக் கூடியது.

தனியார் பள்ளி கூடத்தில் அவர்கள் கேரும் கட்டணம் செலுத்தி அவர்களின் கல்வி சேவையை பெறும் பெற்றோரும், குழந்தைகளும் நுகர்வோர்களாவார்கள். அந்த தனியார் பள்ளியின் தினசரி நாட்குறிப்பின் ஒரு பகுதியில் சில நிபந்தனைகளும், விதிகளும் குறிப்பிடப்பட்டிருந்தன. அதில், மிக முக்கியமானது படிப்பில் அலட்சியமும், ஒழுக்கக்குறைப்பாடுள்ள குழந்தைகளை, அதற்கான சான்றிழலுடன் பள்ளியிலிருந்து நீக்கம் செய்யப்படும் என்ற வாக்கியங்கள் என் மனதை உறுத்தியது. அவர்கள் குறிப்பிட்டது கல்லூரி மாணவர்களைப்பற்றி அல்ல. LKG முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளைப் பற்றி. அப்படிப்பட்ட குழந்தைகளை சீர்செய்வதுதானே பள்ளிக்கூடத்தின் வேலை? அதற்காக தானே பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகின்றோம்? அவர்கள் கேட்கும் பணத்தை கொட்டித் தீர்க்கின்றோம்? குழந்தைகளிடம் இந்த திறமைகள் எல்லாம் இருந்து விட்டால் எதற்கு பள்ளிக்கூடம்? நோயாளிக்கு தானே மருத்துவமனை? திடமாக இருப்பவர்களுக்கு தான் சிகிச்சை அளிப்போம் என்று கூறினால் சரியாகுமா?

எனவே, அந்த தனியார் பள்ளியின் தினசரி நாட்குறிப்பின் அந்த பகுதியை உடனடியாக நீக்க உத்தரவிட கோரி ஒரு வழக்கை நுகர்வோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த அந்த தனியார் பள்ளியின் தினசரி நாட்குறிப்பின் நகல் அந்த பள்ளியுடையதுதான் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லாததால், மனுவை நிராகரிப்பதாக மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு கூட எடுத்துக் கொள்ளாமல் நிராகரித்தது.

பின் சென்னையிலுள்ள மாநில நுகர்வோர் உரிமை ஆணைத்தில் செய்த மேல் முறையீடு செய்தேன். எனது மனு விசாரணைக்கு வந்தது. அந்த நீதிபதி “ இது என்ன ஸ்கூல் மேல எல்லாம் பெட்டிசன், நீங்களாகவே திரும்ப பெற்றுக் கொள்ளாவிட்டால், 10000 ரூபாய் அபராதம் விதிப்பேன் என்று மிரட்டினார். பேசாமல் மனுவை திரும்பப்பெற்றுக்கொண்டு வந்துவிட்டேன். என்ன செய்வது? இதுதான் நீதி இங்கு!

6. <u>ரணம்-6 –நீதிமன்றத்தில் வழக்கறிஞரின்றி வழக்கு நடத்தும் போது நான் அனுபவித்த அவமானங்களும், நீதிபதிகளும்!</u>

நான் காவல்துறையில் பணியாற்றிய தருணத்தில் அடிப்படை சட்ட அறிவு இல்லாததால் விசாரணை கைதிகள் பட்ட வேதனைகளை எண்ணிப்பார்த்தேன். நம் மக்களுக்கு அடிப்படை சட்ட அறிவு இல்லாததால்தான் குற்றங்கள் அதிகரிக்கின்றன. காவல்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் மக்களை எளிதாக ஏமாற்றி விடுகிறார்கள். அவர்களுக்கு சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தினால் எல்லாம் மாறிவிடும் என்றும், தவறு செய்வோர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நீதிமன்றத்தில வழக்கு தொடுத்து தண்டனை வாங்கி தரலாம் என்றும் எண்ணினேன். நீதிமன்றத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை எனக்கு!

அதுமட்டுமல்லாமல்,எனது நீண்டகால கனவுகளில் ஒன்று ஆதரவற்ற முதியோர்களுக்கான இல்லங்களும், மற்றொன்று பார்வையற்றோரின் வாழ்த்தை தரத்தை உயர்த்த ஏதேனும் செய்ய வேண்டும் என்பதுமாகும். இதை எல்லாம் செய்ய ஏன் ஒரு அமைப்பை ஏற்படுத்தி நடத்தக் கூடாது என்று ஒரு எண்ணம் தோன்றிற்று. ஆனால், அதற்கு பணம் வேண்டுமே என்ன செய்யலாம்? என்று சிந்திந்து நல்ல உள்ளம் கொண்ட சிலரின் உதவியை நாடினேன். அவர்களும் உதவுவதாக வாக்களித்தனர். புத்துணர்ச்சியுடன் ''அகில இந்திய மனித உரிமைகள் மற்றும் நலிவடைந்தோர் பாதுகாப்பு அறக்கட்டளை'' என்று ஒரு அறக்கட்டளையை முறைப்படி பதிவுச்செய்து வெற்றிகரமாக ஆரம்பித்தேன். உதவுவதாக கூறினோர் எனக்கு உறுதுணையாக நின்றனர். ஆனால், இதற்கு எதிர்பார்த்ததை விட பணம் நிறைய தேவைப்பட்டது. எனவே, இந்த அறக்கட்டளைகளின் நோக்கத்தை கூறி ஆதரவாளர்களையும், உறுப்பினர்களையும் சேர்க்கும் பணியை ஆரம்பித்தோம். சுமார் ஆயிரம் பேருக்கு மேல் ஆர்வமுடன் ஒரே மாதத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தனர். அவர்கள் கொடுத்த மாத சந்தா தொகையை கொண்டு ஓரளவிற்கு அடிப்படை செலவுகளை சமாளித்தேன்.

மனித உரிமை மீறல்கள், இலஞ்சம், நுகர்வோர் உரிமை மீறல், சட்ட மீறல்கள் என்ற ரீதியில், இந்த அறக்கட்டளை ஆரம்பித்த சுமார் மூன்று மாதத்தில் 198 வழக்குகள் பல்வேறு அதிகாரிகள் மற்றும் நபர்கள் மீது கீழமை நீதிமன்றம் முதல் உச்ச நீதிமன்றம் வரையிலும், மாவட்ட நுகர்வோர் குறைத்தீர் மன்றம், மாநில நுகர்வோர் குறைத்தீர் ஆணையம், மனித உரிமைகள் ஆணையம், மாநில தகவல் ஆணையம் உள்ளிட்ட எல்லா இடங்களிலும் தகுந்த ஆதாரங்களுடன் தாக்கல் செய்தேன். நீதிமன்றம் நீதி வழங்கும் என்று நீதிமன்றங்கள் மீது அப்படியொரு நம்பிக்கை எனக்கு! இந்த வழக்குகளை ஒரு வழக்கறிஞரை நியமித்து நடத்த எங்களுக்கு வசதியில்லை. இதனால், எல்லா நீதிமன்றங்களுக்கும் நானே சென்று வழக்கை நடத்தினேன். என்னை அரைவேக்காடு என்று அங்கிருந்த சில வழக்கறிஞர்கள் ஏளனமாக பேசி, கேலி செய்வர். அவர்கள் என்னை கேலி செய்ய செய்ய எனக்கு அவர்களை விட சட்டத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்ற வெறிதான் ஏற்பட்டது.

பள்ளிக் குழந்தைகள் முதல் கல்லூரிகள் வரை சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த ஆரம்பித்தோம். பண தேவை தொடர்ந்து விரட்டியது. புத்தகங்கள் மூலமாக சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்று பலர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் சட்டப்பத்திரிக்கை ஒன்றை ஆரம்பித்தேன். நான் கொடுத்த பத்திரிக்கை பெயர்களில் ''நீதிபதி'' என்ற பெயர், இந்தியப் பத்திரிக்கை பதிவு துறையால் அங்கீகரிக்கப்பட்டது. பத்திரிக்கையை வெளியிட்டேன். எனக்கு ஆதரவாளர்களின் எண்ணிக்கை கனிசமாக உயர்ந்தது. இரவு பகல் பாராமல் புத்தகம் எழுதும் பணியை கவனித்தேன். நல்ல வரவேற்பு கிடைத்தது. ஆனால், தொடர்ந்து பத்திரிக்கையை அச்சிட போதிய பணமில்லாததால் அந்த பத்திரிக்கையை அப்படியே விட்டுவிட்டேன்.

பள்ளிக் குழந்தைகளுக்கு சட்ட விழிப்புணர்வு வழங்க வருமாறு பல வழக்கறிஞர்களை அழைத்துள்ளேன். பலர் வர மறுத்துவிட்டனர். வர ஒப்புக் கொண்டவர்கள் பெரும் தொகையை கட்டணமாக கேட்டனர். இதனால், நானே சென்று சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த ஆரம்பித்தேன். ஆனால், இரண்டு மூன்று இடங்களில் நீங்கள் என்ன சட்டம் படித்து பட்டம் பெற்றவரா? சட்டம் சொல்லி தர என்ன தகுதியிருக்கிறது என்ற ரீதியில் கேள்விகள் எழுந்தன. நீதிமன்றத்தில் நானே வழக்குகள் நடத்தும் போது சில வழக்கறிஞர்களின் இழிச்சொல்லிற்கு மீண்டும் மீண்டும் ஆளானேன். ஆதனால், அனைவருக்கும் சட்ட விழிப்புணர்வு அளிக்க வேண்டும் என்ற எனது இலக்கு நிறைவேற வேண்டும் என்றால் நான் சட்ட புத்தகத்தை மட்டும் படித்தால் போதாது, சட்ட கல்லூரிக்கு சென்று படித்து பட்டம் பெற வேண்டும் என்பதை தெளிவாக அறிந்துக்கொண்டேன். இதோடு எனது மனைவி கொடுத்த ஊக்கமும் என்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வைத்தது. நான் ஏற்கனவே, இளங்கலை பட்டதாரி என்பதால் மூன்று வருட சட்டப்படிப்புதான். சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் சட்ட கல்லூரிக்கு விண்ணப்பித்தேன். பள்ளிக்கூட மதிப்பெண் அடிப்படையில் வெளியிடப்பட்ட அனுமதி பட்டியலில் எனக்கு இடம் கிடைக்கவில்லை. பின் கர்நாடக மாநில சட்டப் பல்கலைகழகத்தில் சேர்ந்து படித்தேன். எத்தனையோ கஸ்டங்களுக்கு மத்தியில் மூன்று வருட சட்டப்படிப்பை வெற்றிகரமாக படித்து முடித்தேன். ஆனால், நான் எதிர்பார்த்தப்படி சட்ட கல்லூரி படிப்பு இல்லை. இந்த சட்ட படிப்பு எள்ளளவும் நடைமுறைக்கு ஒவ்வாத, பயனற்ற படிப்பேயாகும் என்பது எனது கருத்து. நான் ஏற்கனவே சொன்னதைப்போல் இது சான்றிதழ் பெறுவதற்கும், பணம் சம்பாதிக்கவும் இருக்கும் ஒரு சம்பிரதாயமாகவே நான் இதைப் பார்க்கின்றேன்.

நான் இப்படி வழக்கறிஞர் இல்லாமல் வழக்கு நடத்துவது அங்கிருந்த சில வழக்கறிஞர்களுக்கு ஆரம்பம் முதலே பிடிக்கவில்லை. நீதிபதியின் காதுப்பட என்னை கேலியும், கிண்டலும் செய்து அவமானப்படுத்துவதை ஒரு வேலையாகவே செய்து வந்தனர். நீதிபதியை நம்பி தான் அந்த நீதிமன்றத்திற்கு நீதிக்கேட்டு சென்றிருந்தேன்! ஆனால், அந்த நீதிபதி ஒரேயொரு முறைக்கூட அந்த வழக்கறிஞர்களடம் அப்படி செய்யக் கூடாது என்று எச்சரிக்கவில்லை! எச்சரிக்கைக் கூட தேவையில்லை குறைந்தப்பட்டம் அப்படி செய்ய வேண்டாம் என்றாவது கூறியிருக்கலாமல்லவா? ஆனால், அந்த நீதிபதியும் அவர்களுடன் சேர்ந்து சிரித்து கொள்வார். என் மனம் அவமானத்தாலும், வேதனையாலும் கூனி குறுகும். ஆனால், ஏதோ ஒரு அற்ப நம்பிக்கை என்னை விடாபிடியாக நீதிமன்றத்தில் தொடர்ந்து வாதாட செய்தது. நீதிமன்றத்திற்கு சென்று முறையிட ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் உரிமையுள்ள நிலையில், என்னை இப்படி அவமதிப்பதுதான் ஏனோ? என்று மனம் கேள்வி கேட்டுக் கொண்டுதான் இருந்தது.

## 7. ரணம்-7–எனது குழந்தை படித்த ஒரு தனியார் பள்ளிக்கூடமும், காவல் ஆய்வாளரின் அராஜகமும்!

இதுப்போன்ற ஒரு காலக்கட்டத்தில் எனது குழந்தை ஒரு ஆங்கில வழிப்பள்ளியில் 4-ம் வகுப்பு படித்து கொண்டிருந்தான். அவன் வகுப்பில் பேசினான் என்பதற்காக மூன்று நாட்கள் வகுப்பிற்கு அனுமதிக்காமல் பள்ளி அலுவலகத்திற்கு வேளியே வெயிலில் நிற்க வைத்து பள்ளியின் முதல்வாரன ஒரு கிறுஸ்துவ கன்னியாஸ்திரி தண்டித்துள்ளார். இதற்கிடையில், குழந்தையின் தாயான எனது மனைவியையும் பள்ளிக்கு அழைத்து அவரையும் குழந்தையுடன் நிற்க வைத்து தண்டித்துள்ளார். அந்த கன்னியாஸ்திரி அந்த பக்கம் வரும் போதும், போகும் போதும் என் மனைவி ஒரு முறை எனது குழந்தையை மன்னித்து விடுங்கள் என்று கெஞ்சியுள்ளார். ஆனால், அன்புள்ளம் கொண்ட அந்த கன்னியாஸ்திரி அதை மதிக்கக்கூட மறந்து போனார். எப்படியோ, மதியம் வரை குழந்தையையும் தாயையும் நிற்க வைத்து தண்டித்த அந்த கன்னியாஸ்திரி அதற்கு பிறகு வந்து, உனது குழந்தையை ஒரு வாரத்திற்கு சஸ்பென்ட் செய்கிறேன், நீ உன் குழந்தையை வீட்டிற்கு அழைத்து செல் என்று கூறியுள்ளார். அப்போது நான் ஒரு வழக்கிற்காக சென்னைக்கு சென்றிருந்தேன். எனது மனைவி இந்த விபரத்தை என்னிடம் உடனே கூறவே இல்லை. எனது மனைவி அக்கன்னியாஸ்திரி ஏதோ கோபத்தில்தான் சொல்கிறார் என்று நினைத்து அடுத்தநாள் குழந்தையை பள்ளிக்கு அனுப்பியுள்ளார். ஆனால், அப்பள்ளி முதல்வரான கன்னியாஸ்திரி என் குழந்தையை வகுப்பிற்குள் மீண்டும் அனுமதிக்கவில்லை. மாறாக, மீண்டும் எனது மனைவியை பள்ளிக்கு வருமாறு தொலைப்பேசியில் அழைத்துள்ளார். மீண்டும் என் மனைவி பள்ளிக் கூடத்திற்கு செல்லவே, அவரிடம் அக்கன்னியாஸ்திரி ''நேற்று நான் என்ன சொன்னேன். அதையும் மீறி உனது குழந்தையை பள்ளிக்கு அனுப்பியுள்ளாய்'' என்று கோபப்பட்டு பேசியுள்ளார். என் மனைவி அப்படியே எனது எதிர்பதம். கோபப்படவே மாட்டார், மிகவும் கனிவாகவே பேசக்கூடியவர். அப்படிப்பட்ட என் மனைவி கெஞ்சி மன்றாடியும் அந்த பள்ளி முதல்வாரன அக்கன்னியாஸ்திரி ''நான் சொன்னது சொன்னதுதான்'' என்று கடுமையாக நடந்திருக்கின்றார். அதன்பின்பு தான் என் மனைவி என்னிடம் நடந்ததை தொலைப்பேசியில் கூறினார். நான் சென்னையிலிருந்து திரும்பி வந்த உடன் குழந்தையின பள்ளி தினசரி நாட்குறிப்பேட்டில் '' 4-ம் வகுப்பு படிக்கும் குழந்தை வகுப்பில் விளையாடுவதும் பேசுவதும் சாதாரண விசயம். இதற்கு அவனது படிப்பையும், மனதையும் கெடுக்கும் வகையில் மூன்று நாட்கள் வகுப்பிற்கு அனுமதிக்காமல் குழந்தை என்றும் பாராமல் வெயிலில் நிற்க வைத்து தண்டிக்க வேண்டிய அவசியம் என்ன?'' என்று எழுத்துப்பூர்வமாக கேட்டேன். அதோடு, ''தங்கள் பள்ளியில் பணியும் ஆசிரியர்களுக்கு ஒரு குழந்தையை கையாளக் கூட தெரியவில்லையோ என்று எண்ண தோன்றுவதாகவும், பதில் அளிக்க வேண்டும் என்றும்'' அதில் குறிப்பிட்டிருந்தேன்.

அதற்கு பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி ஒரு வரியில் எழுத்துப்பூர்வமாக ஒரு பதிலை அனுப்பினார். என்ன தெரியுமா? ''தங்கள் குழந்தையை விரைவில் வேறு பள்ளியில் சேர்த்து கொள்ளுங்கள்'' என்பதுதான் அந்த பதில்.

இந்நிலையில், அரையாண்டு தேர்விற்கான மதிப்பெண் பட்டியல் எனது குழந்தையிடம் பள்ளியின் முதல்வரான அந்த கன்னியாஸ்திரி கொடுத்தனுப்பி இருந்தார். அதில் எனது குழந்தை படிப்பில் வகுப்பில் முதல் மாணவனாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், குறிப்பில் (Remarks) "He is very far from discipline" அதாவது ஒழுக்கத்திற்கு மிக தூரத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்து. இதனால், வகுப்பில் முதல் மாணவனாக இருக்கும் ஒரு குழந்தை என்ன ஒழுக்கம் இல்லாமல் இருக்கிறான், அவனை நல்வழிப்படுத்த என்ன செய்யலாம் என்று விவாதிக்க 20.01.2009 அன்று அப்பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரியை நேரில் சந்திக்க அனுமதி கேட்டு எழுத்துப்பூர்வமான கடிதம் ஒன்றை எனது மனைவியிடம் கொடுத்தனுப்பினேன். அவர் நேரடியாக பள்ளிக்கு சென்று பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரியை சந்தித்து கொடுத்தார். அதன்படி அப்பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி அடுத்த நாள் காலை 10 மணிக்கு சந்திக்க எழுத்துப்பூர்வமான அனுமதி கொடுத்தார். பள்ளியின் முதல்வரை சந்திக்க முன்கூட்டியே எழுத்துப்பூர்வ அனுமதி பெற வேண்டும் என்பது அப்பள்ளிகூடத்தின் விதி.

அதன்படி, அப்பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரியின் முன்அனுமதியோடு 21.01.2009 அன்று காலை 10.30 மணிக்கு நானும் எனது மனைவியும் அப்பள்ளிக்கு சென்றோம். எங்களை பார்த்த அப்பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி எங்களை சந்திக்கும் முன் அங்கு கட்டிட வேலைப்பாாத்துக்கொண்டிருந்த சில நபர்கள் மற்றும் சில ஆசிரியர்களை அழைத்து அவரது அறையில் நிற்க வைத்து விட்டு அதன்பின்புதான் எங்களை அவரது அறைக்குள் அனுமதித்தார். உள்ளே நுழைந்தவுடன் அங்கு நின்றிருந்த பள்ளி கட்டிட வேலை செய்துக்கொண்டிருந்த நபர் என்னை பார்த்து ''நீ என்னா பெரிய இவனா? ஸ்கூல் Teachers-ஐ எல்லாம் தகுதியில்லேனு சொல்ரீயாமா? என்று மிரட்ட ஆரம்பித்தார். உடனே நான் அப்பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரியிடம் ''நாங்கள் உங்களை தனியே பார்த்து பேசதான் அனுமதி கேட்டு வந்துள்ளோம் ஆனால், பள்ளிக்கு சமபந்தமில்லாத இவர்களை கொண்டு எங்களிடம் அநாகரிகமாக பேசுவது முறையல்ல'' என்று கூறியும் அவர் எங்கள் வார்த்தைகளை பொருட்படுத்தவில்லை.

இதனால், அப்பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி, நான் எனது குழந்தையின் தினசரி நாட்குறிப்பில் உங்கள் ஆசிரியர்கள் திறமையற்றவர்களாக தோன்றுகிறது என்று குறிப்பிட்டதால் கோபங்கொண்டு எங்களை மிரட்டதான் இவ்வாறு செய்கிறார் என்று புரிந்துக் கொண்ட நான், எனது பாக்கெட்டிலிருந்த கைப்பேசியை எடுத்து, என்னையும் எனது மனைவியையும் அவமானப்படுத்தி கட்டிட வேலை செய்வோர் அப்பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரியின் அறையில் மிரட்டியதை வீடியோ படிவுச்செய்ய ஆரம்பித்தேன். உடனே , அவர்கள் அதை பிடுங்க என்னிடம் வந்தார்கள்.

எனது மனைவி உடனே வெலிங்டன் காவல்நிலையத்திற்கு போன் செய்து புகார் செய்தார். எனது மனைவி புகார் செய்வதை பார்த்த அக்கன்னியாஸ்திரி அவரது அலுவலக ஊழியர்களை அழைத்து காவல்துறைக்கு புகார் செய்யுமாறு உத்தரவிட்டார்.

சில நிமிடங்களில் ஒரு ஆய்வாளரும் ஒரு காவலரும் அப்பள்ளிக்கூடத்திற்கு வந்தனர். நடந்தவற்றை விசாரித்து பள்ளிக்கூடத்திற்கு சம்பந்தமில்லாத வெளியாட்களை கொண்டு பெற்றோரை மிரட்டியது சரியல்ல என்று அவருக்கு அறிவுரை கூறினார். எங்களையும் பள்ளி நிர்வாகத்தோடு அனுசரித்து போகுமாறும் அறிவுறுத்தி, நாங்கள் கொடுத்த புகாரையும் வாங்க மறுத்து சமரசம் செய்து விட்டு, சென்றார். நாங்களும் எங்களது வேலையை கவனிக்க சென்றுவிட்டோம். இந்த பிரச்சனையை நான் மறந்தே போனேன். ஆனால், அப்பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி மறக்கவில்லை. காரணம், நான் அன்று எனது கைப்பேசியில் எடுத்த வீடியோ. நான் அதை வெளிட்டாலோ மற்றவர்களிடம் காட்டினாலோ அது அப்பள்ளியின் நன்மதிப்பை பெருமளவு சிதைத்துவிடும் என்பதே அவர் அச்சத்திற்கு காரணம். அதனால், அவர் அவருக்கு தெரிந்த அப்பகுதியின் காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் அவர்களிடம் அந்த வீடியோ பதிவுகளை எப்படியாவது அழித்துவிடுமாறு கேட்டுள்ளார். அவரும், அப்பகுதியின் ஆய்வாளர், அதாவது, ஏற்கனவே, சம்பவதன்று வந்து சமரசம் செய்து வைத்தவரிடம் என்னிடமுள்ள அந்த வீடியோ பதிவுகளை பறிமுதல் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

இதனால், இப்பிரச்சனையை முடித்து வைத்த ஆய்வாளர் சசிகுமார் அவரது கைப்பேசி மூலம் என்னை தொடர்புக் கொண்டு உடனடியாக பள்ளிக்கு சென்று அவர்களிடம் ஒரு மன்னிப்பு கடிதம் கொடுத்துவிட்டு செல்போனில் எடுத்த வீடியோ பதிவுகளை பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரியிடம் கொடுத்துவிட வேண்டும். தவறினால் அதிகபட்சமாக எத்தனை பிரிவுகளில் வழக்கு பதிவு செய்ய முடியுமோ அத்தனை பிரிவுகளிலும் வழக்கு பதிவு செய்ய DSP உத்தரவிட்டுள்ளார் என்று எச்சரிக்கை விடுத்தார். அப்போது என்னிமிருந்த கைப்பேசியிக்கு யார் அழைத்து பேசினாலும் தானே அந்த உரையாடல் பதிவாகும். ஆதே போன்று அந்த ஆய்வாளர் என்னை எச்சரித்தது எனது கைப்பேசியில் பதிவாகிவிட்டது. ‘‘நான், அந்த பிரச்சனையை அன்றோடு விட்டுவிட்டேன். நான் எந்த தவறும் செய்யாத நிலையில் மன்னிப்பு கடிதமோ, வீடியோ பதிவுவோ எதுவும் தரவேண்டிய அவசியமில்லை’’ என்று கூறிவிட்டேன்.

ஆனால், அந்த ஆய்வாளர் என்னை விடுவதாக இல்லை, தொடர்ந்து என்னை மிரட்ட ஆரம்பித்தார். இதனால், நான் கோவை சரக DIG அவர்களுக்கு அந்த ஆய்வாளர் மீது புகார் மனு ஒன்றை பதிவு அஞ்சலில் அனுப்பி வைத்தேன். அதன் நகலை மிரட்டிய ஆய்வாளர் சசிகுமார் என்பவருக்கும் அனுப்பிவைத்தேன். அவ்வளவுதான், அந்த ஆய்வாளர், எனது வாழ்க்கையை தலைகீழாக புரட்டிப் போட்டுவிட்டார் என்று சொன்னால் அது மிகையல்ல.

ஆவர் மீது புகார் அனுப்பியதால் கடுங்கோபமடைந்த அந்த ஆய்வாளர் ஒரு நாள் அதிகாலை 05.30 மணிக்கு சுமார் ஐந்து காவலர்களுடன் சில அடையாளம் தெரியாத நபர்களுடன் திடீரென வந்து வீட்டின் கதவை தட்டினார். எனது மனைவி தூக்க கலக்கத்தில் சென்று கதவை திறந்தவுடன் அவரை தள்ளிவிட்டு விட்டு 'vq;fb mtd;"என்று எனது படுக்கை அறைக்குள் நுழைந்து தூங்கி கொண்டிருந்த என்னை கட்டிலிலிருந்து இழுத்து கீழே தள்ளி ‘‘எங்கடா ஸகூலில் எடுத்த வீடியோவும், நான் பேசியதை பதிவு செய்த செல்போனும்’’ என்று மிரட்டி என்னை ஒரு வழி செய்து விட்டார்கள். நான் கட்டியிருந்த லுங்கியை பிடித்து இழுத்து நிர்வாணப்படுத்தினர். இதை சொல்ல நான் கூச்சப்படவில்லை. காரணம், இது போன்ற அசிங்கங்கள் எனது தலைமுறையோடு முடியவேண்டும் என்று விரும்புகின்றேன். நான் மறைத்து எழுதினால், எந்த நன்மையும் நடக்காது.

பக்கத்து அறையில் படுத்திருந்த எனது அம்மா சத்தம் கேட்டு கூச்சல் போடவே, என்னை இருவர் பிடித்து கொண்டு, பக்கத்து அறையில் இருந்த எனது இரண்டு செல்போன்களையும் எடுத்து கொண்டனர். இதற்கிடையில் எனது மனைவி அவரது கைப்பைக்குள் இருந்த செல்போனை எடுக்க செல்லும் போது, ஆய்வாளர் சசிக்குமார் என்பவர் கைப்பையோடு சேர்த்து அதை பிடுங்கி கொண்டார். அதில் பள்ளி குழந்தைகளுக்கு பரிசுப்பொருட்கள் வாங்க வைத்திருந்த ரூ 14,450 பணமும் இருந்தது. ஆனால், அனைத்து விபரங்களும் பதிவுச்செய்து வைக்கப்பட்டிருந்த ரூ 25,000 மதிப்புள்ள செல்போனை எனது மனைவி எடுத்து கையில் வைத்துக்கொண்டார். அதை அவரிடமிருந்து மிக சுலபமாக அந்த கூட்டம் பிடிங்கிவிட்டது. கதவையும் உட்புறமாக தாளிட்டு திறக்க விடவில்லை. இதனால் எனது மனைவி அவர்களுக்கு தெரியாமல் எனது குழந்தையை சன்னல் வழியாக விட்டிற்கு வெளியே அனுப்பி விட்டு அக்கம் பக்கம் உள்ளவர்களையும், அறக்கட்டளையின் உறுப்பினர்களையும் அழைத்து வர சொல்லி அனுப்பினார். சில நிமிடங்களில் அக்கம் பக்கம் உள்ளோரும், அறக்கட்டளை உறுப்பினர்களும் வந்து விட்டார்கள். ஆனால், அதற்குள் அந்த கூட்டம் அறக்கட்டளையின் அலுவலகம், வீடு எல்லாவற்றையும் அடித்து நொறுக்கி வழக்கு ஆவணங்களை கிழித்தும் சொல்லொண்ணா அக்கிரமத்தை செய்து விட்டு தப்பித்து ஓடிவிட்டார்கள். இடையில் தடுக்க வந்த 72 வயதான எனது தாயை அந்த ஆய்வாளர் வேகமாக பிடித்து தள்ளியதால் நிலைக்குலைந்த எனது தாய் சில நிமிடம் சுயநினைவின்றி இருந்தார் பின்னர் அருகிலிருந்தவர்கள் அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இந்த நிகழ்வு கொடுமையின் உச்சம். என் இரத்தம் கொதித்தது, செயலற்று நின்றேன். எனது அறக்கட்டளையின் உறுப்பினர்கள்தான் என்னை தேற்றினர். அவர்களின் அன்பையும், ஆறுதல்களையும் என் வாழ்நாள் உள்ளவரை மறவேன்.

8. <u>ரணம்-8 –என் மீது போட்டப்பட்ட முதல் பொய் வழக்கு!</u>

அவர்களின் ஆலோசனைப்படி நாங்கள் அனைவரும் உடனடியாக புறப்பட்டு கோவை சரக DIG அவர்களின் அலுவலகம் நேரில் சென்று புகார் அளித்தோம். அதோடு, குடியரசு தலைவர், மனித உரிமைகள் ஆணையம், தலைமை செயலகம் என பலருக்கு புகார் அனுப்பினோம்.

நாங்கள் முடிந்தளவு எல்லா இடங்களுக்கும் புகார் அனுப்பி விட்டு திரும்பி வந்துக்கொண்டிருந்தோம். நான் ஏற்கனவே காவல்துறையில் பணியாற்றிய வகையில் எனது நண்பர்கள் நிறைய பேர் காவல்துறையில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் என்னை செல்போனில் அழைத்து “ நீ கோவை சரக DIG அவர்களின் அலுவலகம் நேரில் சென்று ஆய்வாளர் மீது புகார் கொடுத்த விபரத்தை அங்கிருந்த ஒருவர் ஆய்வாளரிடம் கூறிவிட்டார். ஆய்வாளர், அந்த பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரியிடம் சென்று இப்போதுதான் ஒரு புகார் வாங்கிவந்து உன் மீதும், உன் மனைவி மீதும் FIR ஒன்றை பதிவு செய்து உங்களை கைது செய்ய அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளார். நீங்கள் இங்கு வந்தால் கன்டிப்பாக கைது செய்யப்படுவீர்கள், பத்திரம்” என்று எனக்கு ஒரு எச்சரிக்கை மணியை அடித்தார். எனது தாய் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார். எனது அறக்கட்டளை உறுப்பினர்கள் எனக்கு ஆறுதல் அளித்தனர். அவர்கள் எனது தாயை கவனித்துக் கொள்வதாகவும், முன் ஜாமீன் வாங்கும் வரை எங்கையாவது தலை மறைவாக இருக்குமாறும் எங்களுக்கு அறிவுறுத்தினர். இன்றைய தினம் எனது ஒன்று விட்ட அக்கா வீட்டில் தங்கினோம். பின்பு மறு நாள் எனக்கு தெரிந்த ஒரு வழக்கறிஞரை தொடர்புக் கொண்டு விபரத்தை கூறினேன். அவர் நீதிமன்றத்தில் எங்களுக்கு எதிராக ஏதேனும் FIR ஏதாவது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று பார்த்துவிட்டு சொல்வதாக கூறினார். சில வினாடிகளில் அவரே என்னை அழைத்து ஆமாம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அது எனக்கெதிராக மட்டும் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனது மனைவியின் பெயர் இல்லை என்றும் தெரிவித்தார். சற்று நிம்மதி பெருமூச்சு விட்டுவிட்டு என் மனைவியை வழக்கறிஞரை சந்தித்து முன்ஜாமீன் பெற நடவடிக்கை எடுக்குமாறு கூறிவிட்டு, அதுவரை நான் அங்கும் இங்கும் அலைந்துக்கொண்டிருந்தேன். நான் ஒரு பக்கம் எனது மனைவி ஒரு பக்கம், எனது தாய் மற்றும் குழந்தை ஒரு பக்கம் தவித்துக்கொண்டிருந்தோம். நாங்கள் செய்த குற்றம்தான் என்ன? பள்ளிக் கூடத்தை எதிர்த்து கேள்வி கேட்டதா? அல்லது அவர்கள் அடியாட்களை வைத்து மிரட்டியதை பதிவுச்செய்ததா? நீங்களே தீர்ப்பெழுதுங்கள்!

கடைசியில் , ஒரு வழியாக மாவட்ட முதன்மை நீதிமன்றம் சில நாட்களுக்கு பிறகு வாரத்திற்கு இரண்டு நாட்கள் சம்பந்தப்பட்ட அதே காவல் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் எனக்கு முன்ஜாமீன் வழங்கியது. பல வாரங்கள் கையொப்பமிட்டேன், பின் மீண்டும் வழக்கறிஞரை வைத்து நிபந்தனையை நீக்கம் செய்ய மனு சமர்பித்தேன். வாரத்திற்கு ஒரு நாள் கையொப்பமிட வேண்டும் என்று நிபந்தனையை தளர்த்தியது நீதிமன்றம். சில வாரங்கள் அப்படி கையொப்பம் போட்டு வந்தேன். அதற்கு பிறகு மீண்டும் வழக்கறிஞர் மூலம் மனுதாக்கல் செய்து கேட்டதால் நிபந்தனை முழுமையாக நீக்கம் செய்யப்பட்டது.

பின் அந்த ஆய்வாளர் அந்த பள்ளிக்கூடத்தை சேர்ந்த சில ஆசிரியர்களை பொய்சாட்சிகளாக தயார் செய்து குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அதில் என் மனைவியையும் சேர்த்து விட்டார்.

நன்றாக நீங்கள் கவனிக்க வேண்டும். காவல்துறையில் இருந்த ஒரு நன்பரால் நான் அதர்மமான முறையில் சிறைக்கு செல்லதிலிருந்து தப்பி விட்டேன். எனக்கு தகவல் தெரியாமல் போயிருந்தால் எந்த குற்றமும் செய்யாமல், நீதிமன்ற விசாரணையும் இல்லாமல் நான் சிறைக்கு சென்றுதான் ஆக வேண்டுமா? சட்டம் படித்து பட்டம் பெற்று ஒரு வழக்கறிஞராக நான் இருந்தாலும் இந்த நிமிடம் வரை இந்த கேள்வி என்னை விட்டு அகலவில்லை. யாரோ சிலர் பணம் சம்பாதிக்க வழிவகுக்கும் முட்டாள்தனமான சம்பிரதாயமாகவே நான் பார்க்கின்றேன். பரவாயில்லை, உங்களிடம் முறையிட்டுவிட்டேன் அல்லவா? நீங்கள் தானே இந்த ஜனநாயக நாட்டின் சக்கரவர்த்திகள்! நீங்கள் இதை மாற்றுவீர்கள் என்று நம்புகின்றேன்.

9. <u>ரணம்-9 – என் மீது போட்டப்பட்ட இரண்டாவது பொய் வழக்கு!</u>

இதற்கிடையில், அந்த பள்ளிக்கூடத்திற்கு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்கீழ் ஒரு கடிதம் எழுதி பல்வேறு தகவல்களை கேட்டிருந்தேன். அதற்கு பதிலளித்த அந்த பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி எனக்கு ஒரு எச்சரிக்கையை பதிலாக அளித்தார். அதில் செல்போனில் நான் பதிவுச்செய்த அந்த வீடியோக்களை பிடுக்க அந்த ஆய்வாளரை வைத்து மேற்கொண்ட முயற்சிகளை சுட்டிக்காட்டியிருந்தார். ஆய்வாளர் தனது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்ததை நிரூபிக்க அந்த ஆவணம் எனக்கு நல்ல ஆதராரமாக அமைந்தது.

இந்த நிலையில், மாவட்ட முதண்மை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அந்த ஆய்வாளர் மற்றும் உடன் உடந்தையாக வந்தோர் மீது நான், எனது மனைவி, எனது அம்மா மற்றும் அறக்கட்டளையின் செயலாளர் ஆகிய அனைவரும் சேர்ந்து ஒரு தனிப்புகார் தாக்கல் செய்தோம். அதில் மேற்சொன்ன அந்த ஆவணத்தையும் தாக்கல் செய்திருந்தேன். அதில் நானே வாதாட ஆரம்பித்தேன். புகாரின் மீது நடத்தப்பட்ட முதண்மை விசாரணையில் புகாரில் முகாந்திரம் இருப்பதை உணர்ந்த நீதிமன்றம் இ.த.ச பிரிவுகள் 451 மற்றும் 392-ன் கீழ் எனது புகாரை ஏற்றுக்கொண்டு அந்த ஆய்வாளர் மற்றும் பிறருக்கு சம்மன் அனுப்பி விசாரிக்க ஆரம்பித்தது. உடனே, அந்த ஆய்வாளர் அவர் செய்த குற்றத்தை ஓரளவு உறுதி செய்யும் அந்த பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி அனுப்பிய கடிதத்தின் பலத்தை குறைக்க அது போலியாக உருவாக்கப்பட்டது என்று மீண்டும் அந்த பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரியிடம் ஒரு புகாரை பெற்று மீண்டும் என் மீது ஒரு முதல் தகவல் அறிக்கையை பதிவுச்செய்தார். மீண்டும் எனக்கு முன்ஜாமீன்

தேவைப்பட்டது. உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞரை நியமித்து முன் ஜாமீன் பெற்றேன். அதில் எனக்கு எந்த நிபந்தனையும் விதிக்கப்பட வில்லை. ஆனால், எங்கு சென்றாலும் அந்த ஆய்வாளர் அந்த பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி அனுப்பிய கடித்தத்தைப் பற்றி பேசினாலே, அந்த FIR-ஐ கூறி அது பொய்யான உருவாக்கப்பட்டது, காவல் துறை விசாரணை செய்துக்கொண்டுள்ளது என்பார். என் மீது பதிவுச்செய்யப்பட்ட FIR இரண்டாகி போனது.

10. <u>ரணம்-10– நீதிக்காக அலைந்த பாமரன் நான்! அர்த்தமற்ற நீதி பரிபாலனம்!</u>

இந்த நிலையில், அந்த ஆய்வாளர், அவருக்கு எதிராக எங்களால் எதிராக மாவட்ட முதண்மை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தடையுத்தரவும், அந்த வழக்கையே தள்ளிப்படிச் செய்ய வேண்டும் என்றும் ஒரு வழக்கறிஞரை நியமித்து வழக்கு தாக்கல் செய்தார். உடனே, உயர்நீதிமன்றம் அவருக்கு தடையுத்தரவு வழக்கியது. உயர்நீதிமன்றம் தடையுத்தரவு வழங்கியப்பின்தான் அவர் உயர்நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்துள்ள விபரமே எனக்கு தெரியும். நாங்கள் தாக்கல் செய்த வழக்கு விசாரணை கிடப்பில் போடப்பட்டு வாய்தா மட்டும் போடப்பட்டது. அந்த ஆய்வாளரும் மற்றவர்களும் வழக்கறிஞரை நியமித்திருந்தார்கள். ஒவ்வொரு வாய்தாவிலும் அந்த வழக்கறிஞர் அவர்கள் நீதிமன்றத்திற்கு வராததற்கு காரணம் கூறி மனு சமர்பிப்பார். நீதிபதியும் ஏற்றுக்கொள்வார். ஆனால், நாங்கள் வழக்கறிஞர் வைத்து வாதாட பணம் இல்லை, அதனால், நாங்கள் அனைவரும் நீதிமன்றத்தில் ஒவ்வொரு வாய்தாவிலும் தவறாமல் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும். அப்படியாகாமல் போனால், இவ்வளவு கொடுமைகளை அனுபவித்து, பல கஸ்டங்களுக்கிடையில் தாக்கல் செய்த வழக்கு தள்ளுப்படிச் செய்யப்பட்டு விடும். என்ன செய்ய குற்றம் செய்தோர் நீதிமன்றத்திற்கு வருவதேயில்லை! பாதிக்கப்பட்ட வழக்கறிஞர் கூட வைத்து வாதாட வசதியில்லாத நாங்கள் ஒவ்வொரு வாய்தாவிற்கும் தவறாமல் சென்று கொண்டிருந்தோம். எங்கள் வீட்டிற்கும் நீதிமன்றத்திற்கும் சுமார் 20 கிலோமீட்டர் தூரம். எங்களது மலை பிரதேசத்தில் 20 கிலோ மீட்டர் என்பது சமவெளி பகுதியுடன் ஒப்பிட்டால் 50 கிலோமீட்டர் தூரத்திற்கு ஒப்பிடலாம். அவ்வளவு சிரமம். எங்கள் மாவட்டம் சுற்றுலா மாவட்டம் என்பதால் எப்போதும் சாலை நெரிசல் இருந்து கொண்டேயிருக்கும். இதில் எனது நடக்க முடியாத வயதான தாய் மற்றும் எனது மனைவியை அழைத்துக் கொண்டு நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு வாய்தாவிற்கும் செல்ல வேண்டும். எவ்வளவு சிரமம் இருக்கும் என்று நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். ஆனால், எனக்கு அந்த சிரமம் பெரிதாக தெரியவில்லை! இப்படியொரு அநீதியை, கொடுமையை இழைத்த அந்த ஆய்வாளர் தண்டிக்கப்பட வேண்டும், அவர் பெறும் தண்டனை இது போன்ற மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும், நீதிமன்றம் நிச்சயம் நீதி வழங்கும் என்ற எண்ணம் தான் என் மனம் முழுக்க பரவியிருந்தது. அதனால், ஒரு வாய்தாவிடாமல் சென்றேன். ஒரு நாள் இல்லை, இரண்டு நாட்கள் இல்லை சுமார் ஆறு வருடங்கள் நீதமன்றத்திற்கு நீதிக்காக ஓடினேன்.

இந்நிலையில், உயர்நீதிமன்றத்தில் அந்த ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள வழக்கை நடத்த ஒரு வழக்கறிஞரை நான் நியமிக்க வேண்டும். வழக்கறிஞர்களிடம் சென்றால் ரூ30,000/- ரூ50,000/- என்று சர்வ சதாரணமாக கட்டணம் கேட்டனர். ஒரு வழியாக ஒரு வழக்கறிஞரை பிடித்து கொஞ்சம் கொஞ்மாக பணம் தருவதாக கூறி அந்த வழக்கை எதிர் கொள்ள செய்தேன். திடமான மனமும், அடிப்பட்டு ரணமான இதயமும்தான் என்னிடம் இருந்தது, பணம் இல்லை!

இந்த நிலையில், அதே போன்று வாய்தாவிற்கு சரியான நேரத்திற்குள் செல்ல வேண்டுமே என்று அடித்துபிடித்து நீதிமன்றத்திற்கு சென்றேன். எனது வழக்கு கூப்பிடவேயில்லை. பின்பு நீதிமன்ற பணிகள் எல்லாம் முடிந்ததும் அந்த நீதிமன்ற ஊழியரிடம் கேட்டேன். அவர் ‘‘ உங்கள் வழக்கை தள்ளுபடிச் செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுவிட்டதே’’ என்று சாதாரணமாக சொன்னார். நான் அதிர்ந்து போனேன். உயர்நீதிமன்றத்தில் நான் நியமித்த வழக்கறிஞரை தொடர்புக்கொண்டு விசாரித்தேன். அவர் ‘‘அப்படியா பார்த்துச் சொல்கிறேன்’’ என்றார். அவர் அந்த வழக்கு விசாரணை நாளன்று நீதிமன்றம் செல்லவேயில்லை என்பது பின்னர்தான் தெரிந்தது. எனினும், உயர் நீதிமன்றம் ஆதாரங்களையும் ஆவணங்களையும் பரிசீலித்து அற்புதமான முறையில் நீதியை நிலைநாட்டியதை நினைத்தால் இந்த நாட்டின் நீதிபரிபாலணத்தின் லட்சணம் என்ன என்பது தெரிந்து விடும். அந்த ஆய்வாளர் மற்றும் சிலர் மீது நாங்கள் தாக்கல் செய்த புகார் மனுவை தள்ளுபடிச் செய்வதாக உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு காரணம் என்ன தெரியுமா? அந்தப் புகார் மனுவை நான்கு பேர் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோமாம். ஒரு புகார் மனுவில் புகார்தாரர் ஒருவர்தான் இருக்க வேண்டுமாம். இந்த விபரம் நான் புகாரை தாக்கல் செய்த நீதிமன்றத்திற்கே தெரியாததால்தான் எங்களது புகாரை கோப்பிற்கு எடுத்து ஆய்வாளருக்கு சம்மன் அனுப்பியது. ஒரு நீதிமன்றத்திற்கே தெரியாத இந்த விசித்திரமான நடைமுறை சதராரண பாமரனாகிய எனக்கு எப்படி தெரியும்? பாதிக்கப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்டோர் சேர்ந்து குற்றம் செய்தோர் மீது ஒரே புகாராய் தாக்கல் செய்தால் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டுவிடுவர் என்பது நியாயமா? நீங்களே தீர்ப்பெழுதுங்கள்.

அவர்கள் மீது நான் மீண்டும் புதிய மனுவை தாக்கல் செய்ய முடியும் என்று எனக்கு தெரியும். அதற்காக நான் மேற்கொள்ள வேண்டிய அளவிற்கு மீறிய சிரமம்தான் என் கண்முன் வந்து நிற்கிறது. இல்லை என்றால் நான் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும். அந்த அளவிற்கு என்னிடம் பணமுமில்லையே என்ன செய்ய முடியும்? அதனால்தான் இந்த ஜனநாயக சக்கரவர்த்திகளான உங்களிடம் நேரடியாக மேல்முறையீடுச் செய்வதென முடிவுச்செய்துவிட்டேன். நீங்களே தீர்ப்பெழுதுங்கள். நமது நாட்டில் சாதாரண குடிமகனுக்கு கிடைக்கும் நீதியை நினைத்துப் பாருங்கள்! பணமிருந்தால்தான் நீதிக்காக வாழ்க்கை முழுவதும் போராடலாம். பணம் இல்லாதவனின் நிலை?

11. <u>ரணம்-11, மாநில மனித உரிமை ஆணையமும், எனது புகாரும்!</u>

நானும், எனது அறக்கட்டளை உறுப்பினர்களும் இணைந்து அந்த ஆய்வாளர் மீது குடியரசு தலைவர் முதல் சரக DIG அவர்கள் வரை ஏறக்குறைய எல்லா அதிகார நிலையினருக்கும் அளித்த புகார்கள் கிணற்றில் போட்ட கல்லாய் போனது. ஆனால், திடீரென்று பல மாதங்களுக்கு பிறகு மாநில மனித உரிமைகள் ஆணையம், ஒரு உயர் போலீஸ் அதிகாரி தலைமையில் ஒரு விசாரணை குழு ஒன்றை அமைத்து புகாரில் முகாந்திரம் இருக்கிறதா என்று விசாரிக்க ஆரம்பித்தது. அதுவே பல கட்ட விசாரணை. ஒரு வழியாக விசாரணை முடிந்தது. இனி நாங்கள் கொடுத்த புகாரில் ஏதேனும் உண்மை இருப்பதாக அந்த விசாரணை அதிகாரி அறிக்கை சமர்பித்தால்தான் எங்கள் புகாரை முறைப்படி மாநில மனித உரிமைகள் ஆணையம் விசாரிக்க ஆரம்பிக்கும். ஆனால், அந்த விசாரணை குழுவின் விசாரணை முடிந்து வருடங்கள் பல கழிந்து விட்டது. ஆனால், பதில் ஏதுமில்லை. நானும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் மனு அனுப்பி விபரம் கேட்டுக்கொண்டேயிருந்தேன். புலனாய்வுப் பிரிவின் அறிக்கை கிடைக்கவில்லை என்று பதில் வந்தது. ஏறக்குறைய அந்த வழக்கை நான் மறந்தே போனேன். அப்போது, சுமார் 5 ஆண்டுகள் கழித்து கடந்த ஆண்டு அதாவது 2015 ஆம் ஆண்டு மனித உரிமை ஆணையத்தில் விசாணைக்கு ஆஜராகுமாறு முறைப்படி அழைப்பாணை வந்தது.

சம்பவம் நடந்தது 2009-ஆம் ஆண்டு , விசாரணை குழு தனது விசாரணையை முடித்ததும் 2010-ஆம் ஆண்டு, மாநில மனித உரிமை ஆணையம் விசாரணையை துவங்குவது 2015-அம் ஆண்டு. என்ன அனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே இது போன்ற ஒரு உன்னதமான நீதிபரிபாலனம் உள்ள இந்த மண்ணில் வாழ நாம் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும்! இல்லையா? சரி இப்போதாவது வேகமாக விசாரணையை முடிப்பார்களா என்று பார்த்தால் மாதத்திற்கு ஒரு வாய்தா! அதற்குள் மீண்டும் அந்த ஆய்வாளர் உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு தடைவிதிக்கக் கோரி ஒரு மனு சமர்பித்தார். உடனே, மாநில மனித உரிமை ஆணையம் விசாரணையை நிறுத்திவிட்டது. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு முடிந்தப்பின் தான் விசாரணையை தொடரமுடியும் என்று தடையுத்தரவு இல்லாத நிலையில் வழக்கு விசாரணையை நிறுத்தி விட்டது. இனி எங்கிருந்து நீதி கிடைக்க போகிறது? பட்டது பட்டதுதான்? பரிகாரம் பணிந்து போவதே! இதுதான் இந்த நாட்டின் நீதிநெறியாக உள்ளது! யாரிடம் சென்று அழ? இறுதியாக உங்களை நம்பி கண்களை துடித்துக்கொண்டு எழுதுகின்றேன்! எழுந்து வாருங்கள்! இன்றைய நீதித்துறையை அஸ்திவாரம் முதல் பிடிங்கி எடுப்போம். புதிய நீதிநெறி வகுப்போம்! நீங்களே இந்த நாட்டின் சக்கரவர்த்திகள் என்பதை மறக்காதீர்கள்! சலித்துக்கொள்ளாதீர்கள்! நம் குழந்தைகளுக்காக...

12. <u>ரணம்-12 –நீதி மன்ற நடைமுறையைப் பார்த்து வாயடைத்து நின்ற தருணம்!</u>

இந்த சம்பவத்திற்கு பிறகு அந்த பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி எனது குழந்தையின் மாற்று சான்றிதழை பதிவு அஞ்சலில் எனக்கு அனுப்பி வைத்தார். அதற்குமுன் கேவியட் மனு என்ற ஒன்றை ஒரு வழக்கறிஞரை வைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். காரணம், அவர் எனது குழந்தையின் மாற்று சான்றிதழைக் கட்டாயமாக பதிவு அஞ்சலில் அனுப்பியதற்கு எதிராக நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தடையுத்தரவு பெற்று விட கூடாது என்பதால்தான். அவர் எதிர்பார்த்தபடியே நான் நீதிமன்றத்திற்கு சென்று ஒரு சிவில் வழக்கை தாக்கல் செய்து நானே வாதாட ஆரம்பித்தேன். எனது குழந்தையை மீண்டும் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும், பெற்றோர் பள்ளி நிர்வாகத்தை எதிர்த்து கேள்வி கேட்டால் குழந்தை கட்டாயமாக பள்ளியிலிருந்து நீக்கப்பட்டு விடுவர் என்ற நடைமுறை ஒரு தவறான முன்னுதாரணமாகிவிடும் என்று மன்றாடினேன். எதிர்தரப்பு வழக்கறிஞர் மிக சுலபமாக வாய்தா வாங்கி கொண்டிருந்தார். அவர் கேட்டவுடன் நீதிமன்றம் வாய்தா வழங்கியது. ஒரு குழந்தையின் எதிர்காலத்தை பற்றி நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை. எனது முறையீட்டை செவி கொடுத்து கேட்கவில்லை. காலம் கடந்துக்கொண்டிருந்தது. அடுத்த கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கையை எல்லாப்பள்ளிகளும் முடித்துவிட்டது. எனது குழந்தைக்கு ஒரு வருடமே வீணாகும் நிலை! நீதிமன்றம் அப்போதும் வாய்தாதான் போட்டது. கடைசியில், நீதிமன்றத்தை நம்பினால் எனது குழந்தையின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்பதால் தேடி அலைந்து ஒரு பள்ளிக்கூடத்தை பிடித்து எனது குழந்தையை அங்கு சேர்த்தேன். அந்தப் பள்ளிக் கூடத்தில் வெளிமாநில மற்றும் தங்கி படிக்கும் தமிழ்நாட்டின் மாணவ, மாணவியரே அதிகம். ஆள் கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தில் நடத்தும் பள்ளிக்கூடமாகவே அது தெரிந்தது. என் குழந்தையை அங்கு சேர்த்துவிட்டேன். அந்த ஒரு வருடம் என் குழந்தை அங்குதான் படித்தான். வருட முடிவில் பள்ளி நிறைவு நாள் விழாவிற்கு பெற்றோர்களை அப்பள்ளி முதல்வர் அழைத்திருந்தார். நாங்களும் சென்றிருந்தோம். கலையரங்கின் கடைசி வரியில் அமர்ந்திருந்தோம்.

அங்கு நடந்த கொடுமையை, நான் எப்படி சொல்வது? அந்தக் கலையரங்கின் கடைசியில் சில மாணவர்கள் வட்டமாக அமர்ந்து மது அருந்திக்கொண்டிருந்தார்கள். முன்னால், மேடையில், அவர்களது பள்ளி முதல்வர், பள்ளி நிர்வாகிகள் பேசிக்கொண்டு இருந்தார்கள். ஆசிரியர்கள், அந்த மாணவர்களை ஓர கண்ணால் பார்த்தும் பார்க்காதவர்களை போல் திருப்பி கொண்டனர். அப்பள்ளியின் பெண்பிள்ளைகளை ஆபாசமாக கிண்டல் அடிக்க ஆரம்பித்தார்கள். என்னால், பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அத்தனை ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரும் கண்டும் காணாமலிருக்க என்னால் மட்டும் முடியவில்லை. அதனால்தான், நான் இந்த சமுதாயத்தில் வாழ தகுதியற்றவன் என்று முன்பே கூறினேன். என்னை அறியாமல் வேகமாக மேடையில் ஏறினேன். என் மனைவி வேண்டாம் என்று தடுத்தார். ஆனால், என்னால் முடியவில்லை. மேடையிலிருந்த பள்ளி நிர்வாகி ஒருவரிடம் நான் ஒரு நிமிடம் உரையாற்ற அனுமதிக்க வேண்டும் என்றேன். அவரும் விபரம் தெரியாமல் என்னை அனுமதித்தார். ஒலிப்பெருக்கியில் அனைத்து பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கூடியிருந்த அந்த அரங்கில் என்னால் முடிந்தளவு அந்த பள்ளி நிர்வாகிகளை திட்டித் தீர்த்தேன். அப்போதுதான் முன்னால் இருந்தவர்கள் பின்னால் திரும்பி பார்த்தனர். அந்த மாணவர்கள் குடிப்போதையில் எனக்கெதிராக கூச்சலிட ஆரம்பித்தார்கள். நான் என் குழந்தையை கூட்டிக்கொண்டு அங்கிருந்து கிளம்பிவிட்டேன். அந்த ஒரு வருடம் என் குழந்தையை அந்த பள்ளிக்கூடத்திலிருந்து காப்பாற்றிய ஆண்டவனுக்கு நன்றி சொல்லி விட்டு அடுத்த ஆண்டு

வேறொரு பள்ளிக்கூடத்தில் சேர்த்தேன். அங்கு வேறுவிதமான அசிங்கங்கள் தென்பட்டன. அதோடு என் குழந்தைப் பள்ளி படிப்பை முடிக்கும் வரை பள்ளிக்கூடத்திற்கு எக்காரணத்திற்கும் நான் செல்வதில்லை என்று உறுதி எடுத்து கொண்டு என் மனைவியை மட்டுமே அனுப்புவேன். ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஒருவகையில் குழந்தைகளை கெடுத்து கொண்டிருக்கிறது. பள்ளிக்கூடங்கள் குழந்தைகளை கெடுக்கும் இடமாக மாறி விட்டதை எண்ணி வேதனைப்பட்ட மணித்துளிகள் எத்தனையோ?

ஆனால், நீதிமன்றத்தில் நான் தொடுத்த வழக்கு வாய்தாவில் ஓடிக்கொண்டிருந்தது. இந்த வழக்கில் எனது கோரிக்கையான எனது குழந்தையை அந்த பள்ளியின் முதல்வரான அக்கன்னியாஸ்திரி மீண்டும் பள்ளியில் சேர்த்துக்கொள்ள உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கைக்கான தீர்வு எப்போது கிடைக்கும் என்பது புரியாத புதிராக இருந்தது. தீர்ப்பு கிடைப்பதற்குள் என் குழந்தை, தாத்தாவாகி விடும் ஆபாயம்தான் எனக்கு தெரிந்தது. வழக்கை திரும்பப்பெற்றுக்கொண்டு விட்டேன். இதுவா நீதி பரிபாலனம்?

13. <u>ரணம்-13 – சட்டம் பேசிய ஆட்டோ ஓட்டுநரின் மீது சுமத்தப்பட்டத் திருட்டு வழக்கு!</u>

இதே காலகட்டத்தில் எனது அறக்கட்டளையில் உறுப்பினராக இருந்த ஒரு ஆட்டோ ஓட்டுநரின் வீட்டிற்கு அருகிலிருந்த ஒரு இராணுவ அதிகாரி வீட்டில் மடி கணிணி ஒன்று காணாமல் போய் விட்டதாக அந்த இராணுவ அதிகாரி காவல்துறையில் புகார் அளிக்க காவல்துறை விசாரித்துக்கொண்டிருந்தனர். இது தொடர்பாக அக்கம் பக்கம் உள்ளவர்களை விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துள்ளனர். அதில் எனது அறக்கட்டளையில் உறுப்பினராக இருந்த அந்த ஆட்டோ ஓட்டுநரும் ஒருவராவார். அழைத்தவர்களை விசாரிக்காமல் தினமும் காவல்நிலையத்திற்கு அழைப்பதும், ஆய்வாளர் வந்து விடுவார் காத்திருங்கள் என்று கூறி கூறி மாலை வரை காத்திருக்க வைப்பதும், கடைசி வரை ஆய்வாளர் வராமல் போகவே, அடுத்த நாள் வர கூறுவதுமாக பல நாட்கள் இப்படியே நடந்துள்ளது. இந்நிலையில் எங்களது அறக்கட்டளையில் உறுப்பினர் என்னை தொடர்பு கொண்டு நடப்பதை கூறினார். ஆட்டோ ஓட்டியே பல நாட்கள் ஆகிவிட்டது. மிகவும் சிரமமாக உள்ளது என்றும் உதவுமாறும் கேட்டார். நான் அவரிடம் குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 160-ன் கீழ் ஒரு மனு எழுதி பதிவு அஞ்சலில் ஆய்வாளருக்கு அனுப்பி விட்டு வேலையை பாருங்கள் என்று அறிவுறுத்தினேன். எங்களது அறக்கட்டளை உறுப்பினர்களுக்கு அடிப்படை சட்ட வகுப்புகளும் நடத்தி இருக்கின்றேன். அவர்களுக்கும் ஓரளவு விசயம் தெரியும். அதாவது குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 160-ன்படி ஒரு வழக்கைப்பற்றி விபரம் அறிந்த சாட்சிகளை தம்முன் ஆஜராக ஒரு காவல் நிலைய அதிகாரி எழுத்து மூலமாக உத்தரவிடலாம் என்பதாகும். இந்தச் சட்டப் பிரிவின் கீழ் நான் எப்போது வர வேண்டுமோ அதை குறிப்பிட்டு எனக்கு எழுத்துப்பூர்வ உத்தரவிட்டால் தான் வருவதாக குறிப்பிட்டு எங்களது அறக்கட்டளை உறுப்பினர் கடிதம் அனுப்பினார். கடிதத்தை படித்த அந்த ஆய்வாளர் கடுஞ்சினம் கொண்டார். '' எனக்கே அவர் உத்தரவிடுகின்றானா'' என்று கோபப்பட்ட அந்த ஆவணம் கொண்ட ஆய்வாளர் அந்த திருட்டு வழக்கின் குற்றவாளியாக எங்களது அறக்கட்டளை உறுப்பினரை காட்டி அதிகாலை அவரது வீட்டிற்கு சென்று தூங்கி கொண்டிருந்தவரை கைதுச் செய்து நேரடியாக ஒரு தனியார் விடுதிக்கு கொண்டு சென்று அடைத்துவைத்து, ''எனக்கு நீ உத்தரவிடுகிறாயா'' என்று கேட்டு வெளுத்தி தள்ளி இருக்கின்றார். அவரது தாய் மனைவி மற்றும் குழந்தைகள், அவரை எங்கு கொண்டு சென்றார்கள் என்று தெரியாமல் தவித்த தவிப்பை விவரிக்க என்னால் முடியவில்லை. காவல் நிலையத்தில் கேட்டாலும் சரியான பதில் இல்லை. யாரை கேட்டாலும் விவரத்தை அவர்களால் தெரிந்துக்கொள்ள முடியவில்லை. கடைசியில், எங்களது அறக்கட்டளை உறுப்பினரை மறு நாள் மாலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்ற உத்தரவின்படி 15 நாட்கள் சிறையில் அடைத்தனர். எங்களது அறக்கட்டளை உறுப்பினர் ரோட்டில் நின்று கொண்டு மடிகணிணி விற்பனைக்குள்ளதாக போவோர் வருவோரிடம் கேட்டுக் கொண்டிருந்ததாகவும், விசாரித்தபோது அது திருடப்பட்ட மடிகணிணி என்று தெரிய வந்ததாகவும், அதனால் கைது செய்ததாகவும் சம்பந்தப்பட்ட ஆய்வாளர் கதை எழுதினர். அதற்கு இரண்டு சாட்சிகள். அந்த சாட்சிகள் இரண்டு பேரும் இராணுவத்தில் கொடுக்கப்படும் மது பாட்டில்களை வாங்கி அதிகவிலைக்கு திருட்டுதனமாக விற்கும் நபர்கள். அவர்கள் தான் அக்காவல் நிலையத்தில் போடப்படும் பொய் வழக்குகளுக்கெல்லாம் சாட்சிகள் என்று தெரிந்துவிட்டது. இந்த புத்தகத்தை படிக்கும் எனது உறவுகளே நீங்கள் தீர்ப்பெழுதுங்கள் இது நியாயமா? யாரை வேண்டுமானாலும் மிக சுலபமாக பிடித்து ஏதேனும் ஒரு வழக்கை போட்டு சிறையில் வைத்து விட முடியும் என்றால் என்ன தர்மம் இந்த மண்ணில் இருக்க முடியும்? எனக்கு புரிய வில்லை. நீங்களே தீர்ப்புச் சொல்லுங்கள்!

அதன்பின் அவரது குடும்பம் பெரும் போராட்டத்திற்கிடையில் சில நாட்களுக்குப்பிறகு ஜாமீனில் அவரை வெளியே கொண்டு வந்தனர். இந்த வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு 2009 ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் அவரை ஆஜராகுமாறு நீதிமன்றம் அவருக்கு சம்மன் அனுப்பியது. முதல் நாள் நீதிமன்றத்தில் ஆஜரான அவரிடம் நீதிபதி '' வழக்கறிஞர் வைத்துள்ளீர்களா?'' என்று கேட்டுள்ளார். அவரோ, எனக்கு வழக்கறிஞர் வேண்டாம், இந்த நீதிமன்றத்தில் தனக்கு தானே வாதாடி வரும் G.மனோகர் ராஜ் என்பவர் எனக்காக வாதாட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். இந்த விபரம் எனக்கே தெரியாது. ஆனால், நீதிபதி ''குற்ற வழக்குகளில் அப்படியெல்லாம் அனுமதிக்க முடியாது, உன்னால் வழக்கறிஞர் வைத்துக் கொள்ள முடியாது என்றால் நீதிமன்றம் இலவச வழக்கறிஞரை ஏற்பாடு செய்து தரும். முடிவு செய்து அடுத்த வாய்தாவில் வந்து கூறு'' என்று அறிவுறுத்தியுள்ளார்.

14. <u>ரணம்-14 – வழக்கறிஞர்களின் ஆவேசம்!</u>

இந்த விபரத்தை பாதிக்கப்பட்ட எங்கள் உறுப்பினர் என்னிடம் வந்து சொன்னார். ''நான் ஏற்கனவே இருக்கின்ற வழக்குகளிலே ஆஜராக முடியாமல் உள்ளேன். இந்நிலையில் எனக்கு தெரியாமல் ஏன் இப்படி செய்தாய்'' என்று நான் சற்று சலித்துக் கொண்டேன். அவரது வழக்கில் நான் ஆஜராகி வாதாட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு துளியும்

இல்லை என்பது உண்மை. உங்களுக்கு வேறு வழக்கறிஞர் வைக்க விருப்பமில்லை என்றால் நீங்களே வாதாடுங்கள் என்றுதான் அறிவுறுத்தினேன்.

ஆனால், நீதிபதி ''குற்ற வழக்குகளில் வழக்கறிஞர் அல்லாத வேறு யாரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளவருக்காக ஆஜராக முடியாது என்று கூறியிருந்தது எனக்கு சரியாக படவில்லை. சட்டத்தில் அதற்கான வழிவகை செய்யப்பட்டிருந்தும் அவர் இப்படி கூற என்ன காரணம் என்று சிந்தித்து, அதற்கான வழிவகை சட்டத்தில் இருப்பதை பறைச்சாற்ற முறைப்படி குற்றவியல் நடைமுறை விதிகளின் விதி-69-ன் கீழ் அனுமதி கோரி மனுதாக்கல் செய்ய பாதிக்கபட்ட நபரை அறிவுறுத்தினேன். அதன்படியே அவரும் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார். அவர் மனுதாக்கல் செய்த நாளில் நான் வேறு ஒரு வழக்கிற்காக அந்த நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தேன். அந்த மனுவை வாங்கி படித்த நீதிபதி என்னை அழைத்து இப்படியெல்லாம் சட்டத்தில் இடம் இல்லை. நீங்கள் அவருக்காக வாதாட முடியாது என்றார். நான் சட்டத்தில் அதற்கான வகையங்கள் இருக்கிறது என்றேன். நீதிபதி நீதிமன்ற ஊழியரிடம் அந்த சட்டப் புத்தகத்தை திறந்த நீதிமன்றத்திற்கு எடுத்து வர சொன்னார். நான் குறிப்பிட்டிருந்த சட்டப்பிரிவை படித்த அவர் முகம் மாறி போனது, ''பரவாயில்லை மனோகர் ராஜ், உங்களால் புதுப்புது சட்டங்களை படிக்க வேண்டியுள்ளது'' என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு அந்த மனுவின் நகலை காவல்துறைக்கு கொடுக்குமாறு கூறினார். மனுவின் நகலை காவல்துறைக்கு பாதிக்கப்பட்ட நபரால் கொடுக்கப்பட்டது. பின் அந்த மனுவிற்கு பதிலுரையை தாக்கல் செய்யுமாறு காவல்துறைக்கு உத்தரவிட்டு வழக்கை வேறு தேதிக்கு ஒத்தி வைத்தார். அதன்பின் காவல்துறை பதிலுரையை தாக்கல் செய்தது. அதில் மனோகர்ராஜ் என்ற நபர் காவல்துறையில் பணியில் சேர்ந்து சில ஆண்டுகளிலேயே சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுப்பட்டதால் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். எனவே, தீயப்பழக்க வழக்கம் உள்ளோர் வழக்க நடத்த அனுமதிக்க கூடாது என்று தனது பதிலுரையில் காவல் துறை கூறியிருந்தது. என்மீது தவறான அபிப்பிராயத்தை உருவாக்க என்னை வெறுப்போருக்கு கிடைத்த ஒரே ஆயுதம் நான் காவல் துறையிலிருந்து பணி நிக்கம் செய்யப்பட்டேன் என்பதுதான். நான் ஏன் காவல்துறையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டேன்?, எனது தரப்பு நியாயம் என்ன? கேட்பாரில்லை. சரி விடுங்கள். எல்லா உண்மைகளையும் இந்த எழுத்துகளின் வடிவில் உங்களிடம் கொட்டி தீர்த்தால் என் மனம் சாந்தி அடைந்தது. ஏதோ சிலரின் அவதூறுகள் இனி என்னை எதுவும் செய்யாது.

சரி விசயத்திற்கு வருவோம். காவல்துறை என்ன பதில் கொடுத்தாலும், சட்டத்தில் வழக்கறிஞர் அல்லாதோர் மற்றவர்களுக்காக வாதாட முடியும் என்ற விசயத்தை ஒப்புக்கொண்டது எனக்கு மகிழ்ச்சியே! காவல்துறையின் அந்த பதிலுக்குப்பின் நீதிமன்றம் எனது நன்னடத்தையை ஆய்வுச்செய்து அறிக்கை சமர்பிக்குமாறு நன்னடத்தை அலுவலருக்கு உத்தரவிட்டது. நன்னடத்தை அலுவலர்கள் என்னைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தனர். என்னைப் பற்றிய குறைப்பாடுகளை அவர்களால் சேகரிக்க முடியவில்லை. காவல்துறையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டப்படியால் அதுவும் சட்டப்படி எனக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. முடிவில் நன்னடத்தை அலுவலர்கள் எனக்கு நற்சான்றையே வழங்கினர். அதில் சிலர் எனது விசிறிகளாகவே மாறி விட்டனர் என்பதுதான் வேடிக்கையானது. இனி நீதிமன்றம் பாதிக்கப்பட்ட எங்கள் அறக்கட்டளை உறுப்பினரின் மனுவை ஏற்றுக் கொண்டு என்னை அவரது வழக்கில் ஆஜராக அனுமதிக்க வேண்டும். வேறு வழியில்லை.

ஆனால், வழக்கறிஞர்கள்அவர்களது சங்க கூட்டத்தைக் கூட்டினர். அந்த ஆட்டோ ஓட்டுநரின் மனு அனுமதிக்கப்பட்டால் வழக்கறிஞர்களின் பணி பெரிதளவு பாதிக்கப்படும் என்று எண்ணினர். இதற்கெல்லாம் நான்தான் காரணம் என்று என்னை கொன்று புதைத்து விட வேண்டும் என்ற அளவிற்கு அவர்களுக்கு என் மீது கோபமடைந்தனர்.

15. **<u>ரணம்-15– நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையை தகர்ந்தெறிந்த முதல் சம்பவம்!</u>**

அந்த மனுவை நிராகரிக்க வேண்டும் என்று நீதிபதியை வற்புறுத்தினர். நீதிபதி வழக்கறிஞர்களை பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. மனுவை நிராகரிக்க போதிய காரணமுமில்லை, அந்த மனு மீது உத்தரவே போடாமல் நீதிபதி வழக்கை ஒத்தி போட ஆரம்பித்தார். அந்த நீதிபதிக்குப்பின் இன்னொரு நீதபதி என்று அந்த மனு பல நீதிபதிகளை பார்த்துவிட்டது. இந்த மனு ஏன் இவ்வளவு நாளாக கிடப்பில் இருக்கிறது என்று வந்த புதிதில் ஆரம்பிக்கும் புதிய நீதிபதிகளும் சூழ்நிலையை தெரிந்துக்கொண்டு அந்த வழக்கை இரண்டு மாதங்கள் தள்ளி ஒத்தி வைப்பதை வழக்கமாகவே கொண்டிருந்தனர். இப்படியே சுமார் 7 ஆண்டுகள் அதாவது 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை அந்த மனு கிடப்பில்தான் கிடந்தது. நானும் வழக்கறிஞராகி வந்து வருடங்கள் பல கடந்து விட்டது. ஆனால். பாதிக்கப்பட்ட எங்கள் உறுப்பினர் மட்டும் விடாபிடியாக அந்த மனு மீது உத்தரவிட வேண்டும் என்று ஒரு வாய்தா கூட தவறாமல் நீதிமன்றத்தில் மேற்சொன்ன ஏழு வருடங்களாக ஆஜராகி வந்தார். பின்பு நான் அவரை அழைத்து நானும் வழக்கறிஞராகி விட்டதால் அம்மனு இனி அர்த்தமற்றது, நிச்சயம் நீதிமன்றம் அந்த மனு மீது உத்தரவு போடாது. நீங்கள் அந்த மனுவை திரும்பப்பெற்றுக்கொண்டு வழக்கை நடத்த பாருங்கள் என்று அறிவுறுத்தினேன். அவரும் கடந்த ஏப்ரல் மாதம் 2016 ஆம் வருடம் அந்த சர்ச்சைக்குரிய மனுவை திரும்பப்பெற்றுக்கொண்டார். அப்போதும் ''நீங்கள் தான் எனக்காக வாதாட வேண்டும்'' என்றார். நானும் சரி என்று ஒப்புக்கொண்டு கடந்த மே மாதம் 2016 அன்று தான் நான் அவருக்காக வழக்கறிஞராக எனது மூத்த வழக்கறிஞருடன் சேர்ந்து தோன்றல் குறிப்பை தாக்கல் செய்தேன்.

நீங்களே சொல்லுங்கள் என் உறவுகளே! இதுதான் சட்டத்தின் ஆட்சியா? ஒரு சாதாரண ஆட்டோ ஓட்டுநர் தாக்கல் செய்த மனு மீது வழக்கறிஞர்களுக்காக பயந்துக்கொண்டு தீர்ப்புச்சொல்ல தயங்கும் நீதிமன்றம், உயர்நிலையில் இருப்பவர்களை திருப்தி படுத்த எப்படி வாயடைத்து கிடப்பர் என்பதை நீங்களே சிந்தித்து தீர்ப்பெழுதுங்கள்.

எங்கள் அறக்கட்டளையின் உறுப்பினரான அந்த அந்த ஆட்டோ ஓட்டுநர் குற்றவியல் நடைமுறை விதிகளின் விதி-69-ன் கீழ் மனுதாக்கல் செய்தும், அந்தச் சட்டப்பிரிவு சரியானது என்று திறந்த நீதிமன்றத்தில் நீதிபதியே கூறியதாலும் அந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றிய சில வழக்கறிஞர்கள் என் கடுங்சினம் கொள்ள ஆரம்பித்தனர். அதன் தொடர்ச்சியாக நடந்த அதர்மங்களையும் அநீதிகளையும் இதே உங்களிடம் தொடர்ந்து முறையிடுகின்றேன். தொடர்ந்து படித்து நல்ல தீர்ப்பெழுதுங்கள்!

16. <u>ரணம்-16– நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையை தகர்ந்தெறிந்த இரண்டவது சம்பவம்!</u>

பொதுவாக நான் நீதிமன்றத்திற்கு சென்றால் நீதிமன்றத்தின் கடைசியில் பொதுமக்களுக்காகவும், வயதானவர்களுக்காகவும் ஒரு நீண்ட பென்ச் போடப்பட்டிருக்கும் அங்கு போய் அமர்ந்துக்கொள்வேன். அன்றும் நான் அப்படிதான் அமர்ந்திருந்தேன். உடனே நீதிமன்ற ஊழியர் என்னிடம் வந்து இங்கு அமரக்கூடாது என்று வெளியில் நில்லுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் “ எனது வழக்கில் நான் வழக்கறிஞரை நியமிக்க வில்லை நானே நடத்துவதால் நான் வெளியில் நின்றுக் கொண்டு வழக்கை நடத்த முடியாது என்று கூறினேன். உடனே, அங்கிருந்த வழக்கறிஞர்கள் அனைவரும் ஒன்றாக நீதிபதியை முற்றுகையிட்டு, என்னை வெளியேற்ற வேண்டும் என்று முறையிட்டனர். நீதிபதி என்னை அழைத்தார். “ இதோ பாருங்கள் மனோகர்ராஜ் நீதிமன்றத்தில் போதிய வசதியில்லாதால் வழக்கறிஞர்களை தவிர வேறு யாரும் வழக்கு கூப்பிடும் நேரத்தை தவிர மற்ற நேரத்தில் நீதிமன்றத்திற்குள் வருவதோ, அமர்வதோ கூடாது என்று நான்தான் உத்தரவிட்டுள்ளேன், உங்கள் வழக்கில் நீங்களே வாதாடுவதால் உங்களை நீதிமன்றத்தில் அனுமதிக்க வேண்டும் என்ற உங்கள் வாதம் சரி என்றால் கூட நீங்கள் ஒருவர் மட்டும் சிவில் உடையில் நீதிமன்றத்திற்குள் அமர்ந்திருந்தால் மற்றவர்கள் கேள்வி கேட்பார்கள், நான் ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. எனவே, நான் பிறப்பித்த உத்தரவு உங்களுக்கும் பொருந்தும், வெளியில் நில்லுங்கள், அழைக்கும் போது வந்தால் போதும்” என்று உத்தரவிட்டார். நீதிமன்ற உத்தரவாயிற்றே. நான் சரி என்று கூறிவிட்டு வெளியில் வந்து நின்று கொண்டேன். ஆனால், என் மனம் ஆறவில்லை. வழக்கறிஞர்களுக்கு மட்டும்தான் நீதிமன்றம் என்பது எந்த வகையில் நியாயம்? நீதிமன்ற வாயிற்படியில் நின்று கொண்டிருக்கும் பொது மக்களுக்காகதான் நீதிமன்றம் அல்லவா? அவர்கள் நியமித்த முகவர்கள் தானே நீதிமன்றத்திற்குள் அமர்ந்துள்ள வழக்கறிஞர்கள்? எனக்கு புரியவில்லை எனது உறவுகளே! நீங்கள்தான் தீர்ப்புச் சொல்ல வேண்டும்!

17. <u>ரணம்-17– நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையை தகர்ந்தெறிந்த மூன்றாவது சம்பவம்!</u>

இதே மனநிலையில் வீட்டிற்கு வந்தேன். விடிய விடிய சட்டப்புத்தகங்களை புரட்டினேன். மக்கள் வந்து கூடுமிடம்தான் நீதிமன்றம், மேலும் நீதிமன்றம் என்பது பொதுமக்கள் வந்து கூடுவதற்கேற்ற இடவசதியுள்ள திறந்த மன்றமாக இருக்க வேண்டும் என்பது குற்ற விசாரணை முறைச்சட்டத்தின் பிரிவு 327-ல் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளதை அறிந்தேன். உடனே ஒரு மனுவை தயார் செய்து அடுத்த நாள் காலை முதல் வேலையாக நீதிமன்றத்தில் சமர்பித்தேன். நீதிபதி என்னை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தார். எனது மனுவை நிராகரிப்பதாக கூறினார். நான் எவ்வளவு எடுத்துக் கூறியும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. கடைசியில், நீங்கள் சொல்வதும் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதும் சரி என்றாலும் கூட இந்த மனுவை நான் தள்ளுபடி செய்கிறேன். நீங்கள் வெளியில்தான் நிற்க வேண்டும் என்றார். என் மனுவின் மீது தயவுச் செய்து எழுத்துப்பூர்வ உத்தரவாக பிறப்பியுங்கள் நான் உயர்நீதிமன்றத்தில் முறையிடுகிறேன் என்றேன். அவரும் சரி என்று கூறி நீதிமன்றத்தில் இடவசதி இல்லை என்ற காரணங்காட்டி மனுவை நிராகரித்தார். நான் இந்த உத்தரவை எதிர்த்து அந்த நீதிபதி மீது உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். உயர்நீதிமன்றத்தில் எப்போது எனது வழக்கு விசாரணைக்கு வரும் என்று தெரிந்துக்கொள்ள சம்பந்தப்பட்ட பொறுப்பளரை சந்தித்த போது உயர்நீதிமன்ற பதிவாளர் என்னை சந்திக்க வேண்டும் என்று கூறியுள்ளதாகவும் எனது வழக்குக் கட்டு அவரிடம் உள்ளதாகவும் கூறினார். நான் உடனே சென்று உயர்நீதிமன்ற பதிவாளரை சந்தித்தேன். அவர் “அந்த மாதிஸ்ரேட் செய்திருப்பது நியாயம் இல்லை, இந்த வழக்கு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி முன்புதான் விசாரனைக்கு வரும் அந்த மாதிஸ்ரேட்டு சஸ்பென்ட் செய்யப்பட வாய்ப்புள்ளது. அவரது வயிற்றில் அடித்து, நமக்கு என்ன கிடைக்க போகிறது. நான் இது தொடர்பாக அந்த மாதிஸ்ரேட்டிடம் விளக்கம் கேட்டு குறிப்பாணை அனுப்புகிறேன். அவர் என்ன பதில் சொல்கிறார் என்று பார்த்தப்பின் உங்களுக்கு தகவல் சொல்கிறேன். அதற்கு பிறகு என்ன செய்வதென்று முடிவு செய்வோம்” என்று எனக்கு அறிவுரை வழங்கினார். மிக பெரிய பொறுப்பில் இருப்பவர். நம்பிக்கையுடன் திரும்பி வந்து விட்டேன். அவர் கூறியதை போலவே அந்த மாதிஸ்ரேட்டிடம் விளக்கம் கேட்டு குறிப்பாணை அனுப்பியுள்ளார் என்ற விபரம் பின்னர் நடந்த ஒரு சம்பவத்தின் போது தெரிந்துக் கொண்டேன். ஆனால், நான் தாக்கல் செய்த வழக்கு அதோடு கிடப்பில் போடப்பட்டு விட்டது. அதற்கு பின் நடந்த சம்பவங்கள் எனது மனுவை பற்றி சிந்திக்கக் கூட விடவில்லை.

18. <u>ரணம்-18– நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையை தகர்ந்தெறிந்த நன்காவது சம்பவம்!</u>

அதன்பிறகு அங்குள்ள வழக்கறிஞர்கள் எனக்கெதிராக கடுமையாக செயல்பட முடிவுச் செய்திருந்தனர். மேற்சொன்ன சம்பவத்திற்கு பிறகு நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடிக்கொண்டிருந்தேன். என்னிடமிருந்த வழக்கு கோப்புக்களை வழக்காடும் இடத்திலிருக்கும் மேஜையின் மீது வைத்திருந்தேன். உடனே அங்கிருந்த வழக்கறிஞர்கள் கூட்டமாக நீதிபதியின் முன் நின்று பிரச்சனை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களது பிரச்சனை என்னவென்றால் நான் நீதிபதியின் முன்நின்று வாதாடக் கூடாது, நீதிமன்றத்திலுள்ள நாற்காலிகள் மற்றும் மேஜைகளை படுத்தப்படுத்த கூடாது என்று கோசமிட்டனர். அதற்கு ஆதாரமாக சென்னை உயர்நீதிமன்றம் 2003 ஆம் ஆண்டு பிறப்பித்ததாக கூறி ஒரு வழக்கின் உத்தரவை நீதிபதியிடம் கொடுத்தார்கள். அந்த நீதிபதி அதை வாங்கி பார்த்து விட்டு ஆமாம் இந்த உத்தரவில் அப்படிதான் உள்ளது. நீங்கள் இனிமேல் நீதிமன்றத்திலுள்ள மேஜை நாற்காலிகளை பயன்படுத்த கூடாது என்று எனக்கு

உத்தரவிட்டார். நான் சரி எனக்கு சென்னை உயர்நீதிமன்றம் 2003 ஆம் ஆண்டு பிறபித்ததாக தங்களிடம் கொடுக்கப்பட்ட அந்த உத்தரவின் நகல் வேண்டும் என்றேன். அதன் நகல் எனக்கு கொடுக்க உத்தரவிட்டார். இப்படியும் ஒரு நீதிமன்ற உத்தரவு இருக்கத்தான் முடியுமா? எனக்கு நீதிமன்றங்களின் மீதிருந்த நம்பிக்கை அப்படியே தகர்ந்து போயிற்று. முனம் உடைந்து போனேன்.

19. <u>ரணம்-19– நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையை தகர்ந்தெறிந்த ஐந்தாவது சம்பவம்!</u>

நான் வீட்டிற்கு வந்து சென்னை உயர்நீதிமன்றம் 2003 ஆம் ஆண்டு பிறப்பித்ததாக கூறப்பட்ட உத்தரவை பொறுமையாக படித்தேன் அதில் எனக்கும் சாதகமான சில கருத்துக்கள் இருக்கத்தான் செய்தது. அதாவது, வழக்கறிஞரின்றி தனது வழக்கை தானே நடத்துவோருக்கு வசதியான இடத்தை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்று இருந்தது. அதை அடிப்படையாக கொண்டு அடுத்த நாள் மீண்டும் ஒரு நீண்ட மனுவுடன் நீதிமன்றத்திற்கு விரைந்தேன். நீதிமன்றத்தில் எனது மனுவை சமர்பித்தேன் மீண்டும் என்னை நீதிபதி திறந்த நீதிமன்றத்தில் அழைத்து விசாரித்தார். மிக நீண்ட விவாதம் நடந்தது. கடைசியில் அந்த நீதிபதி “ சரி உங்களுக்கு தகுந்த இடத்தை தருகின்றேன், இந்த நீதிமன்றத்தின் கடைசியில் ஒரு மூலையில் நின்று நீங்கள் உங்கள் வழக்கை வசதியாக எடுத்துரைக்கலாம் என்று அகராதியில் இல்லாத அற்புதமாக நீதியை நிலை நாட்டினார். “வழக்கறிஞரின்றி தானே தனது வழக்கை நடத்தினால் நீதிமன்றத்தின் ஒரு மூலையில் நின்றுதான் வழக்கை எடுத்துரைக்க வேண்டும் என்று மக்களுக்கு ஒரு தவறான மற்றும் தாழ்வு மனப்பாண்மை ஏற்படுத்துவதற்கு நான் நான் எக்காரணம் கொண்டும் காரணமாக மாட்டேன். நான் தங்களுக்கு நேர் முன்னால் வழக்கறிஞர்கள் நின்று வாதாடும் அதே இடத்தில்தான் நின்று வாதாடுவேன். அதற்கு என்னை அனுமதிக்க வேண்டும் என்று கடுமையாக வாதாடினேன்.

இறுதியில் நீதிபதி பிறப்பித்த உத்தரவு என்ன தெரியுமா? “ நீங்கள் நீதிபதிக்கு நேர்முன் வழக்கறிஞர்கள் நின்று வாதாடும் இடத்தில் நின்று வாதாடலாம், ஆனால், அந்த இடத்தில் வழக்கறிஞர்களுக்காக போடபட்டுள்ள மேஜையை பயன்படுத்தககூடாது. ஒரு வேளை வழக்கு கோப்புக்களை வைக்க வேண்டும் என்றால் நீதிமன்றத்தின் வலதுப்புறமுள்ள நீதிமன்ற பதிவு எழுத்தரின் மேஜையை அவருக்கோ அல்லது அந்த மேஜை மீது வைக்கப்பட்டுள்ள நீதிமன்ற பதிவேடுகளுக்கோ எந்த வகையிலும் இடையூறு இன்றி பயன்படுத்தி கொள்ளலாம். ஆனால், ஒரே நேரத்தில் இரண்டு இடங்களையும் பயன்படுத்த அனுமதியில்லை”

உங்களுக்கு இந்த உத்தரவு புரிந்ததா? அதாவது, நான் நீதிபதிக்கு நேர் முன்னால் நின்று வாதாட வேண்டும் என்றால் எத்தனை வழக்கு கட்டுக்கள், சட்டப்புத்தகங்கள் கையில் இருந்தாலும் கீழே வைக்க முடியாது. கீழே வைக்க வேண்டும் என்றால் நீதிபதிக்கு நேர் முன்னால் நின்று வாதாட முடியாது எப்படி தீர்ப்பு? இந்தப் புத்தகம் மன்னர்களான உங்களிடம் நான் செய்யும் மேல்முறையீடு.

நான் கையிலேயே எனது வழக்கு கோப்புகளை வைத்துக் கொண்டு மணி கணக்கில் நின்றாலும் பரவாயில்லை. நீதிபதிக்கு நேர் முன்னால் வழக்கறிஞர்கள் நின்று வாதாடும் இடத்தில் நின்று தான் வாதாட வேண்டும் என்று முடிவுச் செய்தேன். இந்த உத்தரவை வாய்மூலமாக கூறிய நீதிபதி முழுமையான எழுத்துப்பூர்வமான உத்தரவையும் மறுநாள் வந்து தெரிந்துக்கொள்ளுமாறு கூறினார். இது தொடர்பான நான் எழுதிய மனுக்கள், நீதிமன்ற உத்தரவுகள் போன்ற அனைத்து ஆவணங்களும் www.neethithurai.com என்ற இணையத்தளத்தில் “தீர்ப்புச் சொல்லுங்கள்” என்ற பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. தீர்ப்பு எழுத நினைக்கும் சக்கரவர்த்திகள் யார் வேண்டுமானாலும் இணையத்தளத்தில் படிக்கலாம் மற்றும் இணைத்தளத்திலிருந்து இறக்கிக் கொள்ளலாம்.

20. <u>ரணம்-20– என் மீது வழக்கறிஞர்களால் போடப்பட்ட அநியாயமான மூன்றாவது பொய்புகார்!</u>

மேலும் படியுங்கள். பிரச்சனை ஓய்ந்தது என்று நிம்மதி பெரும் மூச்சு விட்டு விட்டு அடுத்த நாள் நீதிமன்றத்திற்கு வழக்கிற்காக சென்றிருந்தேன். அன்றைய தினம் எங்களது அறக்கட்டளையில் ஒரு முக்கிய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் 70 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் வந்திருந்தார்கள். அனைவருக்காகவும் ஒரு வேன் ஏற்பாடுச் செய்யப்பட்டிருந்தது. நீதிமன்ற பணி முடித்தவுடன் அப்படியே கூட்டத்திற்கு செல்வதற்கு ஏதுவாக அந்த வேனில்தான் நானும் நீதிமன்றத்திற்கு சென்றிருந்தேன். வாகனத்தை நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தி விட்டு அனைவரும் எனக்காக காத்திருந்தனர்.

முந்திய நாள் நீதிமன்றத்தில் எனது உரிமைக்காக நான் சமர்பித்த மனு மீது நீதிபதி பிறப்பித்திருந்த உத்தரவும் அன்றைய தினம்தான் நீதிபதி நீதிமன்றத்திற்கு வந்து அமரும் முன் அவரது அறைக்கு என்னை அழைத்து, எனது மனு மீது தெளிவான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் படித்து பார்த்து விட்டு “உத்தரவை தெரிந்துக்கொண்டேன்” என்று எழுதி கொடுங்கள் என்று எனக்கு அறிவுறுத்தினார். உடனே நீதி மன்ற பெண் தட்டச்சாளர் ஒருவரை அழைத்து என்னிடம் சொன்ன அதே தகவலை அவரிடம் கூறி என்னிடம் எழுதி வாங்கிக் கொள்ள சொன்னர். அப்போது நேரம் காலை 10.30. அந்த நிதிமன்ற ஊழியர் அந்த தகவலை நீதிமன்ற தலைமை எழுத்தரிடம் கூறி அந்த உத்தரவை தலைமை எழுத்தரிடம் கொடுத்துவிட்டார். நான் எனது வழக்கை முடித்து விட்டு வருகின்றேன் என்று தலைமை எழுத்தரிடம் கூறி விட்டு வழக்கிற்காக நீதிமன்றத்தில் காத்திருந்தேன். நீதிமன்றத்தில் மிக மிக சொற்பமான வழக்கறிஞர்களே அமர்ந்திருந்தனர். இதை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்று பார்க்கின்றீர்களா? ஒரு வார்த்தையை கூட விட்டு விடாமல் தொடர்ந்து படியுங்கள். இது புத்தகமல்ல இந்த ஜனநாயக நாட்டின் அரசன் மற்றும் அரசியாக வீற்றிருக்கும் உங்களிடம் நான் செய்யும் மேல்முறையீடு. எனக்கு தீர்ப்பெழுதுங்கள்! அதற்கு முன் தொடர்ந்துப் படியுங்கள்.

எனது வழக்கு அழைக்கப்பட்டு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. பின் தலைமை எழுத்தரிடம் வந்து அந்த உத்தரவை அவசரஅவசரமாக படித்தேன். காரணம், எனது அறக்கட்டளையின் உறுப்பினர்கள் வெளியில்

காத்துக்கொண்டிருந்தார்கள். நான் படித்து முடித்து ‘‘உத்தரவை தெரிந்துக்கொண்டேன்’’ என்று எழுதிக் கொடுத்து விட்டு நீதிமன்றத்தை விட்டு வெளியில் வர காலை சுமார் 11 மணி ஆகிவிட்டது.

பின் எனக்காக நீதிமன்ற வளாகத்தில் காத்திருந்த அறக்கட்டளை நண்பர்களுடன் புறப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திற்கு சென்று விட்டேன். பின் சுமார் மதியம் 2 மணியளவில் நீதிமன்றத்திற்கு அருகிலிருந்த காவல் நிலைய ஆய்வாளர் தொலைபேசியில் என்னை அழைத்து உடனே காவல் நிலையம் வருமாறு கூறினார். நான் எதற்கு என்று கேட்டதற்கு வழக்கறிஞர்கள் உங்கள் மீது புகார் ஒன்று கொடுத்துள்ளார்கள். விசாரணைக்காக வர வேண்டும் என்றார். நான் சரி வருகிறேன் என்று சொல்லி விட்டு காவல் நிலையம் புறப்பட தயார் ஆனேன். அதற்குள் இன்னொரு செல்போன் அழைப்பு வந்தது. பெயர் சொல்லாத காவல்துறையை சேர்ந்த யாரோ ஒரு மனசாட்சி உள்ள மனிதர் பேசினார். ‘‘ மனோகர் நீங்க இன்று காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்திற்குள் வழக்கறிஞர்களை கெட்டவார்த்தையால் திட்டி கொலை செய்து விடுவேன் என்று கத்தியை காட்டி மிரட்டியதாக சில வழக்கறிஞர்கள் வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்து FIR பதிவுச் செய்து உங்களை கைது செய்ய வேண்டும் என்று காலையிலிருந்து காவல் நிலையத்தில் ஒரே பிரச்சனைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆய்வாளர் நீதிமன்ற காவலரிடமும், அலுவலர்களிடம் விசாரித்தார். அப்படி எதுவும் நடக்கவில்லை என்பதால் அவர் FIR பதிவுச் செய்ய மறுத்தார். ஆனால், வழக்கறிஞர்களில் சிலர் தங்களையே சாட்சியாக போட சொல்லி வற்புறுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு பயந்து DSP FIR பதிவுச் செய்ய சொல்லி விட்டார். நீங்கள் காவல் நிலையம் வந்தால் உங்களை கைது செய்து விடுவார்கள், உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் வாங்க முயற்சி செய்யுங்கள்’’ என்று கூறி விட்டு இணைப்பை துண்டித்துக்கொண்டார். எனக்கு நிலைமை ஓரளவு புரிந்து விட்டது. உடனே, சென்னை உயர் நீதிமன்றத்திற்கு புறப்பட்டேன்.

21. <u>**ரணம்-21– எனக்காக வழக்கறிஞர்கள் ஆஜராக மறுப்பு!**</u>

உயர் நீதிமன்றத்திலுள்ள எண்ணற்ற வழக்கறிஞர்களை சந்தித்து எனக்காக உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் மனு தாக்கல் செய்ய வேண்டி அணுகினேன். ஆனால், அதற்குள் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் சென்னை வழக்கறிஞர்கள் சங்கம், பாண்டிச்சேரி வழக்கறிஞர்கள் சங்கம் என்று எல்லோருக்கும் தகவல் கூறி எனக்காக யாரும் நீதிமன்றத்தில் வாதாடக்கூடாது என்று கேட்டுக்கொண்டனர். அதனால், எந்த வழக்கறிஞரும் எனக்காக உயர்நீதிமன்றத்தில் மனு சமர்பிக்கவோ, வாதாடவோ மறுத்துவிட்டனர். அதோடு, நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்கிறேனா என்று கண்காணிக்கவும் ஆரம்பித்தனர். கடைசியில் வேறு வழியின்றி நானே எனக்கான முன் ஜாமீன் மனுவை தாக்கல் செய்தேன். அந்த மனுவை எண் கொடுக்க விடாமல் சில வழக்கறிஞர்கள் பெரும் இடையூறுச் செய்ய ஆரம்பித்தனர். மற்றொரு புறம் நான் மனுதாக்கல் செய்ய காவல்துறையால் பதிவுச்செய்யப்பட்டுள்ள FIR-ன் நகல் தேவை என்று சொல்லிவிட்டார்கள். நான் எப்படி வாங்கமுடியும். நான் அங்கு சென்றாலே என்னை கைது செய்து விடுவார்களே? குறைந்தப்பட்சம் அந்த முதல் தகவல் அறிக்கையின் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகளாவது தெரிய வேண்டும் என்ற நிலை. ஆனால், அந்த வழக்கறிஞர்களிலும் மனசாட்சியுள்ள வழக்கறிஞர்களும் இருக்கதான் செய்தனர் என்று அறிந்துக்கொள்ள ஏதுவாக சில வழக்கறிஞர்கள் அவர்களாகவே என்னை தொடர்புக் கொண்டு முடிந்தளவிற்கு தகவல்களை கொடுத்து உதவி வந்தனர். ஒருவழியாக மனுவை தாக்கல் செய்தேன்.

22. <u>**ரணம்-22– முன்ஜாமீன் கோரி நானே தாக்கல் செய்து வாதாடி அனுபவித்த துயரங்கள்!**</u>

எனது மனு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்தது. நான் நேரடியாக முன்னிலையாகி நடந்ததை எடுத்துச்சொல்ல முயன்றேன். ஆனால், நடக்கவில்லை. நீதிபதியால் நான் கூற வருவதை கவனிக்க முடியவில்லை. எனது வழக்கு விசாரணைக்கு வருவதை முன் கூட்டியே வழக்கு பட்டியலை பார்த்து தெரிந்துக்கொள்ளும் வழக்கறிஞர்களில் பலர் பெரும் திரளாக நீதிமன்றத்தில் நீதிபதியின் முன் எனக்கெதிராக கூச்சலிட ஆரம்பித்தனர். நீதிபதி எனக்கு முன் ஜாமீன் வழங்கவில்லை. மாறாக எனது மனுவை 5 நாட்களுக்குப்பின் தள்ளி வைத்தார்.

இந்த ஜனநாயக நாட்டின் சக்கரவர்த்திகளே! தயவுச்செய்து கனிவுடன் பரிசீலியுங்கள். நான் கோடீஸ்வரனில்லை. என்னால் ஒரு நாள் கூட சென்னையில் அறை எடுத்து தங்கி மூன்று வேளை உணவை உணவு விடுதியில் சாப்பிட்ட முடியாது என்ற நிலையில் நான் எப்படி ஐந்து நாட்கள் சென்னையில் தங்கி சமாளிப்பது? வீட்டிற்கு திரும்பி வந்தால் அந்த வழக்கறிஞர்களை சாந்தப்படுத்த காவல்துறை நிச்சயம் என்னை கைது செய்வார்கள். கைது செய்தால், அதற்கு பிறகு எனக்கு ஜாமீன் கூட கிடைக்க விட மாட்டார்கள். என் கையில் போதிய பணமில்லை. என்னால் என்ன செய்ய முடியும்? நான் முக்கியான சட்டப்புத்தகங்களை ஒரு வரிவிடாமல் படித்து தெளிந்திருந்தேன். கூறப்பட்ட குற்றச்சாட்டு முழுக்க முழுக்க பொய்யானது. அனைத்து ஆதாரங்களும் இருக்கிறது. இருந்தும் என்ன பயன்? நான் செய்வதறியாது சென்னையில் அநாதையாக சுற்றி திரிந்தேன். எனக்கு நிறைய நண்பர்கள் சென்னையில் உள்ளனர். ஆனால், ஒருவரிடமும் நான் உதவி கேட்கவுமில்லை, யாருடனும் தொடர்புக் கொள்ளவுமில்லை. எனது பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து பார்த்துவிட்டு திரும்பவும் வைத்துக்கொள்வேன். காரணம், மீண்டும் தட்டச்சுச் செய்யவோ, ஜெராக்ஸ் எடுக்கவோ பணம் தேவைப்பட்டால் என்ன செய்வது? என்ற எண்ணம் தான்.

23. <u>**ரணம்-23– உணவின்றி, உறக்கமின்றி நீதிக்காக அலைந்து திரிந்த நாட்கள்!**</u>

இந்த ஐந்து நாட்களில் நான் வாழ்க்கையின் தத்துவத்தை புரிந்துக்கொண்டேன் என்றே சொல்ல வேண்டும். அதிகப்பட்சமாக ஒரு நாளைக்கு ரூ 3/- மட்டும்தான் எனது உணவிற்காக செலவுச் செய்வேன். நான் சொல்வது 1950 ஆம் அண்டு அல்ல. 2010 ஆம் ஆண்டு. மூன்று ரூபாயிக்கு என்ன வாங்க முடியும்? என்று தோன்றுகிறதா? ‘டைகர் பிஸ்கட’’ என்ற ஒரு பிஸ்கட் பாக்கெட். அதன் விலை ரூ 3/-தான். ஒரு பாக்கெட் வாங்கினால் நினைத்து நினைத்து சிறு சிறு

தண்டுகளாக இரவு வரை சாப்பிடுவேன். பின் மெரினா கடற்கரையில் அமர்ந்திருப்பேன். இரவு ஆனதும் சென்னை மத்திய இரெயில் நிலையத்திற்கு சென்று அங்குள்ள இருக்கையில் உட்கார்ந்தவாறே தூங்குவேன். இதில் காவல்துறையின் தொந்தரவு வேறு. தெரு நாய்களை கூட இரெயில் நிலையத்தில் நிம்மதியாக தூங்க அனுமதிக்கின்றார்கள். ஆனால், அந்த சுதந்திரம் இந்த மண்ணின் மக்களுக்கு இல்லை. விரட்டி விடுவார்கள். விடிய விடிய சில நேரங்களில் சென்னையில் சுற்றிக் கொண்டிருப்பேன். அப்போது என் கண்ணில் பட்ட அசிங்கங்களும், அநியாயங்களும் எத்தனை எத்தனை... வெறுத்து போனேன். இந்த நாட்டின் நிர்வாகத்தையும், இந்த மக்களின் முட்டாள்தனத்தையும் நினைத்து நான் மனதளவில் செத்து போனேன். அந்த ஆண்டவன் இவை அனைத்தையும் எனக்கு காட்டத்தான் இந்த திருவிளையாடலை நடத்துவதாக எண்ணி என்னை நான் தேற்றிக்கொள்வேன்.

24. **ரணம்-24–வழக்கறிஞர்களின் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டமும், உண்ணாவிரமும்!**

இதற்கிடையில், சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்களின் கூட்டம் தொடர் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்தனர். சுமார் 48 நாட்கள் அவர்கள் நீதிமன்றத்திற்கு செல்லவில்லை. நீதிமன்றத்திற்கு முன் கூடாரம் அமைத்து உண்ணாவிரதம் வேறு நடத்தினார்கள். இதில் கோசத்தோடு ஊர்வலம் வேறு. அவர்களின் இலக்கு ஒன்றுதான். அதாவது, வழக்கறிஞர்கள் சமூகத்தை பலம் பொருந்திய ஒரு அமைப்பாக மாற்ற வேண்டும், வழக்கறிஞர்களுக்கெதிராக யார் செயல்பட்டாலும் என்ன நடக்கும் என்பதை மக்களுக்கு காட்ட வேண்டும் என்பதுதான். என்னை கைது செய்ய வேண்டும் என்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் எனக்கு சாதகமாக செயல்படுவதாக கூறி அவருக்கு எதிராகவும் கோசமிட்டனர். இதனால், நீதிமன்றம் எனக்கு முன்ஜாமீன் கொடுக்க முடிந்தளவு தவிர்த்தது என்பது சத்தியமான உண்மை.

எனது அறக்கட்டளையின் உறுப்பினர்கள் அந்த வழக்கறிஞர்களின் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி நாமும் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று கட்டாயப்படுத்தினர். ஆனால், அது தமிழகம் முழுவதும் வேறு விதமான முடிவை ஏற்படுத்திவிடும். தமிழகத்திலுள்ள எல்லா வழக்கறிஞர்களும் ஒன்று சேர்ந்துக்கொள்வர். பின் நமக்கு அந்தளவு பணபலமோ, சக்தியோ இல்லை. வேண்டாம் என்று பிடிவாதமாக மறுத்துவிட்டேன். பலர், நான் பயப்படுவதாக கிண்டல் செய்தனர். நான் அதைப் பற்றி கவலை கொள்ளவில்லை.

25. **ரணம்-25– கைவிலங்கோடு காத்திருந்த காவல்துறை!**

இதற்கிடையில், பல்வேறு அதிகாரிகள் மற்றும் நிறுவனங்கள் மீது பாராபட்சமின்றி நான் வழக்கு பதிவு செய்திருந்ததாலும்,எனது அறக்கட்டளையை முடக்க பெரும் முயற்சியில் இறங்கினார். ஆதலால், அவருக்கு ஒரு எச்சரிக்கை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தேன். அதனால், அவர் என்னை பழித்தீர்க்கும் சமயத்திற்காக காத்திருந்தார். வழக்கறிஞர்கள் செய்த பிரச்சனை என்னை அவர் பழித் தீர்க்க அவருக்கு சாதகமாக இருந்தது. மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வழக்கறிஞர்களின் பொய்புகாரை அடிப்படையாக கொண்டு என் மீது நடவடிக்கை எடுக்கவோ, கைதுச் செய்யவோ முடியாது என்று பிடிவாதமாக இருந்தார். ஆனால், அந்த காவல்துறை துணை கண்காணிப்பாளர் வழக்கறிஞர்களை சமாதானம் செய்யவே FIR போடுவதாக சமாளித்து என் மீது FIR பதிவுச்செய்ய உத்தரவிட்டிருந்தார். அது மட்டுமா? எப்படியும் உயர் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள முன் ஜாமீன் மனுவை அங்குள்ள வழக்கறிஞர்கள் தள்ளுப்படி செய்ய செய்துவிடுவார்கள். அப்படி தள்ளுபடி செய்த அடுத்த கனம் நான் தப்பித்து விடாதபடி கைது செய்து வரும்படி ஒரு உதவி ஆய்வாளர் இரண்டு தலைமை காவலர்கள் மற்றும் சில காவலர்களை நியமித்து ஒரு பெரிய காவல்துறை வாகனத்தில் நீலகிரி மாவட்டத்திலிருந்து சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி இருந்தார். சென்னைக்கு வந்த அந்த உதவி ஆய்வாளர் என்னை தொலைப்பேசியில் அழைத்து அவர்கள் வந்துள்ள விபரத்தை கூறினார். அதோடு ஆறுதலையும் கூறினார். இது உங்களுக்கு எதிரான என்று சொல்வதை காட்டிலும் தர்மத்திற்கெதிரான மிக பெரிய சவால். ‘‘நீங்கள் எப்படியும் வெற்றிப்பெற வேண்டும் பணம் இல்லை என்றால் கூறுங்கள் நாங்கள் உதவுகின்றோம்’’ என்று கூறினார். அவர் பேசியது எனக்கு ஆறுதல் அளித்தாலும் எனது அனுபவங்கள் நான் காவல் துறையை நம்ப அனுமதிக்கவில்லை.

என் நிலை இப்போது உங்களுக்கு புரிந்திருக்கும் என்று நம்புகின்றேன். செய்யாத குற்றத்திற்காக பசியோடும், பட்டினியோடும் நான் ஒரு புறம், என்னை கைது செய்யும் வரை ஓயப்போவதில்லை என்று வழக்கறிஞர்களின் போராட்டம் ஒரு புறம், உயர் நீதிமன்றத்தில் எந்த வழக்கறிஞரும் எனக்காக வாதாட மறுத்து அனைவரும் எதிரணியில் திரண்டு எனது நியாயத்தை பேசக் கூட விடாமல் என்னை சிறைக்கு அனுப்ப போராடுவது ஒரு புறம், அனைத்திற்கும் மகுடம் சூட்டினாற்போல கைவிலங்கோடும், வாகனத்தோடும் எனக்காக காத்திருக்கும் காவல் துறை ஒருப்புறம்.

இந்த சூழ்நிலையில் ஐந்து நாட்களுக்குப்பின் நீதிமன்றத்தின் வழக்கு பட்டியலைப் பார்த்தால் எனது வழக்கு பட்டியலில் இல்லை. அன்று அந்த வழக்கை விசாரணைக்கு மீண்டும் கொண்டு வர நான் பட்ட பாட்டை தனி புத்தகமாக எழுதலாம். எப்படியோ, மதியத்திற்கு மேல் சிறப்புப் பட்டியலில் எனது வழக்கு விசாரணைக்கு வந்தது. மீண்டும் முதல் நாளில் நடந்த அதே நிலைதான். நான் 198 வழக்குகளை நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞரை போல் தாக்கல் செய்துள்ளதாகவும், என்னை தொடர்ந்து வழக்கு நடத்த அனுமதிக்கக் கூடாது என்றும் எதிர்தரப்பு வாக்கறிஞர்களின் கூட்டம் வாதிட்டது. அந்த 198 வழக்குகளின் விபர பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு எனக்கு நீதிபதி உத்தரவிட்டு மீண்டும் எனது மனு இரண்டு நாட்கள் கழித்து தள்ளி வைத்தார். இரண்டு நாள் கழித்து மீண்டும் 4 நாட்கள் தள்ளி வைக்கப்பட்டது. அதன்பிறகு மீண்டும் இரண்டு நாட்கள் தள்ளி வைக்கப்பட்டது. மீண்டும் அதிகப்படியாக ஒரு வாரம் தள்ளி வைக்கப்பட்டது. இன்னும் இரண்டு நாட்களில் உயர்நீதிமன்றத்திற்கு ஒரு மாத கோடை விடுமுறை ஆரம்பிக்க இருந்தது. அதற்குள் எனக்கு முன் ஜாமீன் கிடைக்க வில்லை என்றால் அதன் பின்பு ஒரு மாதம் வரை எனது மனுவை யாரும் விசாரித்து தீர்ப்பளிக்க மாட்டார்கள்.

இப்போதே மேலே சொன்ன அந்த DSP “உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலிருந்தாலும் பரவாயில்லை அவனை கைதுச் செய்து வாருங்கள், அவனது மனு தானே நிராகரிக்கப்பட்டு விடும்'' என்று என்னை கைதுச் செய்ய வந்துள்ள காவல்துறையினருக்கு ஆணையிட்டுள்ளது தெரிந்தது. ஆனால், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் வரை என்னை கைதுச் செய்யக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளதாக தெரிந்தது. இந்த சூழ்நிலையில் காவல்துறையில் ஓரளவு மனசாட்சியுள்ள அதிகாரிகளையும், மிருகதன்மை கொண்டவர்களையும் ஒரே நேரத்தில் பார்க்க முடிந்தது என்று சொல்லலாம். மேலும் ஒரு மாதம் எனது மனு மீதான விசாரணை தள்ளிப்போனால் நான் கைதுச் செய்யப்படுவது உறுதி. எனது இத்தனை முயற்சியும் வீணாகும், அதர்மம் வெற்றி பெறும். சென்னையில் தங்கவதால் ஏற்படும் ஒருநாள் செலவையே சமாளிக்க முடியாத நான் 20 நாட்களுக்கு மேலாக சென்னையில் திணறி கொண்டிருந்தேன். அதையும் நான் இங்கு எழுதினால் ஈரமுள்ள இதயம் வெடித்து சிதறிவிடும். ஆனால், ஒரு நாள் கூட யாராலும் நான் சாப்பிடவில்லை, பணமின்றி கஸ்டப்படுகிறேன் என்று கண்டு பிடித்ததாக எனக்கு தெரியவில்லை. என் இதயம் ஆறாத ரணத்தால் துடித்துக் கொண்டிருந்தாலும் எனது கம்பீரத்தை நான் சிறிதும் குறைத்துக்கொள்ளவில்லை. அதற்கு அந்த ஆண்டவன் அருளும், நல்லோரின் ஆசியும் என்னை வழி நடத்தியதாகவே நான் இன்றும் உணர்கின்றேன்.

26. <u>ரணம்-26– கடைசியில் எனக்காக போராடிய ஒரு வழக்கறிஞரும், நிபந்தனையுடன் வழங்கப்பட்ட முன்ஜாமீனும்!</u>

எனது முன் ஜாமீன் மனு மீதான விசாரணை ஏறக்குறைய முடிந்து விட்டது. எனது எழுத்துப்பூர்வமான வாதத்தையும் நான் சமர்பித்து விட்டேன். ''இனிமேல் வழக்கறிஞர்களுக்காக போடப்பட்டுள்ள மேஜை நாற்காலிகளை பயன்படுத்த மாட்டேன், வழக்கறிஞர்களுக்கு நீதிமன்றத்திலுள்ள அதே உரிமையை நானும் கோர மாட்டேன்'' என்று எழுதிதருமாறு உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டிருந்தார். அதையும் எழுதி கொடுத்து விட்டேன். ஆனால், முன்ஜாமீன் கிடைக்கவில்லை. நான் யோசித்தேன், இனி இந்த வழக்கை நான் நடத்தினால் எனக்கு நியாயம் கிடைக்காது. யாரேனும் ஒரு வழக்கறிஞர் கன்டிப்பாக எனக்காக வாதாட வேண்டும் என்று மிக தெளிவாக தெரிந்து விட்டது. ஆனால், எனக்காக வாதாட யாரும் முன் வரவில்லையே! இந்த வழக்கறிஞர்களை எல்லாம் பகைத்துக் கொண்டு ஒரு வாக்கறிஞர் எனக்காகவும், தர்மத்திற்காகவும் வாதாடுவதென்பது சாத்தியமில்லை என்று தெரிந்துக் கொண்டேன். அப்போதுதான் எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய தந்தையும், மூத்த வழக்கறிஞருமான தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த அய்யா புலமை வேங்கடாசலம் அவர்களை தொடர்புக் கொண்டேன். விவரத்தை கூறினேன். நான் எதிர்பார்க்கவேயில்லை அவர் ''நானிருக்கின்றேன் சென்னை வந்து உங்களுக்காக வாதாடுகிறேன்'' என்று வாக்களித்தார்.

ஆனால், அவர் வந்து தங்குவது உள்ளிட்ட அவருக்கு தேவையான ஏற்பாடுகளை செய்ய என்னிடம் சுத்தமாக பணம் இல்லை. எனது மனைவிக்கு தொலைபேசி மூலம் தகவல் கூறினேன். அவர் இறந்த என் தந்தையின் மோதிரத்தை அடமானம் வைத்து பணம் புரட்டி கோயம்புத்தூர் வரை எடுத்து வந்தார். நான் சென்னையிலிருந்து புறப்பட்டு கோயம்புத்தூர் சென்று பல நாட்களுக்குப்பின் என் மனைவியை பார்த்தேன். என்னைப் பார்த்தவுடன் என் மனைவியின் கண்கள் கலங்கியது. ஆனால், அப்போதும் அவர் எனக்கு துணிவையும், தன்னம்பிக்கையும் ஊட்டினார். அது கடவுள் தந்த வரம். அவர் கொண்டு வந்த பணத்தை வாங்கி கொண்டு அவரை திருப்பி அனுப்பி விட்டு நான் உடனே சென்னைக்கு திரும்பினேன்.

எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய தந்தையும், மூத்த வழக்கறிஞருமான அய்யா புலமை வேங்கடாசலம் அவர்கள் தங்குவதற்கு என்னாலான எளிமையான தங்கும் அறையை ஏற்பாடு செய்திருந்தேன். அவர் தங்கும் அறையை கவனிக்கவில்லை, மாறாக எனது வழக்கில் வாதாட விடிய விடிய தயார் செய்துக்கொண்டிருந்தார். அறைக்குறை ஆங்கில வார்த்தைகளை கேட்டுக்கேட்டு சலித்துப்போயிருந்தன சென்னை உயர்நீதிமன்றத்தில் எனது தந்தையும், மூத்த வழக்கறிஞருமான அய்யா புலமை வேங்கடாசலம் அவர்களின் ''மாண்பு மிகு நீதியரசர் அவர்களே'' என்ற கணீர் தமிழ் குரல் அந்த நீதிமன்ற அறையில் அசாத்தியமான நிசப்தத்தை ஏற்படுத்தியது. உடனே நீதிபதி ''இது உயர் நீதிமன்றம், நீங்கள் தமிழில் பேச முடியாது என்றார்'' அடுத்த கனமே ஆங்கிலத்தில் எனது வழக்கை எடுத்துரைத்தார். அவரை கூட எதிர் தரப்பில் கூடியிருந்த வழக்கறிஞர்கள் பேச விடாமல் கூச்சலிட்டனர். அன்றும் எனது மனு மீது தீர்ப்புச் சொல்லப்படவில்லை. மனு விசாரணையை அடுத்த நாள் ஒத்தி வைத்தனர். வெளியில் வந்த எனது தந்தையும், மூத்த வழக்கறிஞருமான அய்யா புலமை வேங்கடாசலம் அவர்கள் முகம் இறுகி காணப்பட்டார். நான் கேட்டப் போது ''நீதி எல்லாம் செத்து போச்சி சார், என்ன சார் இப்படி அநியாயம் செய்றாங்க, எனது அனுபவத்தில் இப்படியொரு வழக்கைப் பார்த்ததில்லை. இன்று நீதிமன்றத்தில் நடந்தவை என்னை மிகவும் பாதித்து விட்டது'' என்றும், ''உங்களுக்கு முன்ஜாமீன் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்'' என்று மிகுந்த வருத்தத்தோடு கூறினார். நான் பரவாயில்லை சார், நடப்பது நடக்கட்டும் அதற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டாம் என்றேன் என்று கூறினேன். அந்த நாள் என்னால் மறக்க முடியவில்லை. நான் நிம்மதியாக தூங்கி பல நாட்கள் ஆகியிருந்தது. அவருக்கு தங்கும் அறை போட்டிருந்ததால் எனக்கும் தூங்க ஒரு வாய்ப்பு கிடைத்தது. நான் நல்ல தூங்கி விட்டேன். நள்ளிரவு நான் கண்விழித்த பார்த்த போது, அவர் தூங்காமல் எழுதிக்கொண்டிருந்தார். வழக்கறிஞர்களில் இப்படியும் ஒரு நபரா என்று ஒரு கனம் அசந்து போனேன். அடுத்த நாள் என்னை நீதிமன்றத்திற்கு வர வேண்டாம் ஒரு வேளை மனு தள்ளுபடி செய்தால் காத்திருக்கும் காவல் துறை உங்களை கைது செய்துவிடுவார்கள். நீங்கள் அறையிலேயே இருங்கள் என்று கூறிவிட்டு அவர் மட்டும் சென்றார். நன்பகல் திரும்பி வந்த அவர் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. எனது மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் என்று நான் யூகித்து கொண்டேன். அவர், உங்களுக்கு முன்ஜாமீன் சில நிபந்தனைகளுடன் கிடைத்து விட்டது என்று சொன்னார். பின்பு ஏன் முகம் வாடியுள்ளது. மகிழ்வான செய்தி தானே என்று கேட்டேன். அவர் கூறியது இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர் சொன்னது என்ன தெரியுமா? ''உங்களுக்கு முன் ஜாமீன் கிடைத்த வகையில் எனக்கு மகிழ்ச்சிதான், ஆனால், வழக்கறிஞர்கள் இந்த அளவிற்கு தரங்கெட்ட வேலையையும், நீதி செத்து விட்டதையும் என்னால்

தாங்கி கொள்ள முடியவில்லை'' என்று கூறினார். இந்த சமுதாயத்தில் இன்னும் நீதிக்காக குரல் கொடுக்க மாமனிதர்கள் இருக்கிறார்கள் என்று அன்று தான் கண்டுகொண்டேன். அவரை என் தந்தைக்கு நிகராக என் மனதில் சிறைப்பிடித்து வைத்துள்ளேன். இவர் எனக்கு எப்படி அறிமுகமானார் என்று நான் கூறியேயாக வேண்டும். அதாவது, நான் எனது அறக்கட்டளையை ஆரம்பித்த காலத்தில் நிறைய சட்டப் புத்தகங்களை படிப்பேன் என்று ஏற்கனவே கூறியிருந்தேன். அப்படி நான் படித்த சட்டப்புத்தகங்களின் தமிழ் மொழிப்பெயர்ப்பு நூல்களையும் நிறைய வாங்கி படிப்பேன். அதில் அய்யா புலமை வேங்கடாசலம் அவர்கள் எழுதிய புத்தகங்கள் ஏராளம். அவர் எழுதிய புத்தகங்களின் முன்னுரை நான் மிகவும் இரசித்து படிப்பேன். பின் புத்தகத்திலிருந்த அவரது செல் எண்ணிற்கு தொடர்புக் கொண்டு பேசினேன். அன்பாகவும், ஆவணமற்ற அவரது பேச்சு என்னை கவர்ந்தது என்றே சொல்லலாம். பின் எனது அறக்கட்டளைப் பற்றி கூறி எனக்கு தேவைப்படும் போது சட்ட ஆலோசனை வழங்குவீர்களா என்றேன். வழங்குவதாக உறுதியளித்தார். அன்று முதல் அவருடன் தொடர்பில்தான் இருந்தேன். ஆனால், அவரை மேலும் புரிந்துக்கொள்ள செய்தது மேற்சொன்ன வழக்குதான்.

எனது முன்ஜாமீனில் விதிக்கப்பட்ட நிபந்தனை என்ன தெரியுமா? ''நான் ஒரு மாதத்திற்கு எனது ஊருக்கு செல்ல கூடாது, எங்கள் ஊரிலுள்ள நீதிமன்றத்தில் எனது வழக்கு இருந்தால் அந்த நாள் தவிர பிற நாட்கள் கோயம்புத்தூரில் தங்கி தினமும் நீதிமன்றத்தில் கையொப்பமிடவேண்டும்.'' அந்த வழக்குகளில் ஆஜராகும் போது எனக்கு பாதுகாப்பு அளிக்க ஒரு உதவி ஆய்வாளரை காவல் துறை பாதுகாப்பு பணியில் நியமித்தது. இது அந்த வழக்கறிஞர்களுக்கு மேலும் எரிச்சலை ஏற்படுத்தியது.

இந்த வழக்கு தொடர்பான முதல்தகவல் அறிக்கை, முன்ஜாமீன் மனு, செய்திதாள் பிரசுரங்கள், உள்ளிட்ட பல ஆவணங்கள் www.neethithurai.com என்ற இணையத்தளத்தில் ''தீர்ப்புச் சொல்லுங்கள்'' என்ற பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. தீர்ப்பு எழுத நினைக்கும் சக்கரவர்த்திகள் யார் வேண்டுமானாலும் இணையத்தளத்தில் படிக்கலாம் மற்றும் இணைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

நீதிமன்றத்திற்குள் வழக்கறிஞர்களை கெட்டவார்த்தையால் திட்டி கொலை செய்து விடுவேன் என்று கத்தியை காட்டி நான் மிரட்டியதாக கூறப்பட்ட அந்தப்புகாரைப்பற்றி தினசரி செய்திதாள்களாலும், நீதிமன்றத்தில் நின்றிருந்த பொதுமக்களாலும் உண்மை நிலவரத்தையும், புகாரின் பின்னணியையும் ஊரே அறிந்திருந்தது. அதுப்பொய்ப்புகார் என்று காவல்துறை மிக மிக தெளிவாக தெரியும். நீதிபதி இந்த புகாரின் பின்னனியை மிக மிக தெளிவாக அறிவார். ஆயினும், காவல்துறை, 10 வழக்கறிஞர்கள் வந்து கூட்டமாக மிரட்டியதாலும், அவர்கள் மேற்கொண்ட நீதிமன்றப் புறகணிப்பு மற்றும் உண்ணாவிரதப்போராட்டத்தாலும் பயந்து போய் கொடுத்த பொய் வாக்குமூலங்களின் அடிப்படையில் புகார் உண்மை என்று நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தது. இந்த குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்த அந்த உதவி ஆய்வாளர் ஆரம்பத்தில், இந்த வழக்கை விசாரிக்கும் பொறுப்பிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட DSP க்கு மனு கொடுத்தார். ஆனால், காவல்துறையில்தான் மனசாட்சிக்கு வேலையில்லையே! பின் இறுதியில் குற்றப்பத்திரிக்கையும் எனக்கெதிராக தாக்கல் செய்தார். ஆனால், என்னிடம் உங்களுக்கு கடவுள் உதவிப்புரிவார். இந்த வழக்கில் நிச்சயம் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்றார். 10 பேர் கூடி நின்றால் ஒரு அப்பாவியின் வாழ்க்கையை சட்டத்தின் துணையுடனே சின்ன பின்னமாக்கி விடலாம் என்றால் இந்த மண்ணில் என்ன தர்மம் இருக்க முடியும்? நீதி எப்படி இருக்க முடியும்? ஆயிரம் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் போனாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட கூடாது என்ற சட்டத்தின் அறிமுக வரிகளும்கூட இங்கு போலியானவைதான் என்று என்னை தெளிய வைத்த வழக்குதான் இந்த வழக்கு.

27. <u>ரணம்-27– வழக்கறிஞர்களுக்காக தினசரி ஒத்திவைக்கப்பட்ட நீதிமன்றமும், காத்து கிடந்த மக்களும்!</u>

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நான் சட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்து வழக்கறிஞராக அதே நீதிமன்றத்தில் ஆஜராக ஆரம்பித்தேன். ஏற்கனவே, நான் எனது அறக்கட்டளை மற்றும் பத்திரிக்கை மூலம் மக்களிடையே நல்ல நம்பிக்கையையும் அன்பையும் பெற்றிருந்தேன். இதனால், என்னிடம் நிறைய மக்கள் வழக்குகளை கொடுக்க ஆரம்பித்தார்கள். என்னை வழக்கறிஞராக ஏற்றுக்கொள்ள மனமில்லாத அப்பகுதி வழக்கறிஞர்கள் எனக்கெதிராக விவாதிக்க அவர்களின் சங்கத்தை கூட்டுவதும், என்னை வழக்குகள் நடத்த அனுமதிக்கக் கூடாது என்று நீதிபதியிடம் முறையிடுவதையும் வாடிக்கையாக கொண்டு செயல்பட ஆரம்பித்தனர். நான் நீதிமன்றத்திற்கு வரும் நாளெல்லாம் நீதிமன்றம் 11.30 அல்லது 12 மணிக்குதான் ஆரம்பம் ஆகும். அவர்கள் நீதிபதியிடம் சங்கக்கூட்டம் இருப்பதாக கூறிவிட்டு செல்வர். அவர்கள் கூட்டம் முடித்து வரும் வரை நீதிபதி நீதிமன்றத்தில் அமராமல் காத்துகிடப்பார். பொது மக்களும் விதியே என்று நீதிமன்ற வாயிலில் தவமிருப்பர். கடைசியாக மீண்டும் அந்த வழக்கறிஞர்கள் அடுத்த கட்டத்திற்கு சென்றனர். நான் அரசு பணிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், என்மீது குற்ற வழக்குகள் நிலுவையிலுள்ளதாலும் நான் வழக்கறிஞராக பதிவுச்செய்தது செல்லாது என்று பார்கவுன்சிலில் அவர்களின் சங்கத்தின் சார்பில் புகார் அளித்தனர். சில போலி ஆவணங்களையும் தாக்கல் செய்தனர். அந்த ஆவணங்கள் போலியானவை என்பதையும், கூறிய குற்றச்சாட்டுகள் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்பதால் அவர்கள் புகார் பரிசீலிக்கவேப்படவில்லை. அதற்காக அந்த வழக்கறிஞர் செய்த செலவுகள்தான் ஏராளம். பல வழக்கறிஞர்களுக்கு இதில் உடன்பாடில்லை என்பது அவர்கள் எனக்கு செய்த மறைமுகமான உதவிகளும், அறிவுரைகளுமே ஆதாரமாகும். ஆனால், அவர்களால், வெளிப்படையாக எனக்காக வாதாடவோ, உதவவோ முடியாத நிலை.

28. <u>ரணம்-28– ஒரு நீதிபதியின் அறிவுரை!</u>

பொதுமக்கள் நீதிமன்றத்திற்குள் அனுமதியில்லை!, தனது வழக்கில் தானே வாதாடினால் நீதிமன்றத்தின் ஏதாவது ஒரு மூலையில் நின்றுதான் வாதாட வேண்டும் போன்ற ஒப்பில்லா உத்தரவுகளை பிறப்பித்த அந்த நீதிபதி என்னை ஒரு முறை அவரது தனி அறைக்கு அழைத்தார். எனக்கு நீண்ட நேரம் பல அறிவுரைகளை கூறினார். நான் கொடுத்த மூன்று புகார்கள் தனக்கு மிக பெரிய சவால்கள் என்றும், அவற்றின்

மீது தான் நடவடிக்கை எடுத்தால் தான் மிக பெரிய இன்னல்களை வாக்கறிஞர்களால் சந்திக்க வேண்டி வரும் என்றும், நான் சட்ட விழிப்புணர்வு என்ற பெயரில் வழக்கறிஞர்களின் வயிற்றில் அடிக்க முயற்சிப்பதாகவும், அதை எல்லாம் நிறுத்தி கொள்ளுமாறும் எனக்கு அறிவுரை வழங்கினார். ''வயிற்றில் அடித்தால் யார்தான் சும்மா இருப்பார்கள்? நீயும் சட்டப்படிப்பு படித்துக் கொண்டிருக்கிறாய், முடித்து விட்டு ஒரு வழக்கறிஞராக வந்து பணிப்புரிந்து பார், அப்போது உன் எண்ணமும் சுருங்கிவிடும்'' என்றார். அனைத்தையும் மிக பொறுமையாக கேட்ட நான் ''ஐயா, நான் எந்த தவறும் செய்ய வில்லை, நான் நீதிமன்றத்தில் கத்தியை காட்டி மிரட்டினேன் என்று பொய் புகார் கொடுத்துள்ளார்கள் என்பது தங்களுக்கு நன்கு தெரிந்திருந்தும், தாங்கள் ஒரு நீதிபதியாக என்னை காப்பாற்ற ஒரு சிறு முயற்சி கூட எடுக்க வில்லையே'' என்றேன். அதற்கு அவர் அழகாக விளக்கம் அளித்தார். '' நீதிமன்றத்திற்குள் எது நடந்தாலும் சட்டப்படி நான் தான் புகார் அளிக்க வேண்டும், வழக்கறிஞர்கள் என்னிடம் வந்து என்னை புகார் அளிக்க சொன்னார்கள். அப்படியொருப் பொய்புகார் கொடுக்க எனது மனசாட்சி இடம் தராததால்தான் நான் முடியாது என்று மறுத்துவிட்டேன். அதன்பிறகுதான் அவர்களே அந்த புகாரை கொடுத்தார்கள்'' என்றார். ''இது நியாயமா? நான் நீதிமன்றத்தின் மீது அளவிற்கு மீறிய நம்பிக்கையோடு வந்தேன். இன்று நீதிமன்றத்தில் நடக்கும் அதர்மத்தின் உச்சத்தை கண்டு விழிப்பிதுங்கி நிற்கின்றேன் என்றேன். அவர் ''ஒரு ஊர் நன்றாக இருக்க வேண்டும் என்றால், ஒருவனை பலிக்கொடுப்பது தவறில்லை, அதுவே ஒரு நாடு நன்றாக இருக்க ஒரு கிராமத்தை அழிப்பதும் தவறில்லை'' என்றார்.

இந்த ஜனநாயக நாட்டின் சக்கரவர்த்திகளே! அந்த நீதிபதி கூறியது சரிதான் ஆனால் ஒரு விசயத்தை கவனிக்க வேண்டுகிறேன். என் உயிரை விட நான் சித்தமாக இருக்கிறேன்! என்னை நீங்கள் அனைவரும் சேர்ந்து எப்படி எல்லாம் கொடுமைப்படுத்தி கொல்ல முடியுமோ? கொன்று விடுங்கள்! அந்த மரணம் இனி வரலாறு காணாத கொடுமையான மரணமாக இருந்தாலும் நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால், அதற்குப்பின் இந்த நாட்டில் நீதிப்பரிபாலனம் நிகரற்றதாக விளங்க வேண்டும். எந்த ஒரு அப்பாவியும் ஒரு வினாடிக் கூட அநியாயமாக தண்டிக்கப்படக் கூடாது. உடனடியாக நீதி கிடைக்க வேண்டும்! இப்போது நான்தான் அதற்கு தடையாக உள்ளேன் என்றால் அந்த நீதிபதி கூறியது போல இந்த சமுதாயமே மகிழ்ச்சியாய் வாழ என் ஒருவனை பலி கொடுப்பதில் தவறில்லைதான்! நீங்களே தீர்ப்பெழுதுங்கள்!

நான் வழக்கறிஞர்கள் மீது கொடுத்த புகார்களை காவல் துறையும் விசாரிக்க தயங்குகிறது, நீதிமன்றமும் தயங்குகிறது. அந்த நீதிமன்றத்தில் வழக்குகளை நடத்தும் வழக்கறிஞர்கள் தொடர்பான வழக்குகளை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு மாவட்ட முதண்மை நீதிபதிக்கு கடிதம் எழுதினார். அதன்மூலம், நீதிபதிகள் வழக்கறிஞர்களை மீறி சுதந்திரமாக வழக்கு நடத்த முடியாத நிலையில்தான் உள்ளார்கள் என்பது தெரிந்துவிட்டது.

நீதிமன்றத்தில் சமர்பித்த ஆவணத்தை காணவில்லை! கொடுத்த புகார் 6 வருடங்களுக்கு மேல் கேட்பாரின்றி நீதிமன்றத்தில் கிடக்கிறது.

எந்த அதிகாரிக்கெதிராக புகார் அளிக்கின்றோமோ, அந்த அதிகாரியிடமே அந்த புகாரை அனுப்பி விசாரிக்க சொல்லும் விவேகமற்ற நீதிநடைமுறை.

தகவல் அறியும் உரிமை ஆணையம் இருப்பதே வீண் என்றாகிவிட்டது. அபராதம் விதிக்க தயங்குகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் நான் மனுக்கள் போட்டு போட்டு ஓய்ந்து போய்விட்டேன். இந்திய குடியரசு தலைவரே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை முறையாக கடைப்பிடிக்க முடியவில்லை. 06.09.2009-ல் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் ஒரு மனுவை இந்திய குடியரசு தலைவருக்கு அனுப்பினேன். அந்த மனு பல மாதங்களுக்குப்பின் தமிழக அரசு தலைமை செயலாளருக்கு அனுப்பப்பட்டது, அவர் உயர்நீதிமன்ற பதிவாளருக்கு அனுப்புனார், உயர்நீதிமன்ற பதிவாளர் தமிழக பார் கவுன்சிலுக்கு அனுப்பினார். அதன் ஒரு பகுதி தமிழக பள்ளி கல்வித்துறைக்கு அனுப்பப்பட்டது. ஆனால், இந்த நாள் வரை எனது மனு யாருக்கெல்லாம் மாற்றப்பட்டது என்ற தகவலை தவிர நான் கேட்ட எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இப்படி எல்லா நீதிமன்றங்களிலும், அமைப்புகளிலும், அதிகாரிகளிடமும் முட்டி மோதி முழுவதும் இழந்தப்பின்புதான் இந்த நாட்டில் நீதியேயில்லை என்ற அற்ப விசயத்தை உணர்ந்து கொண்டேன்.

நான் இங்கு குறிப்பிட்டது மிக சொற்பமான, ஆதாரப்பூர்வமான உண்மைகளை மட்டும்தான், என்னால் ஆதாரம் தர முடியாத ஆனால், சத்தியமானவை இன்னும் ஏராளமாக உள்ளது. நான் இந்த நாட்டின் நிலை கண்டு ஆடிப்போயிருக்கின்றேன். நான், நீதித்துறையே எல்லாவற்றிக்கும் காரணம் என்று கூறுவதை நீங்கள் தவறாக புரிந்துக் கொள்ள கூடாது. நீதித்துறை என்பது வெறும் நீதிபதிகளை மட்டும் குறிக்கும் சொல் அல்ல. நீதித்துறை என்ற ஒற்றை சொல் செயல்பட வேண்டுமானால் பல காரணிகள் தேவை. குறிப்பாக, சட்டம் இயற்ற நாம் அதிகாரமளித்து அனுப்பும் பாராளுமன்ற, சட்ட மன்ற பிரதிநிதிகள், நீதியை நிலைநாட்ட உதவிக்காக அமைக்கப்பட்ட காவல்துறை, வழக்கை தாக்கல் செய்யும் நீங்கள் மற்றும் நான், வழக்கறிஞர்கள், நீதிமன்றத்தில் பணிப்புரியும் கடைநிலை ஊழியர் வரை அனைவரும் சேர்ந்ததுதான் நீதித்துறை. இதில் ஒவ்வொரு பிரிவினரும் அவர்களால் முடிந்தளவு தன் சுயநலத்திற்காக அதர்மம் என்ற விஷ ஊசியை நீதிதேவதைக்கு போட்டு போட்டு, நீதி தேவதை இன்று 90% பித்து பிடிதாற்போல ''அதர்மமே நீதி'' என்று தீர்ப்பெழுதும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டாள்.

''காலம் காலமாக இந்த மனித இனம் மாண்பு பெற வகுக்கப்பட்ட நீதிகள் எல்லாம் அதர்மமானவை, அதை பின்பற்றினால் சந்தோசமாக வாழ முடியாது! அக்கிரமத்தையும், அராஜகத்தையும் எந்தளவிற்கு புத்திசாலிதனமாக செய்கிறீர்களோ அந்தளவிற்கே நீங்கள் காப்பாற்ற படுவீர்கள்'' என்ற பாடத்தைதான் இன்றைய நீதித்துறைக் கற்பித்து கொண்டிருக்கிறது.